Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24
ரூபா 15/00
දිනමුරසු වාරමලර් ஆக.10-16, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 523

## பிரம்பைக் கையில் எடுக்குமா கண்காணிப்புக் குழு?

## அதிருப்தி அமைச்சர்களின் பட்டியல்!

## தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயம்



## அஜித்தின் புதிய பயணம்

## இந்துவாகி வாழ்வுதனில் சிறப்படைவோம்

# ஆன்மீகம்



ஒவ்வொரு மனிதனும் இந்துவாக தினமும் திருக் கோவிலைத் தரிசிக்கும் பழக்கத்தை வரவழைத்துக் கொண்டாலே போதுமானது. நாம் திருக்கோவிலைத் தரிசனம் செய்ய வெண்டும்.

நீராடி, தோய்த்து சுத்தமான ஆடைகளை அணிந்து நாம் சுத்தமாகவும், மாமிச உணவுகளைத் தவிர்த்துத் திருக்கோவிலுக்குச் செல்ல வேண்டும். தெய்வ வாகனங் களை வணங்கும்போது நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன் பாக வாழவும், அமைதியான சூழலில் தெய்வத்தை தரிசிக்கும்போது நாம் மன அமைதியைப் பெற்று பொறுமையுடன் வாழவும், தெய்வ வணக்கத்தின் மூலம் இறை நம்பிக்கையையும் அதன் மூலம் பொறாமை, களவு, தவறான செயல்கள் என்பவற்றில் இருந்து விடுபட்டு வாழவும் பழகிக்கொள்ள முடியும்.

ஆகவே நாம் இந்துவாக திருக்கோவிலுக்குத் தினமும் சென்று, இந்து தர்மத்தின் வழியே நின்று வழிபடுவோமாயின் நாமும் பிறருக்கு இறைவனாகத் தென்படுவோம்.

தி. துரையன், கலஹா.

## உபத்திரவம் நல்லது!

நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதனால் பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன். (சங் 119:71).

தாவீது ராஜா "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது" என்று சொன்ன சங்கீதத்திற்குள் ஒரு மாபெரும் சக்தி மறைந்திருக்கிறது. அந்த உபத்திரவத்திற்குள் ஒரு விசேட ஆசீர்வாதம் எவருக்கும் தெரியாது ஒளிந்துள்ளது. அது என்ன வென்று தேடும்போது தெரிய வரும். அது கர்த்தருடைய மேன்மைகளைத் தெரிந்துகொள்ளக் கூடிய ஆசீர்வாதமாகும்.

உபத்திரவத்தை எவரும் விரும்புவதில்லை. உபத்திரவம் என்பது ஒரு மனிதனுடைய உள்ளத்தைக் கண்ணாடியைப் போல நொருங்கச் செய்யக் கூடியதாகும். இதனால் மனிதன் சோர்வடைகின்றான். நோய்கள், வறுமை, சந்துருக்களால் வரும் நிந்தைகள், அவமானங்கள், பரிகாசப் பேச்சுக்கள், பழிச் சொற்கள், கடன் தொல்லைகள் இவைகளெல்லாம் மனிதனுக்கு உபத்திரவங்களாய் அமைகின்றன. இப்படியிருந்தும் "உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது" என்று சொல்கிறார் தாவீது ராஜா. எப்படி அது நல்லதென்று கூற முடியும்? உபத்திரவத்திலும் ஆசீர்வாதம் உண்டென்பதை எப்படியறிவது?

ஒரு நிமிடம் இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் எமக்காக எவ்வளவு உபத்திரவப் பட்டார்! சிலுவையில் ஆணி வைத்து அறையப்பட்டார். சவுக்கடி வழங்கப்பட்டது. தலையில் முள் வளையம் சூட்டப்பட்டது. வீதியில் இழுத்துச் செல்லப்பட்டார். உறவுக்காரர்களின் அவ மானப் பேச்சுக்களால் வஞ்சிக்கப்பட்டார்.

பரபாசை விடுதலை செய்யவும், இயேசுவை சிலுவையில் அறையவும் மக்கள் கூக் குரலிட்டுச் சத்தமிட்டார்கள். பல வகையிலும் கிறிஸ்துவுக்கு உபத்திரவம்தான். "அது கர்த் தராலேயே ஆயிற்று! அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது."(சங் 118:23)

புஷ்பராஜு, சிலாபம்.

## வுழூவின் சிறப்பு

வுழூ என்பது வணக்கம். அது நான்கு வெளி உறுப் புக்களோடும், உள்ளத்தோடும் சம்பந்தப்படுகிறது. அது கிதாப் சுன்னத், இஜ்மா.'. ஆகியவற்றால் சட்டமாக்கப்படு கிறது.

வுழூவின் சிறப்புப் பற்றிய ஹதீஸ்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப் பிடுகின்றோம்.

தெய்வ பக்தன் ஒருவன் வுழூவின்போது வாய் அலம்புகிறான். அவன் பாவங்கள் வாய் வழியாக வெளி யேறிவிடுகின்றன. மூக்கைச் சிந்துகின்றான். பாவங்கள் மூக்கின் வழியாக வெளியேறுகின்றன. முகத்தைக் கழு வும்போது முகத்தின் பாவங்கள் விழி வழியாக வெளியேறு கின்றன. கைகளைக் கழுவும்போது அவற்றின் பாவங்கள் நகம் வழியாக வெளியேறுகின்றன. தலையை நீரினால் தடவும்போது அதனுடைய பாவங்கள் காதுகள் வழியாக வெளியேறுகின்றன. மஸ்ஜிதை நோக்கி அவன் செல்வதும் அங்கே அவன் தொழுவதும் அதிக இலாபமாகிவிடு கின்றன. அறிவிப்பு அப்துல்லா சுனாபஜீ (ரலி)

அலாவுடீன் ஏ.எஸ்.ஏ.பாபு, திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.520


### பரிசுக்குரிய கவிதை

### நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்...!

இயக்கப் படுகொலைகளை
நிறுத்துங்கள்
இனவாதப் பேச்சுக்களை
நிறுத்துங்கள்
புரிந்துணர்வு மீறல்களை
நிறுத்துங்கள்
பொது நன்மையில் சுயலாபம்
தேடுதலை நிறுத்துங்கள்
சமாதானம் பேசிப் பேசி ஆயுதம்
வாங்குவதை நிறுத்துங்கள்
சமாதானப் புறாவைத் தடை செய்யும்
சகலதையும் நிறுத்துங்கள்

சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்




**பாதுகாருங்கள்!**

பாதையிற்
பயணம் செய்வோர்
பாடையிற்
பிணமாய்ப் போவார்
பாவம்
பாதுகாப்பு வீரர்
பாதை நடுவில்
பஸ் சாரதிகளே
பாதுகாருங்கள்!

எஸ்.ஐ.சிதாரா 'கலை மேகம்', மூதூர்–07.

**உண்மை**

விடைபெற்ற யுத்தத்துக்கு
விமர்சனக் காட்டுன் நீயோ.
சமாதானத்திலும் சாகடிக்கப்படும்
உயிரை காக்கும் சமிக்ஞையும் நீயோ.
யுத்தம் பெற்ற சமாதானம்
சாத்தியமாகும் என்பதால்
விஷமிகளுக்கு விடை கூறுகிறாயோ.

எம்.ஐ.ராஜன், கிண்ணியா – 03.

**போர் இனி வேண்டாம்!**

போரினால் சோர்ந்து விட்ட
போர் வீரர் போதுமிந்தப் போரினி
வேண்டாமென பொறுமையுடன்
காட்டுகிறார் இங்கே STOP!

திலகேஸ் சிவஞானம், டிக்கோயா.

**STOP**

அமைதி வழி வருமுன்னர்
வழி எல்லாம் - STOP
புதிய மாற்றத்தால் இப்போ
STOP எல்லாம் STOP!

க.மலர்ராஜன், திருகோணமலை.

**முன் எச்சரிக்கை**

வெள்ளம் வரும் முன்னே
அணை கட்ட வேண்டும்!
யுத்தம் வெடிக்கும் முன்
பாதுகாப்பை பலப்படுத்த
வேண்டும்!
தற்கொலையாளி புகுமுன்
தடுத்து நிறுத்த வேண்டும்!
என்ற முன் எச்சரிக்கை!

ரா.தமிழ்வாணன், இரத்தினபுரி.

**நிறுத்து!...நட!... இரு!...எழும்பு!...**

ஆயுதம் ஏந்தியவர்களின்,
அடக்குமுறை அட்டகாசத்திற்கு
அடங்கி நடப்பதுதான்...
அமைதியை நாடும் மக்களின்
அன்றாட வாழ்க்கையாகிவிட்டது...

எஸ்.பஹுர்தீன், கல்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.523



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.08.2003

கவிதைப் போட்டி இல.523
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

**வேண்டாம் (STOP)**

இராணுவத்தில் நான் இருந்து
இரத்தத்தை நான் சிந்தி
இருந்த காலம் போதும்
இனியும் வேண்டாம்
இவ்வாறான உயிர்களின்
மேலான யுத்தம்.

சுனநாதன் கிருஷ்ணகுமார், டிக்கோயா.

**நிறுத்துவோம்**

போரினை நிறுத்து
தமிழ் வேர் அழிவை நிறுத்து
படுகொலைகளை நிறுத்து
பச்சிளம் பிஞ்சின் அழிவை நிறுத்து
இதுவே 'கலிங்கமும்' 'ஈராக்கும்'
கற்றுத் தந்தது ஆகவே
ஆயுதம் ஏந்துவதை நிறுத்து
காகிதம் ஏந்துவதை
நிலை நிறுத்து.

த. தேவநேசன், திருகோணமலை.

**வழி விடு...**

என்ன தான் நடந்தாலும்
உன் கடமையை செய்வதில்
உறுதியாக இருக்கின்றாயா?
ஆனால் நாங்கள்...
செக் பொயின்ட்
செக் பொயின்ட் என்று
செத்துப் பிழைப்பது
எத்தனை நாளைக்கு...
இனியாவது வழி விடு
நாங்கள் விடை பெற.

த.சுாந்தரூபன், அக்கரைப்பற்று.

**எப்பொழுது?**

STOP காட்டி
சமாதான வாகனத்தை
நடுவழியில்
நிறுத்திவிட்டவர்கள்
இனி எப்பொழுது
GO காட்டப்
போகிறார்கள்?

ஆ.சந்தியாகோ, கண்டி.

# உங்கள் பக்கம்

## மின்சாரமில்லாத கரையோரக் கிராமம்

அம்பாறை மாவட்டத்தில் மின்சாரமில்லாத ஒரேயொரு கிராமம் கோமாரிக் கிராமம். இக் கிராமத்திலிருந்து 7கி.மீ. தொலைவில் உள்ள பொத்துவிலுக்கும் 6கி.மீ. தொலைவில் உள்ள திருக்கோவிலுக்கும் மின்சாரம் கிடைக்கிறது. இங்கு சுமார் 2000 குடும்பங்கள் வாழுகின்றன. மக்கள் மின்சாரம் இல்லாததால் சகல துறைகளி லும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கிறார்கள். மக்கள் பெருஞ் சிரமத்துக்குள்ளாகி வருகின் றார்கள்.

இக் கிராமத்தைச் சுற்றிலும் காடுகளே சூழ்ந்துள்ளன. இதனால் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்த வண்ணமேயுள்ளது. இக் கிராமத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் மின் சாரம் வழங்குவதற்காக முதற் கட்ட நில அளவைப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அந்த வேலைகளும் ஒரு சில தினங்களில் முடங்கிவிட்டது. பல ஊடகங்களிலும் மின் சாரம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டன. இன்னும் அப்படி ஒன்றையும் காணவில்லை. கடந்தப் பொதுத் தேர்தலின் போது வாக்குக் கேட்டு வந்த பிரதிநிதிகள் கூட உடன் மின்சாரம் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். இக் கிராமத்தால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி இக் கிராமத்தின் பக்கம் தலைகாட்டுவதே கிடையாது.

இங்குள்ள வைத்தியசாலைக்கும், பாட சாலைக்கும் இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை யாவும் பாவனையில் லாமல் பழுதடைந்து கிடக்கின்றன. அதிலும் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கணனிகள் எவ்வித பயன்பாடும் இல்லாமலே அறைக்குள் கிடக்கின்றன. அத்துடன் இங்கு அமைக்கப்பட்ட விடுதிகள் யாருமே இல்லாது வெறிச்சோடிக் கிடப்பதனால் கட்டாக்காலிகளின் உறைவிடமாகவே விளங்குகிறது.

இவை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பல அதி காரிகளுக்கு மின்சார வசதி செய்து தருமாறு எத்தனையோ மனுக்கள் கொடுக்கப்பட்டபோதும் அவை எந்த அதிகாரிகளின் கவனத்திலும் எடுக்கப்படுவதாக இதுவரை தெரியவில்லை. இருள் பிடித்து பீதி வாழ்க்கை வாழும் இக் கிராம மக்கள் பாம்புக் கடியாலும், யானைத் தொல்லைகளாலும் மரணத்துக்கு ஆளாகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தின் அனைத்துக் கிரா மங்களும் மின்சார வசதியைப் பெற்றுள்ளபோ திலும் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற கோமாரிக் கிராமம் மட்டும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது ஏன்? இது அரசியல் பழிவாங் கலா......? இல்லை, தமிழர் கிராமம் என்று ஒதுக்கப்பட்டுள்ளதா....? எனப் பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்....

கோ.நாதன், பொத்துவில்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):–074-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

**தினமுரசுக்கு!**

அட்டைப் படங்களில் தொடங்கி கடைசிப் பக்கம் வரை இனிமை... இனிமை...இனிமை! கறுப்பு ஜூலை பற்றிய சிறப்பு ஆய்வுக் கட்டுரை அருமையிலும் அருமை. வாசிக்கும்போது நெஞ்சு பாரமாக கண்கள் கசிந்து இதயம் உள்ளுக் குள்ளேயே அழுதது. உன் ஒவ்வொரு எழுத்தும் வாசிக்கத் தூண்டும் வசியம் பூசப்பட்டிருப்பதாகவே உணர்கிறேன். வசீகரத்தின் அட்சய பாத்திரமே! வாழ்க வளர்க....

என்.சைலஜா, கஹட்டகஸ்திகிலிய.




**அன்பு முரசே!**

எப்போதோ நம்பிக்கையோடு வாழ்த்தினேன். இப்போது அதை நினைத்து மகிழ்கிறேன். அற்புதன் இறந்த பிறகு அத்தனையும் அஸ்தமனம் என்று அழுதேன், புலம்பினேன். ஆனாலும் மீண்டும் புதுப் பொலிவுடன் அண்மைக் காலமாக வந்து அசத்துகிறாய். அசத்தலாகவே அத்தனை பக்கமும் அட்டகாசம்! தொடரட்டும் பணி! குவியட்டும் வாழ்த்துக்கள்! சிகரத்தை நோக்கி முன்னேற வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

கே.தர்ஷினி, திருமலை.

# வாசக[ர்] சாலை

வியாழன் தோறும் செடியில் மலராய்ப் பூத்து எத்தனையோ நெஞ்சங்களைக் கவர்ந்த முரசே! உன்னைப் பார்க்கும் கண்கள் எல்லாம் வாழ்த்துகிறது உன்னை. அனைத்து அம்சங்களையும் ஆழமாய் வெளியிடும் முரசே! இளைய தலைமுறை எம்மில் நீங்காத இடத்தைப் பெற்ற உந்தன் அனைத்து அம்சங்களின் சிறப்பையும் பேனாவால் வடிக்க முடியாது முரசே. அன்பு முரசே! உனக்கு எனது இதயம் கனிந்த பலகோடி வாழ்த்துக்கள்.

தஸ்லீம் நவாஸ், அனுராதபுரம்.

**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,**

இனிய தமிழ் முரசே! உனது ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பாக இருந்தன. நீங்களும் படிக்கலாம் பகுதியில் 'எழுத்தாளர்களின் வாழ்க்கை' தலைப்பில் இடம் பெற்ற ஆக்கம் அருமை. மற்றும் நெஞ்சினில் என்ன காயமோ? உள மருத்துவம் தொடர் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும் துணைவி சிறுகதை நன்றாக இருந்தது. நன்றி.

பாங்களா வாமதேவன்,
தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

உங்கள் பக்கம்
உண்மை சொல்கிறது.
தேன்கிண்ணம்
தித்திப்பூட்டுகிறது.
பாப்பா முரசு பாடம் சொல்லி
என் மனதில் உரசுகின்றது.
வாசகர் சாலை வனப் பூட்டுகிறது.
சிந்திக்கவும்
சிரிக்கவும் வைக்கிறது.
அரசியல் விடயங்கள்
அநியாயங்களை
அம்பலப்படுத்துகின்றது.
அதிரடி அய்யாத்துரை
ஆக்ஷன் ஹீரோவாக நான்
சீரோவாகப் போகிறேன்.
தினமும் என் கனவில்
நீயே வந்து
நிழலாடுகிறாய்.

நபீஸா புஹாரி, அனுராதபுரம்.

# அரசாங்கத்தை அம்பலப்படுத்தும் நோக்கில்

# புலிகள் தயாரிக்கும் இடைக்கால நிர்வாக திருத்த யோசனை!

அரசாங்கம் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக யோசனைக்கு பதிலளிக்கும் வகையில் புலிகளால் அரசுக்கு வழங்கப்பட இருக்கும் திருத்த யோசனையில் அரசியல் அமைப்பு வரையறைகளுக்கு உட்பட்டு அரசாங்கத்தினால் வழங்க முடியாத கடுமையான கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று தெரியவருகிறது.

தற்போது அரசாங்கத்தின் உத்தேச யோசனைகளை ஆராய்ந்து வரும் புலிகள் தங்களது சட்ட நிபுணர்களின் உதவியுடன் தயாரித்து வரும் திருத்த யோசனை அரசாங்கம் அனுப்பிய யோசனைகளில் இருந்து அதிகளவு வித்தியாசப்பட்டிருக்கும் என்று அறியக் கிடைக்கிறது.

அரசாங்கத்தினால் எவ்வகையிலும் வழங்க முடியாத கோரிக்கைகளை இதில் உள்ளடக்குவது குறித்து புலிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் புதுவை இரத்தினதுரையின் உலைக் களம் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய முன்னாள் ஈரோஸ் தலைவரும் புலிகள் இயக்க பிரமுகருமான வே.பாலகுமாரன் தாங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்போகும் இரண்டு பக்க ஆவணத்தில் தமிழ் மக்களின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாறு தலைகீழாக மாறப்போகிறது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இடைக்கால நிர்வாகம் என்று புலிகளுக்கு அரசாங்கம் காலத்திற்குக் காலம் அனுப்பி வைத்த யோசனைகளுக்கு ஒட்டுமொத்த பதிலாக புலிகளின் இந்த திருத்தப்பட்ட தீர்வு யோசனை அமையுமே அன்றி உடனடியாக சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் விதத்தில் யதார்த்தமான அரசியல் பின்னணியைக் கொண்டதாக இருக்காது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலிகள் தரப்பில் இருந்து வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பாலகுமாரன் யாழ்ப்பாண மக்களுக்கு நுண்ணறிவு போதாது என்றும் அவர்கள் அதனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் அரசியல் ஆய்வாளர் என கருதப்படும் மு.திருநாவுக்கரசு "ஒரு விபத்துக்காக காலம் காத்திருக்கிறது" என்று கூறினார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் "எந்த விபத்து நடந்தாலும் யுத்தம் வெடிக்கலாம். இப்படி ஏதாவது நடந்தால் அதற்குச் சிங்கள அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். எதிர்க்கட்சிகளைக் காட்டி எம்மிடம் பூச்சாண்டி காட்டும் ரணில் விக்கிரமசிங்க தற்கொலைப் போராளிகளான மில்லர், திலீபன் போன்றோர் எம்மிடம் இருப்பதை மறந்து விடக் கூடாது. மில்லரும், திலீபனும் காய்ந்துபோன வெடி மருந்துகள் அல்ல. மூளை,முடுக்குகளில் வெடிக்கக் கூடிய வெடி மருந்துகள்" எனவும் எச்சரித்தார். அத்துடன் மக்கள் இப்போது சமாதானத்தை விரும்புகிறார்கள். ஆனால் அரசியல் விளக்கத்தோடு அல்ல. யுத்தத்தால் களைத்துப் போய்விட்டதால் தான். எனினும் மில்லர், திலீபன் போன்றோர் இதற்காகவா என்று கேட்டால் என்ன பதிலைச் சொல்வது எனவும் கேள்வி எழுப்பினார். ■

## அவசர மாகாண சபைத் தேர்தலுக்கு ஆட்தெரிவு முயற்சியில் ஐ.தே.க.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டு அவசர தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதற்கு முகங்கொடுக்கும் நோக்கில் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது கட்சியின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பணியில் ஐ.தே.க. இறங்கியுள்ளது.

இதற்கான நடவடிக்கையை அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு கடந்த வாரம் ஆரம்பித்தது.

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துவதற்கு முன்னதாக இரண்டு மாகாண சபைகளைக் கலைத்து தேர்தல் நடத்த ஜனாதிபதி தீர்மானிக்கலாம் என அரசாங்க வட்டாரங்களில் ஊகம் நிலவுகிறது. வடமேல் மாகாண சபையும் தென் மாகாண சபையும் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரு சபைகளினதும் ஆயுட் காலம் முறையே எதிர்வரும் டிசம்பர், ஜூலை மாதங்களில் முடிவடைகிறது.

இரு சபைகளும் தற்போது பொ.ஐ.மு.வின் நிருவாகத்தின் கீழ்தான் உள்ளன.

ஜே.வி.பி.யுடன் பொ.ஐ.மு.வின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னதாகவே மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் தனது சமாதான முயற்சிகளுக்கு தென்னிலங்கையில் உள்ள ஆதரவை பரீட்சிக்கும் களமாக இத் தேர்தல்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. ■

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதில் குடா நாட்டில் வாழும் அறிவார்ந்த மக்கள் கவலை கொண்டுள்ளனர்

**-ஜெகான் பெரேரா-**

புலிகள் இயக்கம் அதிகாரம் செலுத்தும் இடைக்கால நிர்வாகம் குறித்து யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் கவலை கொண்டிருப்பதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவரும் அரசியல் ஆய்வாளருமான ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

20 வருட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களில் புலிகள் இயக்க உறுப்பினர்களோ ஆதரவாளர்களோ அல்லாதோர், புலிகள் அதிகாரம் செலுத்தும் இடைக்கால நிர்வாக சபை குறித்து பலதரப்பட்ட கவலைகளைக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் இத்தகையதோர் நிர்வாகத்தின் கீழ் புறக்கணிக்கப்படுவோம் என்று இந்த மக்கள் கருதுகின்றனர். உண்மையில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் உள்ள மிகுந்த கலாசார, அரசியல் அறிவார்ந்த மக்களிடமே இந்தக் கருத்து நிலவுகிறது எனவும் ஜெகான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இடைக்கால நிர்வாகம் தொடர்பாக கருத்து தெரிவித்திருக்கும் அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக, இடைக்கால நிர்வாகத்தை வழங்கப் போவது யாரிடம் என்பதை மீளவும் சிந்திக்க வேண்டும் என்று கூறுகிறார்.

ஆயுதங்கள் அற்ற தமிழ் அமைப்பு ஒன்றிடம் இதனை வழங்குவதில் தவறில்லை. சர்வதேச அதிகாரிகளிடம் தங்களது கனரக ஆயுதங்களை முறையாக வழங்கினால் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவதில் கூட தவறில்லை. ஆனால் இந்த நிர்வாக அமைப்பை ஜனநாயக வழிமுறையுடன் உடன்பாடுள்ள ஒரு அமைப்புக்கு அல்லாமல் தங்களது இராணுவம், தற்கொலைப் படை மற்றும் பல படைப் பிரிவுகளைக் கொண்ட பிரிவினைவாத அமைப்புக்கு வழங்குவது என்பது சிந்திக்கப்பட வேண்டும் என அவர் கூறுகிறார். ■

## தீவுப் பகுதியில் புலிகள் உத்தரவு

ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் வீதம் புலிகளின் தலைமையைச் சந்திப்பதற்காக எதிர்வரும் 10ம் திகதி வர வேண்டும் என்று தீவுப் பகுதி மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக 9ம் திகதியே தயாராக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். புலிகளின் தீவக கோட்ட அரசியல்துறையைச் சேர்ந்த அருந்தவம் என்பவர் வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு மக்களின் வீடு வீடாகச் சென்று இதனைத் தெரிவித்து வருகின்றார். ■

## தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களிடம்!

### அமைச்சர் ஆறுமுகன் முயற்சி

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (J.E.D.B), இலங்கை பெருந்தோட்டச் சபை (S.S.P.B) ஆகியவற்றினால் நிருவகிக்கப்படும் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படுவதால் இவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை தொழிலாளர்களிடம் ஒப்படைத்து இலாபகரமாக இயங்கச் செய்யும்படி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யப்போவதாக இ.தொ.கா. எம்.பி. ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

J.E.D.B, S.S.P.B, நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சில தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் வழங்க முடியாத நிலை இருந்தது. நட்டத்தில் இயங்குவதே இதற்குக் காரணம் என்று நிர்வாகிகள் கூறியதைத் தொடர்ந்து தோட்டங்களில் பிரச்சினைகள் எழுந்தமை குறிப்பிடத் தக்கது. ■

## பிரான்ஸா? ஜேர்மனியா? எங்கே விசா கிடைக்குமோ அங்கே புலிகளின் முக்கியஸ்தர்கள் சந்தித்துப் பேச்சு!

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கும் என்று அரச தரப்பு தொடர்ச்சியாகக் கூறிவரும் நிலையில் அடுத்த சுற்றுப் பேச்சுக்கான இடம் குறித்துப் பல்வேறு தகவல்கள் வருகின்றன. கொழும்பில் தங்கியிருக்கும் புலிகளின் முக்கியஸ்தர் புலிதேவன் முதலில் ஏதேனும் ஐரோப்பிய நாடு ஒன்றில் தமது வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்து அரசாங்கம் வழங்கியிருக்கும் யோசனைகள் தொடர்பாக ஆராய ஒழுங்கு செய்யும் முயற்சியில் நோர்வே அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. பிரிட்டன், கனடா என்பன பேச்சுக்களை நடத்த தங்கள் நாடுகளில் இடம் வழங்க மறுத்துவிட்டதாக கூறப்படும் நிலையில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஒன்றில் நடத்தும் முயற்சிகள் நடக்கின்றன.

பாரிஸில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு நடக்கலாம் என்று வெளியான தகவல்களை பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் மறுத்துள்ளதாக செய்தி வெளியிட்டிருக்கும் ஹிந்து பத்திரிகைக்கு அவ்வாறான ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்வதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று அந்த அதிகாரி கூறியதாகவும் தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் அரசாங்கம் இது தொடர்பாகத் தம்மிடம் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியதாக ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கிடையில் ஜேர்மனியில் போ்லின் நகரில் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் திகதி குறித்தோ எத்தகைய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய சுற்று ஆரம்பிக்கும் என்பது குறித்தோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ■

## முஸ்லிம்கள் மீதான இன ஒழிப்பு முயற்சியின் 13வது வருட நினைவாக கிழக்கில் துக்க தினம் அனுஷ்டிப்பு

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் மீதான படுகொலைகள், இன சுத்திகரிப்பு நிகழ்வுகள் இடம்பெற ஆரம்பித்து 13 வருடங்கள் ஆகிவிட்டதை கிழக்கில் முஸ்லிம்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோகத்துடன் நினைவு கூர்ந்தார்கள்.

இதனை முன்னிட்டு அனுஷ்டிக்கப்பட்ட ஒரு நாள் துக்க தினத்தின் போது கிழக்கின் தமிழ், முஸ்லிம் பகுதிகளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகளை நினைவுகூர்ந்து மத அனுஷ்டானங்கள் நடைபெற்றன. இதன் இறுதியில் இனப் பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் அடிப்படை உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கலாக எட்டு அம்சத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல் பிராந்தியங்களுக்கு அல்லாது சமூகங்களுக்கு வழங்கப்பட வேண்டும், வடக்கு - கிழக்கில் நிலத் தொடர்பற்று இருக்கின்ற முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்கள் அனைத்தையும் ஒரே முஸ்லிம் சுயாதீன அலகுக்குள் ஒன்றிணைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் இதன் போது நிறைவேற்றப்பட்டன. ■

## புலி ஆதரவாளர் கொலை!

### முஸ்லிம் அமைப்பொன்றின் மீது பொலிஸார் சந்தேகம்

கடந்த 4ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை மூதூர் கோவில் வீதியில் சுட்டுக்கொல்லப்பட்ட புலிகள் இயக்க ஆதரவாளரான குணம் சுபராஜ் (வயது 27) புலிகள் இயக்கத்துக்காக கப்பம் சேகரிப்பவர் என்றும், இவரது கொலைக்கும் கிழக்கில் செயற்படும் முஸ்லிம் ஆயுதப் பிரிவொன்றுக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். முன்னதாக ஞாயிறன்று மூதூர் ஜின்னா வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட நூர்த்தம்பி அஹமட் ரிஸ்வான் என்ற முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிளின் கொலைக்குப் பழிவாங்கும் முகமாகவே குணம் சுபராஜ் கொல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

ரிஸ்வான் என்பவர் பொலிஸில் பணியாற்றி சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டவர். பின்னர் தேனீர்க் கடை ஒன்றை நடத்தி வந்தார்.

குணம் சுபராஜ் இரவு உறக்கத்திலிருந்தபோது வீட்டு ஜன்னலின் ஊடாக டோச் லைட் ஒன்றின் உதவியுடன் மனைவியும் பிள்ளையும் அருகில் உறங்கிக்கொண்டிருந்த நிலையில் ரி.56 ரக துப்பாக்கியினால் சுடப்பட்டிருக்கிறார். அருகில் இருந்தவர்களுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. கொல்லப்பட்டவரின் உடலில் இரண்டு துப்பாக்கிச் சூடுகள் பாய்ந்திருந்தன. ■

## மணலாறு பகுதியில் புதிய பதுங்கு குழிகள்

மணலாறு பிரதேசத்தில் இராணுவ சூனியப்பகுதியில் புலிகள் பாரிய பதுங்கு குழிகளைப் புதிதாக அமைத்திருக்கிறார்கள். பிரதேசத்தின் முக்கிய இராணுவ முகாமை நெருங்கி வரும் விதத்திலும் விமானத் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கும் வகையிலும் தொடர்ச்சியான முறையில் இந்தப் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த பதுங்கு குழிகளை அவதானிக்க கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்குச் செல்ல உள்ளார்கள். ■

# முரசம்

## சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தத்தில் பேச்சுவார்த்தை முயற்சி

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

பேச்சுவார்த்தைகள் இடை நடுவில் நின்றுபோய் நாட்கள் பல கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. அரசாங்கத்தின் பல ஆலோசனைகள் புலிகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இந் நிலையில் இறுதியாக அரசாங்கம் இடைக்கால நிர்வாக அதிகாரசபை என்ற ஆலோசனைகளைக் கையளித்துள்ளது. அவற்றைப் புலிகள் முன் போல் நிராகரிக்காவிட்டாலும் அதில் பல குறைபாடுகள் உள்ளதாகவும் அவற்றுக்குத் தமது திருத்தங்களை முன்வைக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தனர்.

அரசாங்கத்தின் இரண்டு பக்க ஆவணத்தை வைத்துக்கொண்டு தாம் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றைப் புரட்டிக் காட்டப் போவதாகவும், சிங்கள ஆட்சியாளர்களின் இத்தனைகால ஏமாற்றுக்களையும் உலகின் முன்பாக மிகத் தெளிவாக அரங்கேற்றம் செய்வதற்கு அருமையான வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவும் புலிகளின் பிரமுகர் (முன்னாள் ஈரோஸ் தலைவர்) பாலகுமாரன் கூறியுள்ளதானது, புலிகளின் பதில் தீர்வை நோக்கியதாக அன்றி அரசாங்கத்தை அம்பலப்படுத்தும் நோக்கிலானதாகவே அமையப்போகிறதெனக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

தமிழ் பேசும் மக்களும் சமாதான ஆர்வலர்களும் உலக நாடுகளும் இப் பிரச்சினையைத் தீர்க்கும் மார்க்கம் குறித்த எதிர்பார்ப்போடு காத்திருக்கும்போது நிலைமை அதற்கு நேர்மாறாகச் சென்றுகொண்டிருப்பதாகவே உணர முடிகிறது. இந் நிலைமையை அனுமானித்துக்கொண்டதன் விளைவாகவே தற்போது சர்வதேச நாடுகள் அதிக அளவு அழுத்தம் தர முற்பட்டுள்ளன. ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் யானோ இலங்கை வந்து நேராக யாழ்ப்பாணம் சென்று அவதானித்ததும், புலிகள் பேச்சுவார்த்தைக்கு விரைவில் திரும்ப வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதும் இதனடிப்படையிலேயே.

தற்போது கனடாவும் அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தலைப்பட்டுள்ளது. அமெரிக்க அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் அடுத்ததாக இலங்கைக்கு வந்து நிலைமையை ஆராயவுள்ளார்கள். இதேவேளை புலிகளின் பதில் குறித்த அரசியல் ஆலோசனை பாரிஸில் ஏற்பாடாகியுள்ளது. புலிகளின் பதில் எவ்வாறாக இருந்தபோதிலும் பேச்சுவார்த்தை தொடர வேண்டுமென்ற எண்ணமே சர்வதேச நாடுகளிடையே மேலோங்கியுள்ளது.

புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தாலே முரண்பாடுகளைக் களைய முடியும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் முரண்பாடுகளைக் களைந்தாலே பேச்சுவார்த்தையைத் தொடர முடியும் என்பதாகப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு தொனிக்கிறது.

சர்வதேச நிர்ப்பந்தங்கள் புலிகளை இளக வைக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரம்பைக் கையில் எடுக்குமா கண்காணிப்புக் குழு?

நரன்

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விடயம் தற்போது பலத்த கேள்விகளை முகம் கொடுக்க வேண்டிய கட்டத்துக்குள்ளாகியிருக்கிறது.

இலங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்பட்டது தெரிந்ததே.

இவ் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை இரு தரப்பும் முறையாகக் கடைப்பிடிப்பதை உறுதி செய்யு முகமாகவே இதனைக் கண்காணிப்பதற்கான மூன்றாவது நடுநிலைத் தரப்பாக சர்வதேச கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டது.

இந் நியமனம் கூட இரு தரப்பின் இணக்கத்தின் பேரிலேயே நிகழ்ந்தது.

இரு தரப்பும் இணங்கிய விடயங்கள் நாட்டின் சகல தரப்பினருக்கும், அல்லது குறைந்தது இவ் இனப் பிரச்சினையில் சம்பந்தமுறும் சகல தரப்பினருக்கும் இணக்கமான விடயங்கள் என்று கூற முடியாது.

உதாரணமாக, முஸ்லிம் தரப்பினரிதோ, அல்லது மாற்றுத் தமிழ்க் கட்சிகளைச் சார்ந்தவர்கள் எவரினதோ, இதைவிட ஒட்டுமொத்தமான அரசாங்கம் என்ற வகையில் நாட்டின் ஆட்சி நிர்வாகத்திலிருந்து பிரிக்க முடியாதவரும் நாட்டின் தலைவருமான ஜனாதிபதியினதோ கையொப்பம் எதுவும் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கோரப்படவில்லை.

இதனால் மறுதலையாக, இவ் ஒப்பந்தத்திற்குள் கட்டுப்பட வேண்டுமென்ற கடமைப்பாடு அவர்களுக்கு தார்மீக ரீதியில் இல்லை.

இத்தகைய நிலையில் இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செயற்படுத்தப்படும்போது தாம் பலவந்தமாக இதற்கு அடிபணிய வைக்கப்படுவதான ஒரு உணர்வு இத் தரப்பினர்களுக்கு ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது.

இதற்கு ஒரு உதாரணமாக மாற்றுத் தமிழ்க் கட்சிகளை இவ் ஒப்பந்தத்தில் இராணுவத் துணைப் படையினர் என்று குறிப்பிடப்பட்டதை எடுத்துப் பார்க்கலாம்.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை பாராளுமன்றம், பிரதேச சபைகள் போன்றவற்றில் கொண்டிருந்தவர்களாகவும், பல பிரதேச சபைகளின் ஆட்சிப் பொறுப்பைக் கொண்டவர்களாகவும், ஏன் சிலர் அமைச்சுப் பொறுப்பையும் வகித்தவர்களாகவும் இருக்க, அவர்களை இராணுவத் துணைப் படையினர் என்ற பதத்தால் குறிப்பிடுவது பொருத்தமானதல்ல.

இது இவ் ஒப்பந்தத்தினின்றும் அன்னியப்பட்டு நிற்கவே அவர்களை உந்தும்.

மேலும், இம் மாற்றுக் கட்சிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கம் வழங்கியிருந்த ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமெனவும், அக் கட்சிகள் தெற்குக்குப் புலம் பெயர வேண்டுமெனவும் கூறப்பட்டிருந்ததும் அவர்களின் ஜனநாயக அரசியல் உரிமைக்கு முரணானதாகவும் அவர்களை அச்சுறுத்தல் மிக்க சூழ்நிலைக்குள் தள்ளுவதாகவும் அமைந்திருந்தது.

இதனாலேயே இவ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது மாற்றுத் தமிழ்க் கட்சிகள் இவ்வகையான நிர்ப்பந்தங்களைக் கடுமையாக எதிர்த்தன.

ஏவ்வாறாயினும் மாற்றுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றுக்கு அரசாங்கம் இணங்கிய நிலையில் அக் கட்சிகள் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து செயலாற்ற இணக்கம் தெரிவிக்கப்பட்டு இப் பிரச்சினை ஒருவாறு தணிக்கப்பட்டது.

எனவே சர்வதேச கண்காணிப்புக் குழுவுக்குக் கொடுக்கப்பட்ட கண்காணிப்புப் பொறுப்பு, அதன் ஆரம்பத்திலேயே சில சிக்கல்களைக் கொண்டிருந்தது. அதாவது, புலிகள், அரசாங்கம் ஆகிய இரு தரப்பினர் மட்டும் இணங்கிய விடயத்தை ஒரு பொது நடைமுறையாக எடுத்து நடத்துவதில் ஏற்படக்கூடிய சிக்கல்களை கண் காணிப்பாளர்கள் எவ்வாறு கையாளுவது என்பதே அப் பிரச்சினையாகும்.

அவ்வாறு அஞ்சியபடியே வெவ்வேறு சம்பவங்களும் இவ் ஒப்பந்தத்துக்குப் புறம்பாக நிகழ்ந்தேறி வந்தன. கிழக்கில் ஏற்பட்ட முஸ்லிம் கலவரங்கள் இவற்றில் பிரதானமானவை. இவ் ஒப்பந்தத்தின் பங்காளிகளாக உள்ளடக்கப்படாத நிலையில் இவ் ஒப்பந்தத்தின் பின்னான கசப்பான விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தமையே இக் கலவரங்களுக்கான பின்புலமாக அமைந்திருந்தன.

இது விடயமான கேள்விகள் எழும்பும்போது, கண்காணிப்பாளர்களோ, அல்லது பேச்சுவார்த்தைகளுக்கான மத்தியஸ்த நிலையை வகிக்கும் நோர்வே மத்தியஸ்தர்களோ, வசதியான ஒரு தப்பித்துக் கொள்ளும் வாதத்தை முன்வைக்கின்றனர். அதாவது, இவ் ஒப்பந்தத்தை மேற்கொள்ளுவதில் தாம் எந்தப் பங்கும் வகிக்கவில்லை. அதனால் இவ் ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளுக்குத் தாம் பொறுப்பில்லை. தாம் இரு தரப்பும் கோரியதன் பிரகாரம் அவ் இரு தரப்பும் இணக்கம் கண்ட இவ் ஒப்பந்தத்தைக் கண்காணிக்கவே வந்தோம் என்கிறார்கள்.

அதாவது, சமைக்கப்பட்டது என்ன என்பதிலோ, அது யார் யாருக்குப் பிடித்தமானது, யார் யாருக்குப் பிடித்தமற்றதென்பதிலோ தனக்கு அக்கறையில்லை. பரிமாறுவதுதான் தனது பொறுப்பென ஒருவர் கூறுவதற்கு ஒப்பானது இது.

என்றாலும்கூட அதையும் மீறி சில மாற்றங்களுக்கு கண்காணிப்புக் குழுவினர் செல்ல வேண்டியதாகத்தான் இருந்தது. இவ் ஒப்பந்தப்படி, அரசாங்கம் இழைத்த ஒப்பந்த மீறல்கள் பற்றிப் புலிகளும், புலிகள் இழைத்த ஒப்பந்த மீறல்கள் பற்றி அரசாங்கமும் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட முடியுமாக இருந்ததேயன்றி இவ் இரு தரப்பினரும் மேற்கொள்ளக்கூடிய மீறல்கள் பற்றிப் பொது மக்களோ, அல்லது இவ் ஒப்பந்தத்தில் பங்கு வகிக்காத மற்றைய கட்சிகளோ, பொது நிறுவனங்களோ கண்காணிப்புக் குழுவிடம் முறையிடவும் அதற்கான பரிகாரத்தை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் இவ் ஒப்பந்தத்தில் வழிவகை இருக்கவில்லை.

ஆனால், இப்படியான பெருந்தொகையான பிரச்சினைகள் குவிவதையும், அவற்றையிட்டு எதிர்ப்புக் குரல்கள் எழுவதையும் கண்ட நோர்வே மத்தியஸ்தர்கள், ஒப்பந்தத்தின் பங்குதாரர்கள் அல்லாதவர்களும் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம் என்பதற்கு இணங்கினர். இவ் இணக்கம்கூட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. அப்பாற்பட்ட இணக்கமாகவே இருந்தது.

எனினும், நடைமுறையில் இவ் இணக்கமும் இவ்வாறான முறைப்பாடுகளுக்கு எவ்வித பரிகாரத்தையும் வழங்கவில்லை. யாராவது ஒருவர் ஒரு முறைப்பாட்டைச் செய்தால், யாருக்கெதிராக முறைப்பாடு செய்யப்பட்டதோ அவர்களிடம் அம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு, அவர்களின் பதிலைத் திரும்பவும் முறைப்பாட்டாளருக்குத் தெரிவிப்பதுடன் கண்காணிப்புக் குழுவின் பங்கு முடிந்துவிடுகிறது.

பொதுவாக, அப்படி ஒரு முறைப்பாடு செய்யப்படும்போது, அவ்வாறு எவ்வித மீறலும் தம்மால் இழைக்கப்படவில்லை என்று பதிலளிப்பதாக விடயம் முடிந்துவிடுகிறது. அம் முறைப்பாட்டை சுதந்திரமாக விசாரணை செய்து அது குறித்து ஒரு தீர்ப்பை வழங்கும் அதிகாரம் கண்காணிப்புக் குழுவிடம் இல்லை.

இதில் பொதுமக்கள் எதிர்நோக்கிய ஆபத்து என்னவென்றால், யார் இவ்வாறு முறைப்பாடு செய்கிறார்களென்ற விபரம் மறுதரப்புக்குச் செல்வதால், முறைப்பாட்டாளர்கள் மீது வெவ்வேறு வழிகளில் அச்சுறுத்தல்கள், பழிவாங்கல்கள் நிகழ வாய்ப்பளிக்கின்றது. இது கருதியே பலரும் முறைப்பாடு செய்ய அஞ்சும் நிலை காணப்படுகிறது. அதனால் சாதாரணமானவர்கள் பலர் தமது குறைபாடுகளை வெளிப்படுத்தாதிருக்கும் நிலைமையில் இக் கண்காணிப்பாளர்களுக்கோ, மத்தியஸ்தர்களுக்கோ, சாதாரணமானவர்களின் குறைகள் தெரியாமலே போய்விடுகிறது.

இவை ஒருபுறமிருக்க, இக் கண்காணிப்புக் குழுவினருக்கும், மத்தியஸ்தர்களுக்கும்கூட சில சுய நலன்கள் இங்கே சம்பந்தப்படுவதாக உள்ளன. அவையும் நியாயத்தின் பால் தாக்கம் செலுத்துகின்றன.

அதாவது, பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் நிலையில் மத்தியஸ்தர்களுக்கு இப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க வேண்டுமென்பது குறித்து இயல்பான அக்கறை இருக்கும். அதில் தவறில்லை. ஒப்பந்தத்தின் தரப்பினர் மேற்கொள்ளும் மீறல்களை நிறுத்துவதற்கு வழி காண்பதே இந் நோக்கத்துக்கு உண்மையில் உதவிகரமானதாக இருக்கும். ஆனால் மாறாக, இம் மீறல்களை மூடி மறைப்பதால் ஒப்பந்தம் முறையாகச் செயற்படுத்தப்படுகிறதென்று காட்ட முற்படுவதற்கே இம் மத்தியஸ்தர்கள் மனச்சாய்வு அடைந்துவிடுகிறார்கள். இவ்வாறான மூடிமறைப்புகள் மீறல்களைப் பாதுகாப்பதுடன் மேலும் பெருகவே இடமளிக்கும் என்பதை அவர்கள் அக் கட்டத்தில் உணர்வதில்லை. இன்று மீறல்கள் பாரதூரமான அளவுக்குச் சென்றுள்ளதற்கும் இவர்களின் இத்தகைய அணுகுமுறையே காரணம்.

சிறந்த உதாரணமாக முல்லைத்தீவுக் கடலில் சீனப் படகொன்று தாக்கப்பட்டு சீனர்கள் உட்பட மாலுமிகள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு கண்காணிப்புக் குழுவினர் கொடுத்திருந்த வேடிக்கையான தீர்ப்பைக் கூறலாம். அதில், அப் படகைத் தாக்கியது புலிகளா, அரசாங்கத்தினரா என்பதற்கு ஆதாரமில்லாததால் மூன்றாம் தரப்பொன்றே தாக்கியிருப்பதாகத் தீர்ப்புக் கூறியிருந்தார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவுக் கடலில் மாற்றுக் குழுவொன்று ஊடுருவி அங்கிருந்த சீனக் கப்பலை இலக்குவைத்து சுமார் 1மணி நேரத்துக்கும் மேலாக நின்று தாக்குவது சாத்தியமா? அதற்கு அவசியம் உளதா? என்பதெல்லாம் பகுத்தறிவுக்குப் புறம்பான விடயங்கள் என்று சாதரணமானவர்களுக்குப் புரியும் விடயங்களும் இவர்களுக்குப் புரியவில்லை. மேலும் அரசாங்கமோ, புலிகளோ தாக்கியதற்கு ஆதாரமில்லை என்றால் மூன்றாம் தரப்புத் தாக்கியதற்கு ஆதாரமிருப்பதாக அவர்கள் கூறுவது அபத்தமானதென்பதையும் உணரவில்லை. ஆக, ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நோகாமல் சொல்ல வேண்டும் என்ற ஒன்றே அவர்களின் குறிக்கோளாக இருந்திருக்கிறதேயன்றி உண்மையைக் கண்டறிவதோ வெளிப்படுத்துவதோ அல்ல.

இங்கு அடிப்படையான விடயம் என்னவெனில் உண்மைகளை மறுதலித்துச் செல்லும் எந்தச் செயற்பாடும் இறுதியில் நல்ல முடிவை எய்தப்போவதில்லை என்பதே.

எனவே இவ்வாறு உள்நோக்கங்களும் சுய நலன்களும் குடிபுகுந்துவிட்ட நிலையில் பொதுக் குணாம்சத்தை இழந்துவிடுவது தவிர்க்க முடியாததாகிறது.

இது தொடர்பாக எடுத்துப் பார்க்க வேண்டிய மற்றொரு விடயம் மத்தியஸ்தர்களும் கண்காணிப்பாளர்களும் ஒரு தரப்பினராக - நோர்வே பிரதிநிதிகளாக - இருப்பது கண்காணிப்பில் செல்வாக்கைச் செலுத்த இடம் வழங்குகிறது. அதனால்தான் பல சந்தர்ப்பங்களில் கண்காணிப்புக் குழுவினர் தமது அவதானத்தைப் பற்றிப் பேசாமல் அரசியல்வாதிகள் போல் இச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குக் குந்தகம் விளைவிக்காதிருப்பதையிட்டு அக்கறை காட்டுகிறார்கள். இவ் அக்கறை உண்மைகளை மறைக்க அல்லது குறைத்து மதிப்பிட ஏன் மாற்றியுரைக்கவும் அவர்களை இட்டுச் செல்கிறது. அதனால் மத்தியஸ்தர்களே கண்காணிப்பாளர்களாக இயங்குவது ஆரோக்கியமானதாக அமையாது.

இதிருக்க, இப்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. கண்காணிப்புக் குழுவினரின் அணுகுமுறை தொடர்ந்து தோல்வியடைந்து விமர்சனத்துக்குள்ளாகி, அவர்கள் அவசியமில்லை என்ற அளவுக்குச் சென்றுவிட்ட நிலையில்தான் கண்காணிப்புக் குழு தன் அணுகுமுறையை மாற்றிக்கொள்ள எத்தனித்தது. இவ்வாறான சில முயற்சிகளில் அது விரும்பத் தகாத அநுபவங்களை ஈட்டிக்கொண்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவினரின் வாகனம் மீது கல்லெறியப்பட்ட சம்பவங்கள் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதாக இருந்தது. மீறல்களை நிவர்த்தி செய்து சுமுக நிலைமையை ஏற்படுத்துவதற்கென செயற்படும் தம் மீதே கல்லெறியப்பட வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்விக்கு அவர்கள் விடை காண வேண்டியிருந்தது.

இந் நிலையிலேயே திருகோணமலையில் கிண்ணியாப் பகுதியில் அமைந்துள்ள குரங்குபாஞ்சான் எனுமிடத்தில் புலிகள் முகாம் அமைத்தது தொடர்பான விவகாரத்தில் தீர்ப்பளிக்க வேண்டிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது. அப் பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியெனவும் அங்கு புலிகள் முகாமமைத்தது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலெனவும் புலிகள் அம் முகாமை அகற்ற வேண்டுமெனவும் கண்காணிப்புக் குழு தீர்ப்புக் கூறியிருந்தது. இவ்வாறான ஒரு திட்டவட்டமான தீர்ப்பைக் கூறியது இதுவே முதல் தடவை எனலாம்.

இதற்கு முன்னர் அண்மையில் நிகழ்ந்த கப்பல் தாக்குதலிலும் "அத் தாக்குதலைச் செய்ய இலங்கை கடற்படைக்கு உரிமை உண்டு" என்று கூறியிருந்தது உண்மையே. ஆனால் இதற்குப் பரிகாரம் எதையும் சொல்லும் தேவை அதில் இருக்கவில்லை. அது நடந்து முடிந்த சம்பவம் பற்றிய கருத்து மட்டுமே.

ஆனால் குரங்குபாஞ்சான் விடயத்தில் நடைமுறையில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு விடயமாகையால், முகாமை அகற்ற வேண்டும் என்ற ஒரு தீர்ப்பை கண்காணிப்புக் குழு கூற வேண்டி ஏற்பட்டது.

எனினும் புலிகள் அதனை அடியோடு நிராகரித்துவிட்டனர். முதலில் அத் தீர்ப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் அவ்வாறு தீர்ப்பிடும் உரிமையையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அடுத்து அது குறித்து தமது மதிப்பீட்டை அவர்கள் நடத்தி அம் முகாம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள்தான் உள்ளது, அகற்ற முடியாது எனத் தமது தீர்ப்பாகவே சொல்லியுள்ளார்கள்.

இப்போது கண்காணிப்புக் குழுவின் மதிப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பொது மக்கள், மாற்றுக் கட்சிகள் மத்தியில் நம்பகத்தன்மையை இழந்து நிற்கும் கண்காணிப்புக் குழு தற்போது தன்னை நியமித்த ஒரு தரப்பினராலேயே உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் கண்காணிப்புக் குழு தீர்ப்பு வழங்குவது மட்டுமன்றி அதை அமுலாக்கும் அதிகாரமும் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலைமை உருவாகியுள்ளது. ஆனால் அந்த அதிகாரத்தை யார் வழங்குவது? பிரம்பில்லாத வாத்தியாருக்குப் பாடம் நடத்த முடியுமா? என்ற கேள்வியே தற்போது எழுந்துள்ளது. ■

# தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயம்

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான காலம் தொட்டு பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்ட காலம் வரையான காலப்பகுதியில் வன்னிப் பெரு நிலப்பரப்பே பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகள் உட்பட தூதரகங்களின் அதிகாரிகள் வரை புலிகள் தரப்புப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் மையப் பகுதியாக வன்னி விளங்கியதில் வியப்பில்லை. ஆனாலும் கிழக்கு மாகாணமும் அது அரசியல் தீர்வுகளில் ஏற்படுத்தும் தாக்கமும் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் வாழ்கின்ற ஒரு பல்லின சமூக அமைப்பு முறைமை நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இந்த வகையில் வடக்கு - கிழக்குக்கான எந்தவொரு தீர்வு விடயத்திலும் கிழக்கு மாகாணம் குறித்து விஷேட கவனம் கொண்டு செயலாற்ற வேண்டியிருக்கும்.

தமிழர்களுக்கு வழங்கப்படும் எந்தத் தீர்வாக இருப்பினும் அதற்குச் சற்றும் குறையாத அதிகாரங்கள் கொண்ட அலகு முறை தமக்கும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தேசிய அரசியலிலேயே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான பலம் தம்மிடம் இருப்பதாக சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மைக் காலமாகக் கருத்துக் கூறி வருகின்ற இந்தக் காலப் பகுதியிலேயே புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள், பொறுப்பாளர்களுடன் அரசாங்கத்திடம் தாம் கோரவிருக்கும் இடைக்கால நிர்வாகம் குறித்து விளக்கமளிப்பதும் அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதுமே சு.ப.தமிழ்ச்செல்வனின் விஷேட விஜயத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

சு.ப.தமிழ்ச்செல்வன் என்ன பேசினார் என்பது பற்றியோ, கிழக்கு மாகாணத் தளபதிகள், பொறுப்பாளர்கள் என்ன கூறினார்கள் என்பது பற்றியோ எவ்வித செய்திகளையும் இதுவரை அறிய முடியவில்லை. இது குறித்து மக்களும் அறிந்துகொள்வதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில் சட்டவிரோதமான செயற்பாடுகளின்போதும், போர் நிறுத்த ஒப்பந்த அத்துமீறல்களின் போதும் படைத் தரப்பால் கைது செய்யப்படுகின்ற சமயங்களிலும் பொது அமைப்புகள், பொதுமக்கள் என்றும் கூறி புலிகள் இழுக்கின்ற திசைக்கெல்லாம் மக்கள் இழுக்கப்பட்டவர்கள். மறியல் போராட்டமாக இருக்கலாம், ஹர்த்தாலாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் மக்களைப் பயன்படுத்திக்கொள்வதில் காட்டிய ஆர்வத்தை தமது கருத்துக்கள் குறித்து, தமது எதிர்கால நகர்வுகள் குறித்து மக்களுக்கு உணர்த்த வேண்டியது தார்மீகக் கடமை என்பதைப் புலிகள் உணர்ந்துகொள்வதாக இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்புக் கூட வாய் மூடி மௌனித்திருப்பது கவலையளிக்கிறது.



இன்றைய நிலைமையில் கிழக்கு மாகாணத்தில் பெரும் முறுகல் நிலையைத் தோற்றிவித்திருப்பது புலிகள் புதிதாக அமைத்த குரங்குபாஞ்சான் பகுதியிலிருக்கும் புதிய முகாம் பிரச்சினைதான். தமது கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் தாம் முகாம் அமைத்திருப்பதாக புலிகளும், இல்லை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே அத்துமீறிப் புலிகள் முகாமமைத்திருப்பதாக இலங்கைப் படையினரும் கூறிவருவதில் குழப்பமிருப்பதாக இருந்தாலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இவ்வாறான சர்ச்சை ஒன்றை நீடிப்பதற்கான தேவை இருக்காது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஆகவே சம்பந்தப்பட்ட புலிகளின் புதிய முகாம் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே அம் முகாமைப் புலிகள் அகற்றத்தான் வேண்டும் என்று தமது முடிவைப் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டனர். தமிழ்ச்செல்வனின் திருமலைக்கான விஜயம் இப் பிரச்சினையில் சுமுகமான முடிவைப் பெற்றுத் தரும் என நம்பிக்கை கொண்டிருந்த பலருக்கு இறுதியில் ஏமாற்றம்தான் மிச்சம்.

திருமலைக்கு விஜயம் செய்த சு.ப.தமிழ்ச்செல்வன் குரங்குபாஞ்சான் பகுதிக்கே போகாமல் சேனையூரிலேயே தமது முடிவைத் தெரிவித்துவிட்டார். அதாவது குரங்குபாஞ்சான் பகுதியிலிருந்து தம்மைப் போகச் சொல்வதானது சொந்த வீட்டிலிருந்து வெளியேறச் சொல்வதற்கு ஒப்பானதாக அமையும் எனவும், அந்த முகாம் தமது பழைய முகாம் என்பதால் அகற்ற முடியாது என்றும் கூறிவிட்டார். ஆக சு.ப.தமிழ்ச்செல்வனின் கிழக்கு மாகாணத்துக்கான விஷேட விஜயமானது பதிய திருப்பங்களையோ, சுமுக தீர்வுகளையோ பெற்றுத் தரவில்லை என்பது நிதர்சனம்.

ஆனால் புலிகளுக்கு சு.ப.தமிழ்ச்செல்வனின் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் அதிக இலாபகரமாக அமைந்திருந்தது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை புலிகளினால் அதிகமான போர் நிறுத்த மீறல்கள் புரியப்பட்ட இடமாகும். புதிய படையணிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கேந்திர முக்கியத்துவமும் பெற்றதாகும். இந்த வகையில் போர் முழக்கங்கள் இல்லாத காலப்பகுதியில் சாதாரண சமூக வாழ்வு முறைகள் புலிகளின் உறுப்பினர்களுக்கு உளவியல் ரீதியான மாற்றங்களுக்கு இடமளிக்கும். பெற்றார், உறவினர்கள் என்ற பாசப் பிணைப்புகளின் நெருக்கம், கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை என்பன புலி உறுப்பினர்களுக்குக் கணிசமான அளவு மனநிலை மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும். முக்கியமானவர்களின் விஜயம், அவர்கள் உதிர்க்கும் வீராவேசமான வார்த்தைப் பிரயோகங்கள் என்பன அவற்றை தடுத்து ஓரளவு கலவரப்பட்ட நிலைமையைத் தோற்றுவிக்கும். அது மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்தின் பார்வையில் 'புலிகள் நிபந்தனைகளை விதித்துவிட்டு சும்மா இருக்கவில்லை சமாதான முனைப்புடன் ஓடித் திரிந்து செயலாற்றுகிறார்கள்' என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கவும் இந்தப் பயணம் உதவும் எனப் புலிகள் எண்ணக் கூடும்.

சர்வதேச சமூகம் புலிகளின் போக்குகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடருக்கு புலிகளை எவ்வளவோ எதிர்பார்த்தும் கலந்துகொள்ளாததைக் கொண்டு புரிந்துகொண்டது.

அதற்கு முன்னர் வரை வன்னிக்கும் கொழும்புக்குமாகப் பறந்து திரிந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அண்மைக் காலமாக அவ்வாறான பிரயாணங்களைத் தவிர்த்துக் கொண்டனர். அத்துடன் அமெரிக்கத் தூதரகத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததும் ஜப்பான் பிரதிநிதி கொழும்புக்கு வந்த உடனேயே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததும் இதனுடைய தாக்கத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

இதற்கிடையில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குரங்குபாஞ்சான் புலிகளின் புதிய முகாம் விவகாரத்தில் இராணுவ பலத்தை பிரயோகிக்க வேண்டியேற்படும் எனத் தெரிவித்ததாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தன. "இந்தச் செய்தி போருக்கான 14 நாட்களுக்கு முன்னதான அறிவிப்பா" எனப் புலிகள் கேள்வி எழுப்பியபோது பாதுகாப்பு அமைச்சரின் மறுப்பு வெளியிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறான முரண்பட்ட கருத்துக்களும், சம்பவங்களும் இன்னொரு யுத்தத்துக்கான ஆரம்பமாக ஆகிவிடக் கூடாது என்பதை மக்கள் கவனமாக அவதானிக்க வேண்டும். யார் ஆரம்பித்து யுத்தம் திணிக்கப்பட்டாலும் அழிவு மக்களைத்தான் பலியிடும். எனவே தவறுகள் திருத்தப்பட்டு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். வறட்டுப் பிடிவாதங்கள் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லாது.

குரங்குபாஞ்சான் விவகாரத்தில் புலிகளுக்கு விட்டுக்கொடுத்தால் இவ்வாறாக புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புதிய புதிய முகாம்களை அமைக்கக் கூடும் என அரசாங்கம் அஞ்சுகின்றதாகவே தெரிகிறது. புலிகளும் நியாயமான விட்டுக் கொடுப்புகளுக்கு முன்வர வேண்டும். இந்த நிலை நீடிப்பதானது உண்மையான சமாதான விரும்பிகளுக்கு விருப்பத்துக்குரியதாக இருக்காது.

அரசும் - புலிகளும் விடாக்கண்டன் கொடாக்கண்டன் போக்கிலிருந்து மீள முடியாத நிலையில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எவ்வாறு இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வை எட்டப்போகிறது என்பதை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் உன்னிப்பாக அவதானிக்கின்றனர். முடிவுகள் யுத்தத்துக்கான முஸ்தீபுகளாக அமையாமல் சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களாக அமைவதையே நாகரிகச் சமூகம் எதிர்பார்க்கும். ■

## அதிரடி அய்யாத்துரை



எங்கட பொலிஸாற்ற இன்ரலிஜன்ட் விண்ணானத்தை இப்பதான் கண்டன். ஈ.பி.டி.பி உறுப்பினரான ரகுபதியெண்டவற்ர செத்தவீட்டுக்கு டக்ளஸ் வருவாரெண்டு, பொலிஸ் அதிகாரி தாபுறுவைக் கொலைசெய்த மதன்குமார் கிருபாகரன் தாபுறுவோட நிண்டவராம். ஆனால் டக்ளஸ் மாறுவேடத்தில வந்ததால கண்டுபிடிக்க முடியேல்லையாம். ரகுபதியெண்டவர் முன்னாள் புளொட் உறுப்பினரெண்டதும், பின்னாளில பாதுகாப்புத் தரப்பாரோட வேலை செய்தவரெண்டதும் எவருக்கும் தெரியும். இதுகூடத் தெரியாதவையாய் இருந்துகொண்டு மாறுவேஷப் புனைகதை எழுதிறவையெல்லாம் உப்பிடியான பெரிய விஷயங்கள எப்பிடித்தான் துப்புத் துலக்கப் போகினமோ?

**ரெண்டெழுத்தாற்ர** அரசியல் பொறுப்பாளர் தழிழில் செல்வனார் கிழக்கு விஜயம் செய்தவேளை மட்டக்களப்பில பத்திரிகையாளர் சந்திப்பில தெட்டத்தெளிவாய்ச் சொல்லிப்போட்டாராம், ''ரீ.என்.ஏ. காறர் எங்கட முயற்சியாலதான் பாராளுமன்றம் போனவை, அவை நாங்கள் சொல்லுறபடிதான் செய்ய வேணும், பாலா அண்ணையும் உத முந்திச் சொல்லியிருந்தவர். அவைக்கு நட்பு ரீதியாய்ச் சொல்லிக்கொண்டு வாறம். இனி அவைக்கு விளங்கிற பாஷையிலதான் சொல்ல வேண்டி வரும்" எண்டு. ரீ.என்.ஏ. காறர் கொஞ்சம் உப்புத் தண்ணியில காதக் கழுவிக்கொண்டு கூட்டங்களுக்குப் போறது நல்லது. அதோட, கூட்டமைப்பு ரவியான ராயர் சிங்கள சேவை உரையாடல்களில போய் ''எங்கட அலுவலகங்களில நாங்கள் ஒண்டும் பிரபாகரனின்ர படத்தை வைச்சுப் பூசை செய்யேல்லை. நாங்கள் வெறும் பொம்மைகளில்லை எல்லாத்துக்கும் தலையாட்டிக்கொண்டிருக்க..." எண்டு வீறாப்பாய்ப் பேசிறதும், தமிழ் உரையாடல்களில வந்து "ரெண்டெழுத்தார்தான் ஏகபிரதிநிதிகள்" எண்டு ஒரேயடியாய் அரோகராப் போடுறதுமாய் ரெட்டை நாடகம் நடத்திறதை இத்தோட கைவிட்டால் நல்லது.

**போன கிழமை** மின்னலிலயும் சீறிற காந்தர் சறுக்கிப் போட்டார். ரெண்டெழுத்தாரால கூட்டமைப்பு வெல்லேல்லையாம், மக்கள்தான் வெல்லச் செய்தவையாம். ஏத்தி வைச்ச ஏணியையும் உதைஞ்சு தள்ளிற குணம் பளிச்சிடுது பேச்சில. ரெண்டெழுத்தார் சொல்லினம் தங்கள் சார்பிலதான் அவை வெண்டதெண்டும், தங்கட சொற்படிதான் அவை நடக்க வேணுமெண்டும்.

**ரெண்டெழுத்தார்** சார்பில புலியான தேவர் கனடாக்காறரிட்டக் கேட்டுப் பாத்தும் தமிழில செல்வனாருக்கு அவையும் விசா மறுத்திட்டனமாம். ஒருபடியாப் பிரான்சுக்காறர்தான் ஓம்பட்டிருக்கினம். கனடாக்காறர் சொன்னதா வந்த செய்தியும் கனமானதாத்தான் இருக்குது. சமாதானப் பேச்சுக்கு ரெண்டெழுத்தார் வராட்டால் அங்கை அடைக்கலம் குடுத்தவையத் திருப்பியனுப்ப வேண்டி வருமெண்டு சொன்னதாய் வெளிநாட்டு ஆங்கிலப் பத்திரிகையொண்டு செய்தி எழுதியிருந்திச்சுது. விசாரிச்சுப் பாத்தால் ஏதோ நெருப்பில்லாமல் புகையேல்லையெண்டுதான் தெரியுது. சமாதானம் வந்தால் திருப்பியனுப்பிப் போடுவாங்களோவெண்டு யோசிச்ச காலம் போய் சமாதானம் வராட்டால் எல்லாம் பிழைக்கப் போகுதெண்ட நிலவரம் தலைதூக்கியிருக்கு. வர வர விஷயம் விவகாரமாத்தான் போகுது போல.

**ரெலோக்காறர்** யாழ்ப்பாணத்தில பொதுச்சபை கூடினவையெல்லே. நல்ல காரியம்தான். ஆனால் அபசகுனமா அவை வானில போற வழியில புளியங்குளச் சோதனைச் சாவடியில வழிமறிச்சு ரெண்டெழுத்தார் அவைய 3 மணித்தியாலமா வைச்சுச் சோதிச்சுப் போட்டினமாம். பொறுமையிழந்துபோய் பொதுச் செயலாளர் பிரசன்னா பொங்கியெழுந்தாராம். "உங்களோட சேர்ந்தியங்கிற எங்களையே இப்பிடி நடத்திறியளோ, செயலாளரெண்டும் பாராமல் என்னையே அவமானப் படுத்திறியளோ" எண்டு குமுறிப் பாத்தாராம். ஒண்டும் பலிக்கேல்லை. திரும்பி வரேக்க, யாழ்ப்பாணத்து இளம்பருதியாற்ர கடிதத்தோடதான் வந்தவையாம். ம்... ஒரு பாட்டுத்தான் வாயில வருகுது. ''சுப்பண்ணா சொன்னாரண்ணா, சுதந்திரம் வந்ததெண்டு..."

**தன்ர தியாகமும்** பங்களிப்பும் ரெண்டெழுத்தாற்ர தலைவர் பிரபாகரனைவிட இம்மியும் குறைஞ்சதில்லையெண்டு சித்தார்த்தன் சொன்னது யோசிக்க வைக்குது. தானும் 1961 உண்ணாவிரதத்தில கலந்து கொண்டவரெண்டும் அண்டு தொடக்கம் தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து உழைச்சு வருபவரெண்டும் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் இப்ப உதையெல்லாம் யார் பாக்கிறது. நேற்று முளைச்ச காளான்களும் முந்தநாள் வரை மோசடி யாபாரிகளா அதிகாரிகளுக்கு லஞ்சம் குடுத்து கொள்ளையடிச்சவையுமெல்லோ இண்டைக்கு மக்கள் பிரதிநிதிகளெண்டு கொக்கரிக்கினம்!

**ரெண்டெழுத்தாரால** வில்லங்கமெண்டுதான் மன்னாருக்குப் பாலம் போடுறத தமிழக முதல்வர் ஜெயலலிதா நிராகரிச்சவ எண்டது உலகறிஞ்ச விஷயம். இதுவும் தெரியாமல், அப்பிடி நிராகரிச்சதை வரவேற்கிறதாவும், அது கலாச்சாரச் சீர்கேட்டத் தடுக்கிற நடவடிக்கையெண்டும் முன்னாள் ஈரோஸ் தலைவரும் இன்னாள் ரெண்டெழுத்தார் பிரமுகருமான பாலகுமாரன் புது விளக்கம் குடுக்கிறதப் பாமரத்தனமெண்டிறதா புத்திசாலித்தனமெண்டிறதா? இட் இஸ் அப் டூ யூ.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 1000 | ரூ.500 | ரூ.300 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் **D.D. Enterprises** எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் **'Manager Thinamurasu'** என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் **Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: **(E-mail):- murasu@dialogsl.net**
**edmurasu@dialogsl.net**



## சித்தர் மாந்திரீகம்

சர்வதேச ஸ்திரி புருஷ வசியம் மூலம் மனம் கவர்ந்த வாழ்க்கை அமைந்திடவும், திருமணத் தடை, புத்திர பாக்கியமின்மை, கணவர் மனைவி விவகாரம் ஜோதிடம் கைரேகை மூலம் நிவர்த்தி பெற்றிடலாம்.

**சித்தர் மாந்திரீகம்**

**328/A, Aluthmawatha Road, Colombo-15**
**Tel :- 0722-601108**


## ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | | இறைவன் அடியில்: |
|---|---|---|
| 04 | | 25 |
| 06 | | 07 |
| 1939 | | 2002 |

### அமரர். வல்லிபுரம் மகேஸ்வரி

**திதி : 13.08.2003**

ஆண்டுகள் ஓராண்டென்ன
ஆயிரம் தான் வந்திடினும்
நீண்ட நம் நினைவுகளில்
நிலைத்திருக்கும் உன் உருவம் -எமை
ஆண்டவரே அம்மா! உமையிழந்து
அவனியிலே வாழ்தென்ன?
பூண்ட உன் புன்சிரிப்பு
புதிதல்ல எங்களுக்கு-நிதம்
வேண்ட வருவாயா? நம்
வேதனை தீராதா?
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

கச்சாய் வடக்கு, கொடிகாமம்




25வது வருடத்தில்

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம்பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ், சோமசுந்தரம் அவர்களை இல.25, கில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா), கொழும்பு எனும் இடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00 மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்ற பின்னர்தான் (பதிவு செய்து) வர வேண்டும். **தொலைபேசி : 074 - 201582**

**ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்**

### பாராட்டுக் கடிதங்கள் சில

"ஊசிகள் போட்டும், காஸ் (புகை) பிடித்தும், சுகம் கிடையாமலும், பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடியாமலும், ஏன் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த வேளையில் எத்தனை முறை நோயின் கொடுமையினால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட நான் இப்பொழுது ஒன்றரை வருடங்களாக நிம்மதியாக மூச்சு விடுகிறேன்." என்கிறார், வெள்ளவத்தை மூர் வீதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் றொஜர் இமானுவேல் என்பவர்.

"ஒரு நாள் மருந்துடனேயே இரண்டரை வருடங்களாக இருந்த மாய்ச்சல் அறவே போய்விட்டது." என்கிறார், காத்தான்குடியைச் சேர்ந்த முகமட் லத்தீப் என்பவர்.

"1992ம் ஆண்டு தொடக்கம் என்னை வாட்டி, துன்பப்படுத்தி, தற்கொலை செய்ய இருந்த என்னை ஒரு மாதத்திற்குள் முழு சுகம் அடைய வைத்த Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களின் வைத்திய சேவையைப் பாராட்டுகிறேன்." என்கிறார், அக்கரைப்பற்று பனங்காட்டைச் சேர்ந்த க.தங்கவேலு.

"ஆறு வருடங்களாக இந் நோயால் பட்ட தொல்லைகள் நீங்கி நிம்மதியாக இருக்கிறேன், என்கிறார்" மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இராஜேந்திரம் என்பவர்.

"அண்ட வெளி எல்லாம் காற்று இருந்தும் சுவாசிக்க முடியாமல் இருந்த என்னை சுவாசிக்க வைத்த தெய்வம்" என்கிறார், தற்போது டுபாயில் வேலை செய்யும் இலக்கம் 15. பராக்கிரம வீதி, கொழும்பு -14ஐச் சேர்ந்த ராஜன் என்பவர்.

"இப்படி ஒரு சுகம் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. நான் சிகிச்சை பெறச் சென்றபோது என்னைப் போலவே எல்லாரும் மிகச் சுகமடைந்து செல்கிறார்கள். என்பதை நேரில் கண்டறிந்தேன்" என்கிறார், எட்டு வருடங்களாக அஸ்மா நோயால் பாடுபட்ட 264/1, வெலியமுல்ல வீதி, ஏகித்த, வத்தளையைச் சேர்ந்த ராக்கம்மா தாமோதரம் என்பவர்.

"இப்போதுதான் மூச்சு வந்து ஆறுதலாக வீட்டு வேலைகளையும் செய்து வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கிறேன்." என்கிறார், அட்டாளைச்சேனை, பாலத்தடியைச் சேர்ந்த திருமதி எஸ்.பாத்திமா.


"பல வருடத் தும்மல், மூக்கால் நீர் வடிதல் பறந்து போனது" என்கிறார், மட்டக்களப்பு, பெரிய போரதீவு அண்ணாத்துரை.

**தொலைபேசி : 074-201582**





## ஓம் நிருபிக்கும் மலையாள மாந்திரீக உச்சாடனங்கள்



நான் செய்விக்கும் நிருபிக்கும் மலையாள மாந்திரீகமே. இதனால் என் மூலம் நன்மை பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ? இனி என்ன உங்கள் பிரச்சினை, என்னிடம் கெடுதல் வேலைக்கு இடமில்லை. வெளிநாட்டவர்கள் மட்டுமே 24 மணித்தியாலமும் குறை நிறைகளைப் பேசித் தீர்க்க வாய்ப்புண்டு. பிரிந்தவர்கள் என் மூலமாக ஒன்று கூட, காதல் கைகூட, ஓடிப்போனவர் தேடி வர, குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்க கடன் சுமை குறைய, குபேர சாந்தி வாழ்வு பெற, மனப்போக்கு நிலை தடுமாற்றத்தை கட்டுப்படுத்த, தீராத நோய் தீர, திடீர்திருமணம் கைகூட, வெளிநாட்டில் தங்கி வாழ, குடிபோதையை நிறுத்தி சுகமான வாழ்வு பெற, தலை முடி உதிர்வதைத் தடுத்து நீண்டு வளரச் செய்ய, குபேர வாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ, அக்கு வேறு ஆணி வேறாக கைரேகை பார்த்துக்கொள்ள, காண்ட அடிப்படையில் ஜாதகம் கணித்து இதுதான் உங்கள் வாழ்வு எனத் தெரிந்துகொள்ள. என்னை காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை நேரில் சந்திக்கலாம். கடிதத்தில் பதில் பெற நேர அவகாசம் இல்லை. இன்னும் எனக்கு வந்த கடிதங்களில் சில.

(இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை)

**முறக்கொட்டாஞ்சேனை வாசகி : செய்தது பலித்துவிட்டது.**
ஐயா! எனது மகள் திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உண்டு. கணவர் 06 ஆண்டுகளாக பிரான்ஸில் உள்ளார். கணவன் ஜெனார்த்தனிடம் போக முடியாமல் ஆறு ஆண்டு காலமாக மிகுந்த மன வேதனையுடன் இருந்தபொழுது பத்திரிகையில் ஐயா அவர்களின் விளம்பரத்தைக் கண்டு அவரோடு தொடர்புகொண்டு கொழும்பு சென்று அவரின் ஆலயத்தில் பரிகார வேலைகளைச் செய்த பின் 2003ம் ஆண்டு 05ம் மாதம் 09ம் திகதி எனது மகள் தன் கணவன் இருக்கும் இடம் செல்லுவாள் என்று ஐயா கூறினார். ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன் 07ம் திகதியே பிரான்ஸ் போய்விட்டார் என்ற செய்தியை சந்தோசத்துடனும் பெருமையுடனும் அறியத் தருவதோடு ஐயா அவர்கள் ஆண்டாண்டு காலம் மக்களுக்கு நீண்ட நிலையான சேவையை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**லண்டன் அன்பரின் மடல் : கடன் தொல்லை நீங்கி கையில் பணம் சேர்ந்து, மனைவியுடன் ஒன்று சேர்ந்தது.**
வணக்கத்துக்குரிய ஐயா அவர்களுக்கு!
துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கும் எனது குடும்பத்திற்கும் வாழ்க்கையில் வெளிச்சத்தைக் காட்டியமைக்கு எனது முதற்கண் நன்றி ஐயா! எனது வாழ் நாளில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். தற்போது வெகு விரைவில் கனடாவிற்கு எனது மனைவியுடன் போகவுள்ளேன். நிம்மதியாகவும், சந்தோசமாகவும், கடன் தொல்லைகள் இல்லாமலும் கை நிறையச் சம்பாதித்து வாழ்க்கையில் சகல செல்வங்களும் (குழந்தைச் செல்வம் உட்பட) பெற்று எல்லோருக்கும் உதவி செய்து அவர்கள் சந்தோசத்தில் நான் சந்தோசத்தைக் காண எல்லாம் வல்ல துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கு வெற்றியளிக்கச் செய்து தந்த உங்களை மனித தெய்வமாகவே நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை உலகில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் சாமி....

**ஜேர்மன் அன்பரின் மடல் : மகளின் திக்குவாய் குணமாகியது.**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு பிறவியில் இருந்து திக்குவாயாக இருந்த எனது 09 வயது மகளை திக்குவாயில் இருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகின்றோம்.

**லண்டன் அன்பரின் மடல் : எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு! என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்து என்னைச் சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் : 39 வயதில் அதிசயத் திருணம்.**
பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரில் இருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்குக் கோடானு கோடி நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்: குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி.**
அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஐயா! வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத் தடை நீக்கிப் பரிகாரம் செய்து, குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்ஸில் இருந்து இக் கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**ஹற்றன் அன்பரின் மடல் : தீராத தலைவலி தீர்ந்துவிட்டது.**
மதிப்புக்குரிய ஐயாவுக்கு! நெடு நாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**இத்தாலி அன்பரின் மடல் : சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி.**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா! வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோசமாகச் சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்: போதை அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டவர்.**
அன்புக்குரிய ஐயாவுக்கு! எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு எமது குடும்பத்துக்குப் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் : ஜாதகத்தில் கூறியது பலிதம்.**
மரியாதைக்குரிய ஐயா! உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றி அறியாமல் இருந்த எனக்கு இத்தனையாம் ஆண்டு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**நீர் கொழும்பு அன்பரின் மடல்: புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்,**
மாட்சிமை பொருந்திய ஐயா! சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்தி பேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னைப் பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்குக் கண்ணீரால் நன்றி கூறுகிறேன் ஐயா.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிசய குண்டல பூஜை.**
மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விஷேசமாக நடைபெறும் அக்கினி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மைத் துன்பத்தில் இருந்து காத்து வந்ததிற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**சுவிஸ் அன்பரின் மடல்: குழந்தைப் பாக்கியம் கிடைத்தது.**
துர்க்கை சித்தர் அவர்களுக்கு! திருமணம் நடந்து நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்த எனக்கு தங்களின் பரிகாரத்தின் பின் குழந்தை கிடைக்கும் திகதியைக் கூறினீர்கள் ஐயா! நீங்கள் குறிப்பிட்டபடியே எனக்குத் தங்களின் ஞான சக்தியின் மூலம் குழந்தை கிடைத்தது. நானும் எனது குடும்பமும் மகிழ்ச்சியாய் உள்ளோம். எனது நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஸ்ரீ துர்க்கை அம்மனின் சக்தியால் பேசும் மழலை.**
மனித தெய்வமே! உங்கள் தெய்வ சக்தியால் பேசாத எம் 03 வயது மழலையைப் பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நன்மைகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: கணவன் - மனைவி பிணக்கு தீரல்.**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு! சின்னா பின்னமா இருந்த எமது குடும்பத்தை 7000 மைலுக்கு அப்பால் இருந்த வண்ணம், ஸ்ரீ துர்க்கை கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஔடத மூலிகையால் நீண்டு வளர்ந்த கூந்தல்.**
ஐயா அவர்களுக்கு! நீண்ட காலமாக எனது முடி உதிர்ந்து வெளியில் செல்வதற்கு வெட்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தேன். ஐயா அவர்களின் ஔடத மூலிகையால் எனது கூந்தல் வளர்ந்து, கறுப்பாய், அடர்த்தியாய் உள்ளது. ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் : திருமணத் தடை நீங்கியது.**
கருணை உள்ளம்கொண்ட சுவாமிஜிக்கு! எனது அக்காவுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் ஐயா அவர்களிடம் வந்து சாந்திப் பரிகாரம் செய்த பின் அக்காவுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்து சந்தோசமாக உள்ளார். ஐயா அவர்களுக்கு எமது நன்றிகள்.

**மட்டக்களப்பு அன்பரின் மடல் : பிரிந்த காதலி ஒன்று சேர்ந்தது.**
என்னை வாழ வைத்த எனது தெய்வம் ஐயா அவர்களுக்கு!
எனது வாழ்க்கை திசைமாறி என்ன செய்வது என்று தடுமாறிய வேளையில் எனது நண்பனின் மூலமாக தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன். தங்களின் மாந்திரீக பூஜையின் பலனாக என்னைப் பிரிந்து சென்ற என் காதலி என்னிடம் மீண்டும் வந்தாள். எங்களுடைய இரு வீட்டாரின் முழுச் சம்மதத்தோடு எங்கள் இருவருக்கும் நல்லபடியாகத் திருமணம் நடைபெற்றது. ஐயா அவர்கள் கூறியது போல் எனது திருமணத்தின் பின்பு எனக்கு ஒரு நல்ல அந்தஸ்தோடு சந்தோசமாக நலமாக வாழ்கிறேன். எனது இந்த வாழ்க்கை ஐயா அவர்கள் எனக்களித்த அருள் காணிக்கையே! ஐயாவுக்கு எனது பல கோடி நன்றி கலந்த வணக்கம்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிர்ஷ்ட வீடு அமையப் பெற்று நோய் நொடி இன்றி வாழ்கின்றோம்.**
எனது வாழ்வுக்கு ஒளி ஏந்திய எங்கள் குல தெய்வமாகிய ஐயா அவர்களுக்கு!
தங்களின் அருள் ஞான சக்தியால் தங்களிடம் எனது ஜாதகத்தைக் கணித்து பரிகாரங்கள், பூஜைகள் செய்த பின் எனது வீட்டை முழுமையாக கட்டி முடித்தேன். வீட்டில் உள்ளவர்கள் நோய் நொடியின்றிச் சந்தோசமாக இருக்கின்றார்கள். கையில் பணம் தங்குகிறது, பொருளாதார நிலையில் ஐயாவின் அருளால் திருப்தியாக உள்ளோம். எனது குடும்பத்தாருக்கு மதிப்பும், மரியாதையும் எமது சமூகத்தில் கிடைப்பதற்கு வழியமைத்துக் கொடுத்த ஐயா அவர்களுக்கு நாம் விசுவாசத்துடனும், நன்றிக்கடன் பட்டவர்களாகவும் இருப்போம்.

**மன்னார் அன்பரின் மடல் :**
ஐயா! உங்களிடம் தெய்வீக ஞான ஒளிச் சக்தி இருப்பதை மனதார உணர்கிறேன். நன்றி. மன்னார் கனகசபை.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி**
**பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.AN) J.P.**

**PROF. DR. P.K. SAMY (J.D.G.AN) J.P.**

**SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM, 162. KOTAHENA STREET. COLOMBO-13.**

T.P. : 342464, 342463, 431137. FAX: 0094-1-344831. E.MAIL: *drpksamy@sttnet.lk.*

HOT LINE:
**01- 344832,**
**01- 470615**





## உங்கு என்ன பலன்



**வாழ்வில் நீங்கள் வெற்றி பெற என்ன வழி?**

**கை ரேகை ஜோதிட நிபுணர்,**

**மனோவியல் தத்துவ ஆலோசகர் கே.கங்காதரன் அவர்கள்.**

1. வாழ்க்கையின் மர்மத்தை அறிந்து தெரிந்து அதன்படி செயற்பட வேண்டுமா? வாழ்வு சிறக்க எக் காலம் உகந்தது என்று தெரிந்துகொள்ள வேண்டுமா? பெயரின் சப்தங்களால் ஏற்படும் விபரீத விளைவுகள், திருமணத் பொருத்தத்தின் உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமா? நோய்களைத் தடுக்கும் முறையும் வரும் நோய்களை அறியும் வழியும் என்னவென்று தெரிந்துகொள்ளவும், மனம் நிம்மதி பெறும் வழிகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டுமா?

2. உடல் மச்சங்களால் ஏற்படும் நன்மை தீமைகள் என்னவென்று தெரிந்துகொள்ள உங்களின் ஜனனப்படி வண்டி வாகன யோகமுண்டா என்று அறிந்துகொள்ள, தீய எண்ணங்களில் இருந்து விடுபடுவது எவ்வாறு என்று தெரிந்துகொள்ள, சுய முயற்சியால் வெற்றி பெறும் வழியைத் தெரிந்துகொள்ள, நவரத்தினங்களின் அற்புத சக்திகளும் அதனால் ஏற்படும் குபேர வாழ்வும், வாஸ்து சாஸ்திர முறையின் நன்மைகளும், அதனால் ஏற்படும் குபேர வாழ்வு பெறும் வழிகளைத் தெரிந்து முறைகளை அறிய, இப்படி வாழ்வு பெறும் வழி முறைகளுக்கான தீர்வை உங்களின் கை ரேகையை வைத்தே அக்கு வேறு ஆணி வேறாக அறிந்து தெரிந்து செயற்பட என்னைச் சந்தியுங்கள். என்னிடம் கால அவகாசம் பெற்ற பின்பே உங்களின் கை ரேகையை ஆராய்ச்சி செய்து விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

3. எனது யாகசித்தியின் மூலம் கருமவினைகள், கருமநோய்கள், கடன் தொல்லைகள் இவைகளில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமும், ஐஸ்வரியமும், மழலைச் செல்வமும் பெற்று குபேர வாழ்வு பெற வேண்டுமா? வாஸ்து முறைப்படி குறைந்த செலவில் வீடு கட்டுவதற்கான வரைபடங்கள் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளலாம். இன்னும் இப்படியான அனேக பிரச்சினைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அதில் உலகின் பல நாடுகளுக்கும் சென்று பல வெற்றிகளைக் கண்டு பல ஆய்வுகளைச் செய்து அதை இலங்கை தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும், விரிவுபடுத்தி சாஸ்திரத்தின் உண்மைகளைத் தெளிவுபடுத்தி மக்களின் நெஞ்சில் இடம் பிடித்த ஜோதிட மனோவியல் ஆலோசகர். விதியை மதியால் வெல்லுவது மலையாள மாந்திரிக சக்தியே. அன்று எழுதி வைத்ததை இன்று மாற்றுவது தெய்வீக மூலிகையே. இவை எம்மிடம் மட்டுமே உண்டு.

சாமி கங்காதரன் (அகில இலங்கை ஜே.பி.) அவர்கள்
**K.Gangatharan - MA, PHD(MKUSD).JP(AI),**

MA.PHD.(MKUSD).jp (AI)Dip.In.3D.
Home & Auto Card.Uk, (Astrologer & Meditation Consultant)

**Managing Director**
**P.K.Saamy Associated (Pvt) Ltd,**

Raja Engineering Construction,
162, Kotahena Street, Colombo - 13. Sri Lanka.

**Mobil Phone : 0777-388860, Tel: 01-342463-4, 431137**
**Hot Line : 01-344832, 470615**

GOVT - App. No-W/A49819

# இன்னொருவர் பார்வையில்

# கறுப்பு ஜூலை 1983

## தவறு ஏற்படுத்திய களங்கம்

*1968ன் இனக் கலவரத்தின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடந்துகொண்டதைப் போல 1983 ஜூலைக்குப் பின்னர் ஐ.தே.க. செயற்படவில்லை. தமிழ் மக்களை அரசியல் அவமதிப்புக்கு உள்ளாக்கும் விதத்தில் அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மீது தடை விதிக்கப்பட்டது.*

**1968ன்** இனக் கலவரத்தின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடந்துகொண்டதைப் போல 1983 ஜூலைக்குப் பின்னர் ஐ.தே.க. செயற்படவில்லை. தமிழ் மக்களை அரசியல் அவமதிப்புக்கு உள்ளாக்கும் விதத்தில் அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மீது தடை விதிக்கப்பட்டது.

சகோதர இனத்தவர்களைப் படுகொலை செய்தமை ஆறாத காயமாக இன்னமும் உள்ளது. சிங்கள மக்களுக்கு எதிர்மறையான விளைவுகளைப் பெற்றுக் கொடுத்துவிட்டது என்பது மட்டுமல்ல கறுப்பு ஜூலையின் முக்கியத்துவம். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக ஒட்டுமொத்தமாக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு தருணம் அது. கறுப்பு ஜூலைச் சம்பவங்கள் தொடர்பாக தென்னிலங்கையில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் இரு வகையாகும்.

"மகனே! நாம் முட்டாள்தனமாகச் செயற்பட்டுவிட்டோமா"

"அப்படித்தான் தெரிகிறது."

"ஆனால் புலிகளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

பின்னையவர், "வெறுப்பூட்டும் வகையில் புலிகள் கம்பீரமான முறையில் தமது குற்றங்களிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டுள்ளதாகக் கருதுகிறார்கள். இது உண்மைதான். எனினும் கறுப்பு ஜூலை சிங்கள மக்களுக்கு எதிர் விளைவுகளைப் பெற்றுக் கொடுத்துவிட்ட ஒரு அராஜக தாண்டவம். ஒரு தார்மீக நெறிப் பிறழ்வு. மிகவும் வெறுக்கத் தக்க ஒரு குற்றம்."

சிங்களவர்கள் முட்டாள்கள் என்னும் கருத்துருவாக்கம் அனகாரிக தர்மபாலாவின் காலம் முதலே ஒரு சுயவிமர்சனப் பாங்கில் முன்வைக்கப்பட்டு வருகிறது. இயற்கையோடு பின்னிப் பிணைந்து தாமரை இலையில் உணவருந்தும் பழக்கமுடைய புனிதர்களான சிங்களவர்கள், சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களால் மோசமாக வழி நடத்தப்பட்டார்கள் என்பது அவரது செய்தியாக இருந்தது. 1848ம் ஆண்டிற்குப் பின்னர் காலனிய எதிர்ப்பு தேசியவாத சிந்தனை மேலோங்கியிருக்கவில்லை என்பது ஆச்சரியத்திற்கு உரியதல்ல. உலகம் முழுவதும் 1905ன் ரஷ்ய, ஜப்பானிய போர் மற்றும் 1917ன் அக்டோபர் புரட்சி போன்றவற்றால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உணர்வலைகள் மேலோங்கி இருந்தது. ஆனால் இங்கே 1915ல் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் முதல் சமூகங்களுக்கு இடையே பிரித்து வைக்கப்பட்ட நம்பிக்கையீனங்களோடுதான் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் வரை கழிந்தது.

ஜூலை 83ன் அசம்பாவிதங்களுக்கு நாங்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பொறுப்பாளிகள். சிலர் அவற்றில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தனர். பலர் இந்தப் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருந்தனர். தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்களில் பெரும்பாலான சிங்கள மக்கள் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் கலவரங்களில் ஈடுபட்டிருந்த வெறி பிடித்த சிறு கும்பலைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க பெரும்பாலானவர்கள் முற்படவில்லை. மிக முக்கியமாக இலங்கை அரசோ அல்லது பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமோ கலவரங்களைக் கட்டுப்படுத்த முற்படவில்லை. ஆயுத பாணிகளான கலகக் கும்பலின் முன்பாக நிராயுதபாணிகளான பெரும்பாலானவர்களின் கையாலாகாத்தன்மை புரிந்துகொள்ளத் தக்கது. ஆனால் இந்தக் கொடூரச் சம்பவங்களுக்கான எதிர்ப்பு உணர்வு அல்லது மாறுபட்ட கருத்துக்கள் ஏன் முன்னெடுக்கப்படவில்லை? இயங்கியல் ரீதியிலான எதிர்ப்பு எங்கே ஒளித்துக்கொண்டது?

1958ல் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன சிங்கள இனவாதத்திற்கு எதிராகக் கிளர்ந்தன. இதுதான் அவர்களின் பொற்காலம். 1983 ஜூலையில் இப்படியான சக்திகள் எதுவும் இருக்கவில்லை. ஜூலை 1980ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்காக கடும் போக்குடைய தொழிலாளர்களான சுமார் 60,000 பேர் ஐ.தே.க. அரசினால் வேலை நீக்கப்பட்டமையின் காரணமாக உழைக்கும் வர்க்கம் மிகவும் பலவீனப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு கட்சி என்ற வகையில் எதையும் செய்ய முடியாத ஒரு கையறு நிலையில் ம.வி.மு (ஜே.வி.பி) இருந்தது. உலகின் ஏனைய பகுதிகளில் விரும்பத்தகாத சக்திகள் பதற்றத்தைத் தொடர்ந்து பேணும் வகையில் நடந்துகொண்டிருந்தன. இடதுசாரிகளான நல்ல பிள்ளைகள் கடுமையான மனமாற்றத்துக்கும், எதிர்ப்புக்கும் இலக்காகி இருந்தனர். மேர்ஜ் (Mirje) எனப்படும் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம், சமூக விஞ்ஞானிகள் சங்கம் போன்ற உதிரிகளால் மட்டுமே ஓரளவுக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டது.

இந்த நிலைமை மிக மோசமாக இருந்தது. 1958ல் ஆயுதப் படையினர் மத்தியில் பல இனங்களையும் சேர்ந்தவர்களும் இருந்தனர். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்களம் மட்டும் கொள்கை 83ல் இதே நிலைமையை வெகுவாக மாற்றியிருந்தது. மேலும் 1958ல் படையினர் தாக்குதல் இலக்காக இருக்கவில்லை. 1983 ஜூலையில் அப்படியிருக்கவில்லை. எனினும் இனப் படுகொலையின் கோடூரம் இவற்றை மட்டும் சார்ந்திருக்கவில்லை. ஆளும் கட்சி வன்முறை அலையை முதலில் தோற்றுவித்து இருந்தது. ஆனால் ஜூலை 23 முதல் ஜூலை 29 வரை என்ன நடந்துகொண்டிருந்தது? அப்போது இருந்த அரசாங்கம் நிறைவேற்று அதிகாரத்தையும், மூன்றிலிரு பங்கு பாராளுமன்ற பெரும்பான்மையையும் செயலற்றதாக்கியிருந்தது. கடுமையான அடக்குமுறையைப் பிரயோகித்துக்கொண்டிருந்தது. வன்முறைக் கும்பலைக் கட்டுப்படுத்த விருப்பமில்லாமல் அல்லது இயலாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. மிகவும் கொடூரமான கொலைகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்றன. ஒரு தடவையல்ல, இரு தடவைகளில் இது மீளவும் இடம்பெற்றது. இக் கொடூரம் சகிக்க முடியாதது என்பதுடன் இதற்குப் பொறுப்பானவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

1958ல் பதவியிலிருந்த அரசு இனக் கலவரம் நடந்தமைக்குப் பின்னர் நடந்துகொண்டது போலன்றி 1983ல் ஐ.தே.க. சமூகம் மீது ஏற்பட்ட காயத்துக்கு மேலதிகமாக அரசியல் ரீதியாகவும் அவமதிப்பு செய்தது. அரசியலமைப்புக்கான வேறு திருத்தம் பொருத்தமற்றதொரு தருணத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இதனால் த.வி.கூ. உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து தள்ளப்படவும், சுயமாக நாட்டிலிருந்து வெளியேறவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஜே.வி.பி. மீது குற்றம் சுமத்தப்பட்டு, தடை விதிக்கப்பட்டதால் அது தலைமறைவு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. 1978க்கும் 1983க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜே.வி.பி. மிதவாதப் பாதையில் புகுந்து மிதவாதக் கட்சியாகப் பரிமாணம் பெற்றுக்கொண்டு வந்தது. ஆனால் இதன் மீது தடை விதிக்கப்பட்டதால் அது மீண்டும் பழைய பாதைக்கே செல்ல வேண்டியதாயிற்று.

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்கு ஜூலை 83க்கு முன்னரே தமிழ்நாட்டில் தளங்கள் இருந்தன. பாண்டி பஜார் சம்பவத்தையடுத்து உமா மகேஸ்வரன் மற்றும் பிரபாகரன் ஆகியோர் இந்திய உளவுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டும் இருந்தனர். ஜூலை 83க்கு முன்னரேயே இந்திய உளவு நிறுவனங்களுக்கு தமிழ்த் தீவிரவாத இயக்கங்களோடு தொடர்புகள் இருந்தது. எனினும் பயற்சி முகாம்கள் அமைக்கப்பட்டதும் வெளிப்படையான அரசியல் ஆதரவு வழங்கப்பட்டதும் ஜூலை 83ன் பின்னர்தான். ஏனெனில் ஜூலை 83 சம்பவங்கள் காரணமாகத் தமிழ்நாட்டில் சிங்களவர்களுக்கு எதிரான உணர்ச்சி மேலோங்கி இருந்தது. இதனைத் தவிர்க்க டில்லி ஏதாவது செய்ய வேண்டியிருந்தது.

புலிகளின் அமைப்புக்குள் இடம்பெற்ற கொலைகள் மற்றும் போட்டிக் குழுக்கள் மீதான புலிகளின் தாக்குதல்கள் என்பன பற்றித் தெரிந்தவர்களுக்கு பிரபாகரனின் பாசிச போக்கு குறித்து ஜூலை 83க்கு முன்பே நன்கு தெரியும். ஆனால் பிரபாகரன் வெளிப்படையாக முன்வருமளவுக்கு இலகுவான சந்தர்ப்பம் ஜூலை 83ஐ அடுத்துத்தான் கிடைத்தது என்பதை வரலாறு சுட்டுகிறது. முதலாவது பயங்கரவாதத் தாக்குதல் என்பதைச் சரியாக வரையறை செய்தால் அது அரசுக்கு எதிரானது அல்ல. போரில் சம்பந்தப்படாத பொது மக்களுக்கு எதிரான தாக்குதல் ஜூலை 83க்குப் பின்னர் இடம்பெற்றது. 1984ன் இறுதிப் பகுதியில் நாயாறு, கொக்கிளாய் பிரதேசங்களில் பொது மக்கள் படுகொலைக்கு இலக்காகினர். பின்னர் 1985ல் அநுராதபுரத்தில் பொது மக்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். இதனையடுத்து பாசிசப் போக்குகள் மேலோங்கின.

பெருமை மிக்க மக்கள் அவமானங்களுக்கு உள்ளாக்கப்பட்டதையடுத்து சிங்களவர்களைப் பழிவாங்கும் உணர்ச்சி தீவிரமாகியது. இது பிரபாகரனின் புலிகள் இயக்கம் வளர்வதற்கு வாய்ப்பளித்தது , இயற்கையானது. அதாவது 1983 ஜூலை அசம்பாவிதங்கள்தான் புலிகளைத் தோற்றுவிக்கவில்லை. ஈழக் கோரிக்கையை முன்வைக்கத் தூண்டவும் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் தொடக்கி வைக்கப்பட்ட தரப்படுத்தல், 1972ன் புதிய அரசியலமைப்பு போன்றவையே அதனைச் செய்தன.

1979ல் வடபகுதிக்கு இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து நகர்ப்புற கொரில்லாக்களை அடக்குவது என்ற போர்வையில் போர் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருநெல்வேலியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதல், குறைந்த கடுமையுடன் காணப்பட்ட முரண்பாடு தீவிரமாகியதன் வெளிப்பாடு. கறுப்பு ஜூலையானது தமிழ் இயக்கங்களுக்குள் மற்ற எல்லாவற்றையும் பின்தள்ளிவிட்டு எந்த வித விட்டுக்கொடுப்பையும் செய்ய முன்வராத இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்த பிரபாகரனின் புலிகள் இயக்கத்தை முன்னிலைக்குக் கொண்டுவந்தது. அத்துடன் இந்தியா இந்த நாட்டுப் பிரச்சினையில் தலையிடும் நிலை வரையில் இட்டுச் சென்றது. 1984ல் இந்தியப் படையினர் தலையிடுவதற்குத் திட்டமிடப்பட்டபோதும் அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சீக்கிய தீவிரவாதிகளால் கொலையுண்டதை அடுத்து ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நாங்கள் பிரபாகரனை உருவாக்கவில்லை. ஆனால் 83 ஜூலையை அடுத்தும், அதற்கு முன்னரான சூழ்நிலைகளின் மூலமும் தமிழ் மக்கள் தமது "கோலியாத்" போல பிரபாகரனைக் கருதும் நிலையை ஏற்படுத்திவிட்டோம்.

இப்போது அவரை அழிக்க நினைக்கிறோம். அதனை ஏற்கெனவே ஆரம்பித்தும் விட்டோம். புலிகளை எதிர்ப்பவர்கள் பலர் உள்ளனர். ஆனால் அரசாங்கத்தின் மென்மையான போக்கும், ஜூலை 83ஐக் கொண்டுவந்த சிங்கள இனவாதப் போக்கும், அவர்களைச் சங்கடப்படுத்துகிறது. புலிகளுடனான அவர்களது பிரச்சினை தமிழ்ப் பாசிசத்திற்கு எதிரானது. சிங்கள இனவாதத்தை எதிர்க்கும், கறுப்பு ஜூலையைக் கண்டிக்கும் மேலும் பலர் உள்ளனர். ஆனால் இத்தகையோரில் பலர் தமிழ்ப் பாசிசத்தை ஆதரிப்பவர்களாக அல்லது அதற்குத் துதி பாடுபவர்களாகவே உள்ளனர். புலிகளின் பாசிசப் போக்கையும், சிங்கள இனவாதத்தையும் எதிர்க்கும் சக்திகள் உள்ளன. தமிழ் இடதுசாரிகளான ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் போன்ற கட்சிகளும் அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதி திருமதி சந்திரிகாவும் இத்தகைய சக்திகளில் குறிப்பிடத்தக்கன.

கறுப்பு ஜூலையின் இரு தசாப்த காலத்திற்குப் பின்னர் தற்போது நான்கு வகையான போக்குகள் காணப்படுகின்றன.

1. புலிகளுக்கு எதிரான கடும் போக்கையும், சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வு மேற்கொள்வதை ஆதரிக்கும் போக்கையும் கொண்டிருப்பது. ஜனாதிபதி, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், 1994க்குப் பிந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். போன்றவற்றை இதற்கு உதாரணம் காட்டலாம்.

2. புலிகளுக்கு எதிரான தீவிரப் போக்கு, சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வுகளை எதிர்ப்பதுமான போக்கு.

ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்றவற்றை இதற்கு உதாரணம் கூறலாம்.

3. புலிகளுடன் மென்மையான போக்கையும், சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன தொடர்பாக மென்போக்கையும் வெளிப்படுத்தும் போக்கு. தற்போதைய ஐ.தே.க. தலைமைத்துவம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில சமாதானப் புறாக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இ.தொ.கா. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ட்ரொக்சியவாதிகள், சமாதானப் பிரியர்கள் போன்றோரை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

4. புலிகளுடன் மென் போக்கைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் அதே சமயம் சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வுக்கு எதிராகக் கடும் போக்கைப் பிரதிபலிப்பது.

ஐ.தே.க.வின் பிரதான கொள்கை இது போலத்தான் தெரிகிறது.

இவற்றில் இரண்டாவது மற்றும் நான்காவதான அரசியல் கொள்கைகள் முற்றிலும் தவறானவையாகும். ஜூலை 1983ன் அசம்பாவிதங்கள் காரணமாக புலிகளின் பயங்கரவாதப் போக்கை நியாயப்படுத்த முடியாது. பிரபாகரனின் பாசிசப் போக்கை நியாயப்படுத்த அல்லது மன்னிக்க ஜூலை 1983ன் சிங்கள இனவாதப் போக்கை ஒரு காரணமாகக் கொள்வது பொருத்தமானதல்ல. இதே போல சிங்கள இனவாத கடும் போக்காளர்கள் தமது செயற்பாடுகளுக்கு புலிகளின் பாசிசக் போக்கை காரணம் காட்டுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல.

இப்போது அல்லது இன்னும் சில காலத்துக்காயினும் சிங்கள இனவாதப் போக்கை விடவும் புலிகளின் பாசிசம் மிகப் பெரும் ஆபத்தானதாக இருக்கிறது. இனவாதமும், பாசிசமும் சமப்படுத்தக் கூடியவையல்ல.


இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர், சமாதான முயற்சிக்குத் தடைக்கல்லாகவும், சமாதானப் பேச்சுவார்த்தை மூலமான இணக்கத் தீர்வை எட்டுவதற்கு முட்டுக்கட்டையாகவும் பிரபாகரன் இருந்து வருகிறார். ஆகையால் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக பிரபாகரன் வெல்லப்பட்டாக வேண்டும். உண்மையாகவே சமாதானத்தை விரும்பும் சக்திகள் புலிகளுடன் மென்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கருதுவதும், புலிகளுக்கு எதிரான போக்கை வெளிப்படுத்துவது சமாதானத்திற்கு எதிரானது என்று வகைப்படுத்துவதும் தவறானதாகும். சமாதானத்தை நேர்மையாக விரும்புவது என்பது புலிகளுக்கு ஆதரவாக இருப்பது அல்லது புலிகளுடன் மென்மையாக நடந்துகொள்வது என்பதல்ல. பிரபாகரனின் பாசிசப் போக்குகளுக்கு எதிராக சிங்கள, முஸ்லிம் மக்களும் தமிழ் ஜனநாயக சக்திகளும் ஒருங்கிணைந்து சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகப் பாடுபட வேண்டும். இதன் மூலமாகவே இலங்கையர் என்னும் தேசியத்தைக் கட்டியெழுப்ப முடியும். சுதந்திரத்திற்கான போராட்டத்தின்போதும், அதன் பின்னரான பல தசாப்தங்களிலும் இத்தகைய போக்கு கட்டியெழுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

எப்படி இருந்தபோதும், 1956, 1972, 1983 இன் துக்ககரமான சம்பவங்களின் தொடர்ச்சி மீண்டும் இடம்பெறாது தடுப்பதற்காக தீய சக்திகளைக் கட்டுப்படுத்த முன்வருவது அனைவருக்கும் சாத்தியமானது. அவ்வாறு செய்யத் தவறினால் எமது அடிப்படை மனிதாபிமானத்தையே காட்டிக் கொடுத்தவர்களாவோம்.

**ஆக்கம் : டயான் ஜெயதிலக்க,**
**நன்றி 'தி ஐலண்ட்'** 27 ஜூலை 2003




தருவது - ஆச்சர்சா




அடால்ப் ஹிட்லர், சார்லி சப்லின் மீசை, தொந்தி, இராணுவச் சட்டை, யூனிபோம், வெறிப்பேச்சு, உன்மத்த வெறியில் கொலை, இவைகள் ஹிட்லர் காலத்து ஜேர்மன் மக்களுக்கு தெய்வமாக விளங்கியது. நாடு கடத்தப்பட்ட, சுயமாக ஜேர்மனியிலிருந்து தப்பியோடியவர்களுக்கு அவன் வெறும் பொய்யன், ஏமாற்றுக்காரன், அதிர்ஷ்டம் பிடித்து ஆட்டிவைக்கும் கொலை வெறியன். இதுதான் மிகப் பெரும் புதிர்.

ஹிட்லரின் அந்தரங்க வாழ்க்கை ரொம்ப ரசமானது, விபரீதமானது. அவனது சரித்திரத்தைப் படிப்பது சுவாரஸ்யமானது. சிறு வயதில் சாஸ்திரம் படிப்பதில் அதிக ஆர்வம் இருந்தது. படிப்பெல்லாம் சொற்பம்தான். ஜேர்மனியை தெரியவே தெரியாது. பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கும்போது யாரும் அவனிடம் கேள்வியே கேட்க முடியாது. வரும் பத்திரிகையாளர்களை வைத்துக்கொண்டு ஒரு நீண்ட பிரசங்கமே நடத்துவான். பத்திரிகையாளர்கள் குறிப்புக்களை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஹிட்லருக்கு புத்தகங்களைக் கண்டாலே பிடிக்காது. வாசிப்பதை அவன் வெறுத்தான். தூக்கம் வரவில்லையானால் தனது முக்கியமான நண்பர்களைக்கொண்டு வாத்தியங்களை வாசிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டு இருப்பான். நிரந்தரமான நண்பர்கள் என்று யாருமே ஹிட்லருக்கு இருக்கவில்லை. நண்பர்களுடன் சல்லாபம் அடிப்பதை முற்றாக வெறுத்தான். முக்கிய நண்பர்கள் என இருந்தவர்களைப் படிப்படியாகச் சமாதியாக்கினான். குடிக்கவே மாட்டான், புகைபிடிக்க மாட்டான். மரக்கறி உணவையே உண்பான். ஹிட்லர் ஒரு வகையான சன்னியாசியென்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

ஹிட்லர் அதிகாரத்தில் இருக்கும்போது அவனை தன்னினச் சேர்க்கையாளன் என ஜேர்மனியில் வதந்தி பரப்பப்பட்டது. அதனை மெய்ப்பிப்பதற்கு பல ஊடகங்கள் போட்டா போட்டி போட்டன. ஆனால் அவன் செக்ஸில் அதிக நாட்டம் கொண்டவன் அல்ல என்பது பின்னாலேயே தெரியவந்தது. பெண்களை முற்றுமுழுதாக வெறுத்தான். "நவீன கால காம உன்மத்தத்தின் மோகத்திலிருந்து மக்களின் வாழ்க்கை விடுவிக்கப்பட வேண்டும்" என்கிறான் ஹிட்லர் தனது சுயசரிதையில்....

ஹிட்லருடைய வாழ்க்கை பெண்கள் விசயத்தில் அப்பழுக்கற்றதாகவே இருந்துள்ளது. "பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசாம்" என்ற கசப்புடன் பெண்களை அவன் வெறுக்கவில்லை. என்றாலும் "நமக்கு அவர்களின் தொடர்பே வேண்டாம்" எனத் தள்ளியே இருந்தான். ஹிட்லரின் அப்பா விடாப்பிடியான குடிகாரனாக இருந்தான். அப்பாவுக்கு ஹிட்லரைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. சரியான முரட்டு ஆசாமி. அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் தினமும் அடி உதைதான். ஹிட்லரின் அப்பா சாகும்போதும் சாராயக் கடையில் போத்தலும் கையுமாக திடீர் மாரடைப்பால் செத்துப்போனான். ஹிட்லரின் தாய் ஹிட்லருக்கு 6 வயதாக இருக்கும்போதே புற்றுநோயால் செத்துப் போனாள் தனது தாயை ஹிட்லர் அதிகமாக நேசித்தான்.

அவனது குணப் பரிணமிப்பிற்கே முக்கிய காரணம் அவனது குடும்ப நிலைமைதான் என்கின்றனர் மன நல ஆராய்ச்சியாளர்கள். அதிகாரம், வெற்றி, ஏதேச்சாதிகாரம் இவற்றின் மீது மோகத்தைத் தூண்டிய ஆசை வித்துக்களை விதைத்தவர் ஹிட்லரின் தாய்தான் என்கின்றனர்.

# நகரம் என்பது நச்சுப் பொய்கையா?

நகரப்புறங்களில் தொழிற்சாலைகள் பெருகி வளர்கின்றன. அங்கு இயந்திரங்களின் இடைவிடாத இயக்கத்தினால் புகையும், நச்சுக் கழிவுகளும் உருவாகி இயற்கைச் சூழலுடன் கலக்கின்றன.



உயிர்வாழ்க்கை தொடங்கி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் மனிதனுக்கும், இயற்கைச் சூழலுக்கும் இடையே தோன்றியுள்ள மிகப் பெரும் பிரச்சினைகளில் அதுவும் ஒன்று.

மனிதன் உட்பட எல்லா விலங்குகளும் ஒட்சிசனை உள்ளேற்று காபனீரொட்சைட்டை வெளியேற்றுகின்றன என்பது நமக்கு பாலர் பாடம். தற்போதைய நாகரிக உலகில் மனிதன் மட்டுமல்ல இயந்திரங்களும் ஒட்சிசனைச் சுவாசிக்கின்றன என்பது ஆச்சரியமான விசயமல்ல. விமானங்கள், ரயில், வாகனங்கள் இயங்குவதற்கு ஒட்சிசனை உள்ளெடுத்து எரிபொருளை எரிக்கின்றது. ஒரு மோட்டார் வண்டி ஆயிரம் கிலோமீட்டர் பயணம் செய்யத் தேவைப்படும் ஒட்சிசனின் அளவு ஒரு மனிதனின் ஓராண்டு முழுவதும் பயன்படுத்தும் ஒட்சிசனின் அளவுக்குச் சமமானது என்பதுதான் நமக்கு ஆச்சரியமாகும்.

சூழல் நச்சுத் தன்மையாவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கிராமங்கள் அழிக்கப்பட்டு நகரமயமாக்கப்பட்டு வருகின்றன. நமது ஊர்கள் அனைத்தும் இதயங்களை இழந்து வெறும் கொங்ரீட் காடுகளாக வளர்ந்து வருகின்றன. வருங்கால சந்ததியினருக்கு நல்ல வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்க கல்வியையும் பணத்தையும் தேடி ஓடுகின்றோம். ஆனால் நம்மால் முடியுமா, நமது வருங்கால சந்ததியினருக்கு சுத்தமான காற்று, சுத்தமான நீர், பாழ்படாத நிலம் ஆகியவற்றைத் தருவதற்கு? "வரங்களே சாபங்களாகுமென்றால் இங்கு தவங்கள் எதற்கு" என கவிஞர் அப்துல் றகுமான் கேட்டார். நகரங்களே நரகங்களாகுமென்றால் இந்த வளர்ச்சி எதற்காக என்று எம்மால் கேட்க முடிகிறது.

# இலங்கையில் சிங்கள சினிமா?

நமது தமிழ் வாசகர்களில் எத்தனை பேர் சிங்களத் திரைப்படம் பார்க்கின்றார்களோ தெரியாது. ஆனால் சிங்களத்திலும் மிக முக்கியமான திரைப்படங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சர்வதேச தரத்திற்கு ஒப்பான சிங்களத் திரைப்படங்கள் உள்ளன. உலக சினிமா இயக்குநர் தர வரிசையில் சிங்களத் திரைப்பட இயக்குநரான டொக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்"க்கு அண்மையில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. எந்த தமிழ்த் திரை இயக்குநரும் இந்த அந்தஸ்தைப் பெறவில்லை. இதற்காகவேனும் தரமான சிங்களத் திரைப்படங்களைப் பார்க்க வேண்டும். சினிமாவுக்கு மொழியில்லை என்பதை நாம் அறிவோம்.

அஹாசின் பொலவடா (இறந்தவர்களுக்கான வெள்ளை மலர்கள்)

(மூலக்கதை : யெய்ல்லென் சிரிவர்தெனா, திரைக்கதை : டிஸ்ஸ அபெய் சேகெரா)

சமூக அக்கறையோ, ஈடுபாடோ, பொறுப்போ இல்லாதவர் என்று சிலரால் விமர்சிக்கப்படுகின்றவர் ஜேம்ஸ் பீரீஸ். இவரது பெரும்பாலான படைப்புக்கள் இவ் விமர்சனத்திற்கு முரண்பட்டிருந்தாலும் அவரது அக்கறையெல்லாம், வெறும் வெளிமுகமான சமூக மற்றும் பொருளாதார வறுமையை விட, அவரது கதை மாந்தர்களின் உள்முகமான சிக்கல்கள், பிரச்சினைகள் பற்றித்தான் அதிகம். உணர்வுக் குழப்பங்கள் நிறைந்து சிக்கலான திரைப்படம் அவருடைய மிகவும் உள்முகமார்ந்த பாணியில் அமைந்ததாகும். சுமித்ரா பீரிஸால் மிகவும் சிறப்பான முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்ட திரைப்படமும் கூட இது. திருமணம் முடித்து சில ஆண்டுகள் கழிந்த பிறகு தனித்தனியாக வாழ்ந்து கொண்ட கணவன் மனைவியரின் வாழ்க்கை முறையைப் பற்றி ஒரு சித்தரிப்பு. கணவனின் உணர்வு ரீதியான சில்லிட்டுப் போன தன்மையின் பங்களிப்பைப் பற்றிய ஒரு ஆழமான வாழ்க்கைப் பிரச்சினை பற்றிய நல்ல திரைப்படம் இது. இன்று



குடும்பங்களிடையே, கணவன் மனைவியரிடையே பல்வகை முரண்பாடுகள் ஏற்பட்டுவரும் சூழலில் அனைவரும் பார்க்க வேண்டிய சிறந்த சிங்களத் திரைப்படம் இது.

இலங்கையில் தயாரிக்கப்படும் சிங்களத் திரைப்படங்களுக்கு தணிக்கை என்பது இல்லையென்றாலும், அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு எந்தக் கட்டுப்பாடும், சமூகப் பொறுப்பும் இல்லாமல் பார்வையாளர்களின் ரசனையை அவமதிக்கும் வகையில் வெறும் வியாபாரத்திற்காகப் புகுத்தப்படும் ஆபாசம் மற்றும் செயற்கையான காட்சிகள் எதுவுமே இல்லாமல் யதார்த்தமாகவும் அதே வேளையில் கலையம்சங்களோடு ஈர்ப்புத்தன்மை கொண்டவைகளாகவும் படைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது. தரமான சிங்களத் திரைப்படங்களை வரவேற்று, பாராட்டி, இவைகளை வசூலிலும் வெற்றிப் படங்களாகப் பவனிவரச் செய்யும் இலங்கை சிங்கள சினிமா பார்வையாளர்களின் ரசனை மட்டம் வியப்புத் தருவதாகவும் உள்ளது. அதனால்தான் அர்த்தமுள்ள திரைப்படங்களை உருவாக்கும் தாகத்தை தொடர்ந்து தணியாமல் காத்துக் கொண்டிருக்கும்

Dr. லெஸ்டெர் ஜேம்ஸ் பீரிஸ் எனும் உண்மையான திரைப்படக் கலைஞன் "ஐம்பது ஆண்டுகளாக திரைப்படங்களை படைக்கும் என் பணி வெகு நீண்ட புனித யாத்திரை போன்றதே. வாழ்க்கையும் என் நாட்டு மக்களும் என்னோடு மிக நெருக்கமாக இருந்து வருகின்றனர். எனது திரைப்படங்களின் மூலம் நான் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டதில் ஓரளவாவது அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன்." என்று பெருமிதத்தோடு கூறுகின்றார்.

# '83 மீள் பார்வையில் சூடான அரசியல் விவாதம்.

**1983** தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறை, அதன் தாக்கங்கள் பற்றி சக்தி தொலைக்காட்சியில் தமிழ் அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளின் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

அது வழமையைவிட கடந்த இறுதித் தொடர் இரண்டிலும் சற்று வித்தியாசமாக இருந்தது.

இக் கலந்துரையாடலில் பங்குபற்றிய ஈ.பி.டி.பி. இன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, இன வன்முறை நடைபெற்றபோது வெலிக்கடை சிறையில் நேர்ந்த பயங்கரங்களை நேரடியாக அநுபவித்தவர். புளொட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன் அக் காலகட்டத்தில் லண்டனில் வசித்தவர். ரெலோ சிறீகாந்தா யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். சட்டத்தரணி தொழிலையும் மேற்கொண்டிருந்தார். ரவிராஜ் கொழும்பில் சட்டக் கல்லூரியினுள் புகுவதற்கு தயாராக இருந்தார். வெவ்வேறு பகுதிகளில் இன வன்முறை, அதன் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற்காக இந்த நால்வரும் அந்தக் கலந்துரையாடலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்

83 இன வன்முறை நடைபெற்று காலச்சக்கரம் உருண்டோடி இரண்டு தசாப்தங்கள் முடிவுற்ற நிலையில் அந்த வன்முறை, அதற்குப் பிந்திய காலகட்டம் பற்றிய பாரபட்சமற்ற விமர்சன பூர்வமான பார்வை ஒன்று அவசியப்படுகிறது.

அந்த வகையில் ஈ.பி.டி.பி. இன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

1983 இன வன்முறையுடன் வீறு கொண்டெழுந்த தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் சகோதரப் படுகொலைகளால் நலிவுற்றதை நடைமுறை உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டினார்.

புளொட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன் "அன்று இந்தியாவிற்கு பயிற்சிக்குச் செல்ல வள்ளத்தில் ஏறிய இளைஞர்கள், இது இன்ன இயக்கத்தின் வள்ளம் என்று தெரிந்து ஏறவில்லை. தமிழர்களின் போராட்டத்தில் தாமும் பங்களிக்கிறோம் என்று கருதியே ஏறினார்கள். ஆனால் அவ்வாறு மாறி ஏறியவர்கள்தான் படுகொலை செய்யப்பட்டார்கள்" என்று சகோதரப் படுகொலைகளில் பலி கொள்ளப்பட்ட இளைஞர்கள் பற்றிக் குறிப்பிட்டார். இங்கு யார் பலியானார்கள், எதற்கு வந்தவர்கள் பலியானார்கள், யாரால் பலியானார்கள் என்பதை மிகவும் எளிமையாக அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

தமிழினத்தின் ஒற்றுமை என்ற வார்த்தை ஜாலத்தினுள் ஒளிந்து கொண்டு சிறீகாந்தா அவர்கள் தமது ஆகப் பிந்திய நிலைப்பாட்டை நியாயப்படுத்தினார்.

எல்லோரும் பிழை புரிந்திருக்கிறோம் என்று கூறி புலிகளின் பாரதூரமான, அளவு ரீதியாகவும் குணாம்ச ரீதியாகவும் வேறுபட்ட தவறுகளை நியாயப்படுத்த முற்பட்டார். புலிகள் தமிழ் தேசியப் போராட்டத்தில் பேரினவாத அரசு மேற்கொண்ட பேரழிவுகளுக்கு நிகரான அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆயிரக்கணக்கான மாற்று இயக்கப் போராளிகள், பொது மக்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். புலிகளால் தமது சொந்தப் பிரதேசங்களில் வாழ முடியாமல் புலம் பெயர்ந்தவர்கள் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். இத்தகைய ஒரு நிலைமையை வேறு எந்த இயக்கமும் ஏற்படுத்தவில்லை.

தீவுப் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றவர்கள் மீது நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை என்பது போல் பேசியது செயற்கையாக அமைந்திருந்தது.

ரெலோ தலைவர் சிறீ சபாரட்ணம் அவர்களின் படுகொலைக்குப் புலிகள் பொறுப்பாளிகள் அல்ல என்று பேசியது, தமது தற்போதைய நலன்களுக்காக அந்தப் படுகொலையை அடகு வைத்தது போல் இருந்தது. இந்திய 'றோ' தான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பது போல் அவர் குற்றம் சாட்டினார். அதாவது 'றோ' நினைத்திருந்தால் அந்தக் கொலையைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்பது அவரது வாதம். ஊரறிய உலகமறிய புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சக இயக்கத்தின் மீதான படுகொலைத் தாக்குதலை நியாயப்படுத்தும் ஏதோ தனிப்பட்ட நலன் கருதிய கூற்றாக அது அமைந்திருந்தது.

தம்மைத் தவிர வேறு யாரும்தான் தமது துன்பங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற தமிழ் சமூகத்தில் நிலவும் கடந்த 15 வருட நழுவல் வாதத்தின் அம்சம் அது.

இது விடயத்தில் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கேள்விக்கு சிறீகாந்தா அவர்கள் நேரடியாகப் பதிலளிக்க முடியவில்லை. எதற்கெடுத்தாலும் தீவுப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் நேர வன்முறைச் சம்பவம் ஒன்றையே சிறீகாந்தா அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்.

புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள், ஒற்றுமை சிதறடிக்கப்படகூடாது, பழையவற்றை மறந்துவிடுவோம் என்றவாறே அவரின் கூற்றுக்கள் இடம்பெற்றிருந்தன.

அவர் ஒற்றுமை என்று கூறியது புலிகளின் மேலாதிக்கத்துக்கு கட்டுப்படுவதை. அவர் மறந்து விடுவோம் என்று கூறியது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சகோதரப் படுகொலைகளை.

குறிப்பிட்ட ஒரு குழுவின் மேலாதிக்கத்தின் கீழ் செயற்படுவதை ஒற்றுமை என்று கூறுவது ஜனநாயக விரோதமானதாகும். அந்த மேலாதிக்கத்தை சுயநலன்களுக்காக ஏற்றுக்கொள்ளும் போது தமிழ் சமூகத்தில் நடைபெற்ற அநீதியை மறந்து விடுவதென்பது தார்மீக ரீதியில் சமூகத்திற்குத் துரோகம் இழைக்கும் நிலைப்பாடாகும்.

இந்தப் படுகொலைகளை நிறுத்துவதென்பது சரணாகதியின் அடிப்படையில் அல்ல- வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் மக்களும், அரசியல் செயற்பாட்டாளர்களும் இருக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே.

ரவிராஜ் அவர்கள் நாங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க வந்த ஜனநாயக அரசியல் கட்சி. இயக்கங்கள் தமிழ் மக்களைப் பாதுகாக்க வந்தவை என்று பேசினார்.

தமிழ் தேசியவாத அரசியலில் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி இறுதியாக தமிழர் விடுதலைக் கூட்டணி பாரம்பரியத்தை நாம் மறந்து விட முடியாது. ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் பிரசவத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு மறக்க முடியாத பாத்திரம் இருந்தது. அது தொப்புள் கொடி உறவு. இன்று புலிகளின் ஆயுத அரசியலில் காணப்படும் சகோதரப் படுகொலை அல்லது துரோகிகளை உடல் மீதியின்றி அழித்தல் என்ற வன்முறைக்குரிய சித்தாந்தம் அங்கிருந்துதான் அடுத்த சந்ததிக்கு வாரிசு உரிமையாக வழங்கப்பட்டது.

> ரெலோ தலைவர் சிறீ சபாரட்ணம் அவர்களின் படுகொலைக்குப் புலிகள் பொறுப்பாளிகள் அல்ல என்று பேசியது, தமது தற்போதைய நலன்களுக்காக அந்தப் படுகொலையை அடகு வைத்தது போல் இருந்தது. இந்திய 'றோ' தான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பது போல் அவர் குற்றம் சாட்டினார். அதாவது 'றோ' நினைத்திருந்தால் அந்தக் கொலையைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்பது அவரது வாதம். ஊரறிய உலகமறிய புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சக இயக்கத்தின் மீதான படுகொலைத் தாக்குதலை நியாயப்படுத்தும் ஏதோ தனிப்பட்ட நலன் கருதிய கூற்றாக அது அமைந்திருந்தது.

எனவே வன்முறை அரசியலுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லையென்று ஒதுங்கிவிட முடியாது. தமிழீழ தேசிய விடுதலை இராணுவம் என்ற அமைப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் தலைமையில் நிறுவ முயன்றதையும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தார். எனவே தமிழர் விடுதலைக் கூட்டணி இதில் தமது பொறுப்பிலிருந்து நழுவி விட முடியாது.

உரத்துச் சத்தமிடுவதன் மூலம் நியாயமான வாதப் பிரதிவாதங்கள் அடிபட்டுப் போகும் நிலை காணப்பட்டது. எனினும் சில உண்மைகள் அழுத்தி உரைக்கப்பட்டன.

ஆனால் 1983 இன் பின் தமிழர் பெற்றது என்பதை விட இழக்கப்பட்டவைதான் அதிகம். ரெலோ இயக்கத்தின் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மூலம் ஈழப் போராட்டத்துக்கான தமிழ் மக்களின் மானசீக ஆதரவு இழக்கப்பட்டது.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தேடித் தரப்பட்ட சர்வதேச ஆதரவும் 1980 களின் நடுப்பகுதியில் இழக்கப்பட்டது.

இயக்கங்களிடமிருந்து மக்கள் ஒதுங்கிக்கொள்ளும் போக்கு அதிகரித்தது.

இந்தியாவுடன் பகைமை பாராட்டி பெருமைக்குரிய சர்வதேச தலைவரான ஆசிய ஜோதி நேருவின் பேரனும் தென்னாசியாவின் பெருமைக்குரிய பெண்மணி இந்திரா காந்தி அவர்களின் மைந்தனுமான ராஜீவ்காந்தி அவர்கள் ஈழத் தமிழ் பாசிசத்திற்குப் பலியானார்.

தமிழ் மக்களின் மனங்களில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்த அமிர்தலிங்கம் அவர்களும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் பத்மநாபா அவர்களும் தமிழ் பாசிசத்திற்குப் பலியானார்கள்.

முஸ்லிம் மக்களுடன் பகைமைத் தீ வளர்க்கப்பட்டது. எல்லைப் பிரதேச ஏழைச் சிங்கள மக்கள் மீதான படுகொலைத் தாக்குதல்கள், புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் மீதான தாக்குதல்கள் எல்லாமே ஈழப் போராட்டத்தைப் பீடித்துவிட்ட தீராப் பிணியை உலகுக்கு உணர்த்தின.

83 இற்குப் பிந்திய வரலாற்றில் இவற்றைப் பதிவு செய்யாமல் வேறெவற்றைப் பதிவு செய்வது!

மனிதாபிமானத்தையும், ஜனநாயகத்தையும் தொலைத்துவிட்ட வெற்றிகள் யாருக்கு தேவை?

83 இற்குப் பிந்திய நிலைமைகளைப் பற்றி விரிவான விவாதம் தேவை. வரலாற்றின் இருண்ட பக்கங்கள் வெளிச்சமிட்டுக் காட்டப்பட வேண்டும்.

பேரினவாதிகள் செய்யாததையும் தமிழர்கள் பெயரில் தமிழர்கள் செய்திருக்கிறார்கள்.

---

## கேட்பாரற்ற ஊழல் மோசடிகள்

# ஏயார் லங்கா ஊழல்-ரணிலின் புதிய தலையிடி!

**ஸ்ரீ**லங்கா ஏயார்லைன்ஸ் நிறுவனத்தின் பங்குகளை எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்திற்கு 1998ல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தில் விற்பனை செய்தபோது, அது தொடர்பாக நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் அப்போது எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு சூடு பறக்க விவாதம் நடத்தியது ஞாபகம் இருக்கலாம்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க அப்போது சுமக்க முடியாத ஃபைல் கட்டுகளுடன் பாராளுமன்றத்திற்கு வந்து ஆதாரங்களுடன் விவாதித்து பொ.ஐ.மு. அரசின் ஊழல் மிக்க கொடுக்கல் வாங்கல் என்று இதனை வர்ணித்தார்.

இதே எமிரேட்ஸ் நிறுவனத்துடன் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிருவாகம் தொடர்பாக திறைசேரியின் செயலாளரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவுமான சரித்த ரத்வத்த கடந்த மாத ஆரம்பத்தில் செய்து கொண்ட ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை மிகுந்த சந்தேகத்திற்கும் சர்ச்சைக்கும் உள்ளாகியிருக்கிறது.

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிருவாகத்தில் இலங்கை அரசாங்கத்தின் கையிலிருந்த கொஞ்ச நஞ்ச பிடியையும் தளர்த்தி எமிரேட்ஸ் நிறுவனம் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் கையிலெடுக்கும் விதத்தில் திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த, எமிரேட்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஷேக் அஹமட் பின் சைத் அல் மக்தூமுடன் புரிந்துணர்வுக்கு வந்திருக்கிறார். இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசுக்கு அல்லது தேசிய சொத்துக்கு ஏற்படும் நட்டம், நீண்ட காலப் பாதிப்பு என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட விதம் தான் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. நிதி அமைச்சருக்குக் கூட இந்த உடன்படிக்கை குறித்து எதுவும் தெரியாது. அமைச்சரவை அங்கீகாரம் பெறுவது எப்படி இருந்தாலும் ஒப்புக்காகக் கூட அறிவிக்கப்படவும் இல்லை. வெறுமனே சரித்த ரத்வத்தவின் பரம்பரைக் காணி ஒன்றை விற்பது போல் இந்த வியாபாரம் நடந்து முடிந்திருக்கிறது. பொதுச் சொத்து ஒன்றின் நிருவாகத்தை தனியாருக்குக் கையளிப்பது தொடர்பில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய எந்தவொரு முறையான சட்ட திட்டங்களும் அனுசரிக்கப்படாமல் செய்துகொள்ளப்பட்டிருக்கும் இவ் ஒப்பந்தம் செல்லபடியாகாது என்று சட்டமா அதிபர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். ஆனால் ஒப்பந்தம் ஜுலை 31ந் திகதி முதல் அமுலுக்கு வந்திருக்கிறது.

இது வெறுமனே ஒரு உதாரணம் மட்டும்தான். அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இருந்து வெளியில் கசியும் இவ்வாறான முறைகேடுகள் குறித்த தகவல்கள் நாட்டுக்கு சர்வதேச அளவில் மிக மோசமான அபகீர்த்தியைத் தேடிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

### அதிருப்தி அமைச்சர்களின் பட்டியல்

அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் குறித்து எண்ணற்ற புகார்கள். பிரச்சினை என்னவென்றால் இவற்றை யார் விசாரித்து, யார் யாருக்குத் தண்டனை கொடுக்கப் போகிறார்கள், எப்படித் தடுக்கப்போகிறார்கள் என்பது தான்.



சரித்த ரத்வத்த

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், தான் பணிப்பாளராக இருக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கு அரசாங்கக் காணியை விற்றுள்ளதாகப் புகார் கிளம்பியுள்ளது. பிரதமர் அலுவலகத்தின் தலைவர் மீதே இவ்வாறான மோச டிக் குற்றச்சாட்டுக்கள் கிளம்புவது ஒரு நாடு என்ற வகையில் மிகவும் கவலைக்குரிய நிலைமை.

பிரட்மன் வீரக்கோன் மீதான இந்த ஊழல் குற்றச்சாட்டு வெளிவந்ததை அடுத்து அவர் குறிப்பிட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் இருந்து விலகுவதாகக் கூறி இராஜினாமாக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரிய வருகிறது. சாதாரண அதிகாரிகள் மத்தியில், திணைக்கள கூட்டுத்தாபன தலைவர்கள் மத்தியில் ஊழல் இருக்கும் என்றால் அதனை அரசாங்க உயர்மட்டம் முறையாகக் கையாளும் என்ற நம்பிக்கையில் இருக்க முடியும். ஆனால் அரசாங்கத்தின் தலையாய பொறுப்புக்களில் இருப்பவர்கள் மீதே இத்தகைய குற்றச்சாட்டுக்கள் வருவது மிகவும் சிக்கலான நிலைமை. இது வெளிநாட்டு நிதியுதவிகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஒரு புறமிருக்க, கீழ் மட்டத்தில் ஊழலை ஒழித்தல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது.

அமைச்சர்கள் மீது பெருமளவு மோசடிக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

கடலோர அபிவிருத்தித் திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய நிதியில் அமைச்சர் மகிந்த விஜயசேகரவினால் பாரிய மோசடி இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நிதியை மீளப்பெற்று இத் திட்டத்தைக் கைவிடுவது குறித்து ஏ.டி.பி.ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. நிதி ஒதுக்கீடு தொடர்பாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கும் திறைசேரிக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் இன்னும் முடியவில்லை.


சண்டே லீடர் ஆங்கிலப் பத்திரிகை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமானவர்களால் நடத்தப்படுவது. பிரதமர் விரும்பாத விடயங்கள் அதில் பிரசுரமாகாது என்பது பத்திரிகைத் துறையில் நிலவும் பொதுவான கருத்து. ஆனால் கடந்த சில காலங்களாக இந்தச் செய்தித்தாள் அமைச்சர்கள், பிரதமருக்கு நெருக்கமான அரசாங்க அதிகாரிகள் என்று ஒவ்வொருவரினதும் வண்டவாளங்களைத் தேடிக் கண்டுபிடித்து பிரசுரித்து வருகிறது. பிரதமருக்கு மிகவும் நெருக்கமான பத்திரிகை ஏன் இப்படி நடந்துகொள்கிறது என்பது அடுத்துள்ள கேள்வி. ஊழலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தின் ஒரு அங்கமாக ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடன்தான் இவை அம்பலப்படுத்தப்படுகின்றனவா? அல்லது பிரதமரை மீறி இவை வெளிவருகின்றனவா? என்று புரியவில்லை. எப்படியிருந்தாலும் ஐ.தே.மு.அரசுக்குள் கட்டுப்பாடற்ற விதத்தில் ஊழலும், மோசடியும் இடம்பெற்று வருவதைப் பத்திரிகைகள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த பொ.ஐ.மு. அரசின் மீது தெரிவிக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டுக்களில் பாரிய அளவிலான ஊழல்களும் அடங்கும். அவற்றை ஒழிப்பதாகக் கூறித்தான் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது. ஐ.தே.மு.அரசு ஐக்கிய தேசிய நிறுவனமாக மாறிக்கொண்டிருக்கிறது. தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை மீண்டும் ஒரு தடவை மீட்டுப் பார்ப்பது பொருந்தும். ■



மூலப் பழம்பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்;
காலப் பெருங்களத்தின் மீதே - எங்கள்
காளி நடமுலகக் கூட்டம்!

சுப்பிரமணிய பாரதியார்-



# மந்திரக் குச்சிகள்

## பாப்பா முரசு சிறுகதை

ஒரு நாள் சக்கரவர்த்தி அக்பர் வழக்கம் போல் தனது அரசவையைக் கூட்டினார். அவர் மக்களின் குறைகளைக் கேட்டறிய தனி நேரம் ஒதுக்கியிருந்தார்.

ஒரு நாள் ஒரு வியாபாரி வினோத மான வழக்குடன் நீதிமன்றம் வந்தார்.

"பாதுஷா அவர்களே, ஒரு தோல் பையினுள் தங்க நாணயங்கள் வைத்து, அதனைப் பத்திரமாக அலுமாரியினுள் பூட்டி வைத்திருந்தேன். ஆனால், மறு நாள் அலுமாரியைத் திறந்து பார்க்கை யில் அந்தத் தோல் பையைக் காண வில்லை. என்னிடம் நான்கு உண்மை யான வேலைக்காரர்கள் உள்ளனர். அவர்களுள் ஒருவனே இத் திருட்டைச் செய்திருக்கக் கூடும் என நான் சந்தே கப்படுகிறேன். அவர்கள் நால்வரும் தாங்கள் குற்றமற்றவர்கள் எனக் கூறு கின்றனர். நான் உண்மையைக் கண்டு பிடிக்க ஒருவரை அடித்தாலும், மற்ற மூவரும் வேலையை விட்டுவிடுவர். அவர்கள் நால்வரையும் தண்டிக்காத வகையில் நான் குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டும்." எனக் கூறினார்.

"இது மிகப் பெரும் பிரச்சினையே.



ஏனெனில், சாதாரணமாக, அவர்களை அடிப்பதன் மூலம் உண்மையான திரு டன் தன் திருட்டை ஒப்புக்கொள்வான். ஆனால், அது அவர்களைத் துன்புறுத் தும். ஆதலால்தான் அவ்வாறு வேண் டாம் எனக் கூறுகிறீர்கள்", என அக்பர் கூறினார். அவர் பீர்பாலை நோக்கி, "பீர்பால், இவ் வழக்கை நீ தீர்த்துவைக்க வேண்டும். உண்மையான திருடனை, அப்பாவியான வேலைக்காரர்களைத் துன்புறுத்தாமல் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை நினை வில் வைத்துக்கொள்." என்றார்.

"தங்கள் ஆசைப்படியே அது நடக் கும் பாதுஷா! தாங்கள் திருப்திப்படும் அளவுக்கு சீக்கிரமாக இவ் வழக்கை நான் தீர்த்து வைக்கிறேன்," என பீர்பால் கூறினார்.

பிற்பகலில் அந்த நான்கு வேலைக் காரர்களையும் பீர்பால் அழைத்து, அவர் களை விசாரணை செய்தார். நால்வரும் தாங்கள் நிரபராதிகள் எனக் கூறினர்.

"நால்வருள் யார் திருடன் எனக் கூறி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது திருடனைக் கண்டறிய எனது மந்திரக் குச்சிகளை உபயோகிக்க வேண்டும் போல் உள்ளது" என பீர்பால் கூறினார்.

பிறகு நான்கு குச்சிகளை எடுத்து அவற்றில் ஒவ்வொருவருக்கும் ஒன்றி னைக் கொடுத்தார்.

"இவை சாதாரணக் குச்சிகள் என எண்ணிவிடாதீர்கள்!!" என எச்சரித்தார். "இவை மந்திரசக்தி வாய்ந்த குச்சிகள். இக் குச்சியை நால்வரும் இன்று இரவு முழுவதும் வைத்துக்கொள்ள வேண்டும். யாருடைய குச்சி நான்கு அங்குலம் வளர்கிறதோ அவனே திருடன். இக் குச்சியுடன் நாளை காலையில் வாருங் கள்", எனக் கூறி பீர்பால் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அப்போது, உண்மையான திருடன் பீர்பாலிடமிருந்து தப்பிக்க ஒரு யோசனை செய்தான். தன்னிடம் உள்ள குச்சியில் நான்கு அங்குலம் வெட்டிட யோசனை செய்தான். அப்போது பீர்பால் கூறியபடி மந்திரக் குச்சி நான்கு அங்குலம் வளர்ந்தாலும், அது பழைய குச்சியைப் போலவே காணப்படும். ஆதலால், ஒரு கூர்மையான கத்தியால் அக் குச்சியை நான்கு அங்குலம் வெட்டினான்.

மறுநாள் காலை நான்கு வேலைக் காரர்களும் தங்கள் குச்சிகளோடு பீர் பாலை காணச் சென்றனர். அக் குச் சிகளைக் கண்ட உடனேயே பீர்பால் திருடன் யார் என்பதை அறிந்தார். மற்ற மூன்று வேலைக்காரர்களையும் அனுப்பிவிட்டார்.

"நீ தான் அந்தத் தங்க நாணயங்கள் அடங்கிய பையைத் திருடியவன் என எனக்குத் தெரியும்", என பீர்பால் மீதி மிருந்த ஒரு வேலைக்காரனிடம் கூறி னார். "எவ்வாறு கண்டறிந்தேன் என்றால் நான் கொடுத்த குச்சிகள் எந்தவித மந் திரசக்தியும் உடையவை அல்ல. அவை சாதாரண குச்சிகளே. யார் உண்மை யான திருடன் என அறிந்துகொள்ள நான் வீசிய வலை. உன்னுடைய குற்ற உணர்வே உன்னை நான்கு அங்குலம் வெட்டிடச் செய்தது!"

பீர்பால் சக்கரவர்த்தி அக்பரிடம் அவனை அழைத்துச் சென்று நடந்த அனைத்தையும் கூறினார். பீர்பாலின் திறமையைச் சக்கரவர்த்தி மெச்சினார்.

"எங்கு அந்தத் தங்க நாணயங்கள் அடங்கிய பையை மறைத்து வைத்துள் ளாய் எனக் கூறு", என குற்றத்தை ஒப்புக்கொண்ட திருடனிடம் கேட்டார்.

தனது தங்க நாணயங்கள் திரும்பக் கிடைத்ததை எண்ணி வியாபாரி மகிழ்ச்சி அடைந்தார். எல்லோரும் பீர்பால் மீது புகழ் மழை பொழிந்தனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.08.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **508**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 505


பரிசுக்குரியவர்:

வி.ராகுலன்,
பரமனைனார் கோயில் வீதி, ஆரையம்பதி -01.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி.அவிநயா வாலசிங்கம்,<br>20/08, பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு. | ஆத்மராசா ஜெயந்தி,<br>212 காந்திநகர், அன்புவழிபுரம், திருகோணமலை. |
| கருணாநிதி ரெளகிதாஞ்சன்,<br>கமு/நாவலர் வித்தியாலயம், பாண்டிருப்பு - 01. | பா.கீர்த்தனா,<br>அமிர்தாம்பிகை த.க.பாடசாலை, சாவகச்சேரி. |
| ஆர்.ரிஸானா,<br>தில்லையடி, புத்தளம். | வி.அபிராம்,<br>மணல் தோட்டம், கற்பிட்டி. |
| ஜயதீப் விஜயகுமாரன்,<br>இந்துக் கல்லூரி, கொழும்பு - 04. | ஜெ.ஜெனோசன்,<br>335/5 மோதர வீதி, கொழும்பு - 15. |
| எஸ்.தமயந்தி,<br>16, ஸ்ரீதிஸ்ஸகம, தும்மல தெனியா, வரகாபொல. | கவிப்பிரியா,<br>பது.தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |

## இந்த வாரப் புதிர்



இதில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

## விடுகதைகளும் விடைகளும்

1. உரித்தேன் உரித்தேன் கண்ணீர் வடித்தான் அவன் யார்?
2. அடுக்கடுக்காய் இருந்தாலும் பிரித்த பிறகு அடுக்க முடியாது அது என்ன?
3. ஓங்கி எறிபட்டவன் கண்ணீரோடு உடைந்து போனான் அவன் யார்?
4. நெருப்பில் வெந்தாலும் சாகாதவன் கை நழுவி விழுந்தால் நொறுங்கிப் போவான் அவன் யார்?
5. மண்ணுக்குள் கண்டெடுத்த மங்களம் மங்கலப் பெண்ணுக்கெல்லாம் மங்களம் அது என்ன?
6. அடித்தான் அழவில்லை இசை வந்தது அது என்ன?
7. சொன்னதை திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை அல்ல அது என்ன?
8. கறுத்தவனை கடித்தால் ருசித்தான் அவன் யார்?
9. வெற்றிலை போடாமலே சிவந்த வாய்க்காரன் அவன் யார்?
10. ஆழ்கடலில் உருவானவன் அலங்காரத்தில் முதலானவன் அவன் யார்?

### விடைகள்

1. வெங்காயம்
2. வெள்ளைப்பூண்டு
3. சூறைத் தேங்காய்
4. மண் பானை 5. மஞ்சள்
6. மேளம் 7. எதிரொலி
8. கரும்பு 9. கிளி 10. முத்து

## அதிசய உலகம்!



### ஸ்பெஷல் டயட்!

ராணித் தேனீ இடும் முட்டையி லிருந்து குஞ்சு லார்வாக்கள் வெளியே வந்தவுடன் வேலைக்காரத் தேனீக்கள் ஒரு சில லார்வாக்களைத் தனியாகப் பிரித்தெடுத்து ஸ்பெஷல் அறையில் வைத்து ராயல் உணவான ஒருவகை க்ரீமி ஜெல்லியை கொடுத்து போஷிக் கும். இந்த ஜெல்லிகளில் ப்ரோட்டீன், விட்டமின் சத்துக்கள் மிகுந்து காணப் படும். தேனீக்களின் தலையிலுள்ள ஒருவகை நரம்பிலிருந்து உருவாகும் இந்த ஜெல்லியைச் சாப்பிட்டு வளரும் லார்வாக்களே பின்னாளில் ராணி தேனீக் களாகிறது. மற்ற லார்வாக்களுக்கு வழக்கமான உணவான தேன் மற்றும் மகரந்த கலவையே கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த பாரபட்சம் என்கிறீர்களா? ராணி தேனீக்கள் பின்னாளில் ஒரு நாளைக்கு 1,500 முட்டைகள் இட வேண்டும். தன் வாழ்நாளில் 10 இலட்சம் முட்டைகளாவது உற்பத்தி செய்துவிடும் இந்த ராணி தேனீக்கள். இதைத் தவிர வேறு வேலை இவற்றிற்குக் கிடையாது. இதற்கு உடம்பில் சத்து வேண்டாமா? அதற்காகத்தான் இந்த ஸ்பெஷல் உணவு! தேனீக்கள் தாய்மையை எப்படி மதிக்கிறது பார்த்தீர்களா?




### கொக்கி தவளை!

கொக்கி தவளை எனப்படும் தவளைகள் இரண்டு அங்குல நீளத்திற்கு இருக்கும். இவை இரவில் மரத்தின் உச்சிக் கிளைகளில் தங்கிக்கொண்டு, தங்களது உணவான பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். காலை, பொழுது விடிந்து பறவைகள் விழித்துக் கொள்வதற்கு முன்னால் மரத்தை விட்டுக் குதித்து குதித்து இறங்கி கீழே வந்து பகல் முழுவதும் தரையில் இருக்கும். அப்போது இரவு முழுவதும் காய்ந்து போன தோல்களுக்குத் தேவையான ஈரப்பசையை மண்ணில் இருந்து உறிஞ்சிக்கொள்ளும். பிறகு பொழுது சாய்ந்ததும் தனது எதிரிகள் உணவிற்காக வெளியே வருவதற்குள்ளாக மரக்கிளைகளின் உச்சிகளுக்குத் திரும்பச் சென்று விடும்.

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. பிரம்மா படைத்த முதல் பெண் என்று இந்து புராணங்கள் கூறுவது யாரை? **அகல்யா**
2. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளின் ஓய்வு கால வயது எத்தனை? **65 வயது.**
3. கை விரல் ரேகை பதிவின் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையை முதன் முதலில் மேற்கொண்ட நாடு எது? **ஆர்ஜெண்டினா**
4. சைலென்சர் துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு? **ஹிராம் ஸ்டீவேன்ஸ் மேக்சிம் 1908ம் ஆண்டு.**
5. அமெரிக்க ஜனாதிபதிகளில் எத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்? **4 பேர். (ஆபிரஹாம் லிங்கன், கார்பீல்ட், மெக்கின்லே, ஜான்கென்னடி.)**
6. மரண தண்டனைக்கு மின்சார நாற்காலி முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது எப்போது? **1850ம் ஆண்டு.**
7. இஸ்ரேலிய பாராளுமன்றத்தின் பெயர் என்ன? **நெஸட்.**
8. மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி எது? **கல்லீரல் (Liver) என்னும் பித்தநீர் சுரப்பி.**
9. தொலைவில் உள்ள பொருளின் அதிக வெப்பநிலையை அறிய உதவும் சாதனத்தின் பெயர் என்ன? **பைரோ மீட்டர்.**
10. ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள் எது? **செப்டெம்பர் 5ம் திகதி.**

## அறிவுத் தேடல்




**சென்ற வாரப் புதிரின் விடை**

படத்தில் அம்புக்குறி காட்டும் இடங்களுக்கு எந்த வட்டத்தை அம்புக்குறி காட்டுகிறதோ அதை நகர்த்தி வைத்தால் போதும். இறுதிப் படத்தில் காட்டப்பட்டுள்ளபடி ஆறு வட்டங்களும் ஒரு வட்டத்திற்குள் இருப்பது போல் வட்ட வடிவமாகக் காட்சியளிக்கும்.

# பேசும் பூனை



சிறுவர்களுக்காக விளையாட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் செகா டொய்ஸ் என்ற அமெரிக்க நிறுவனம் புதியதொரு பூனையை உற்பத்தி செய்திருக்கிறது. வித்தியாசம் என்ன என்றால் இதற்கு பற்றரி மூலம் மின்சாரத்தை வழங்கியதும் சரியாக உங்கள் வீட்டுப் பூனை கத்துவது போல் "மியாவ்... மியாவ்" என்று சொல்லும். இந்த வகை பேசும் பூனையின் விலை 250 டொலர்கள். நம் நாட்டு மதிப்பில் 25 ஆயிரம் ரூபாய்.




# எனக்குப் பல நூறு புதல்வர்கள்



**ச**தாம் ஹுசையினின் மகன்கள் இருவரும் இறந்துவிட்டதாகப் பெரும்பாலும் உலகம் நம்பிவிட்டது. இந்தக் கொலைக்கு அமெரிக்கா பெற்றுக் கொடுத்த பிரசாரம் அதன் உள்நாட்டு மக்களைத் திசைதிருப்ப பெரிதும் உதவியதாகக் கூறுகிறார்கள் ஆய்வாளர்கள். கொல்லப்பட்டவர்கள் உதேய், குசேய் சகோதரர்கள்தான் என நம்பக்கூடிய போதியளவு ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளன. டுபாய் தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பிய சதாம் ஹுசையினின் கடைசி ஒளி நாடாவில் இந்தக் கொலைகள் குறித்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. அமெரிக்காவுக்கெதிரான போரில் தனது புதல்வர்கள் இருவரும் வீரச்சாவடைந்ததாக அந்த ஒளிநாடாவில் பேசிய குரல் கூறுகிறது. "நீங்கள் கொன்றது உதேய், குசேய் என்ற இருவரை அல்ல. இரண்டு போராளிகளை. (ஜிஹாத்) புனிதப் போரில் இறுதி வரை சண்டையிட்டு அவர்கள் உயிர் மாய்த்தார்கள். எனக்கு இன்னும் பல நூறு மகன்கள் இருக்கிறார்கள். அனைவரும் அமெரிக்க சியோனிச வாதத்தை எதிர்த்துப் போரிடுவார்கள். இறுதி வெற்றி எங்களுக்கே" என்று உறுதியான குரலில் சொல்கிறார் சதாம்.

இப்படிக் கொல்லப்பட்டவர்கள் தன் மகன்மார்தான் என்று சதாம் ஒத்துக் கொண்டாலும் இனிமேல் இவர்களைத் தேடாமல் இருக்கட்டும் என்பதற்காகக் கையாண்ட ஒரு உத்தியாகவும் இது இருக்கலாம் என்றும் சில சந்தேகங்கள் நிலவத்தான் செய்கின்றன.

# மனிதப் பசி




**அ**வுஸ்திரேலிய அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட ஒரு புகைப்படம் இது. தூர கிழக்கு ஆசியா மற்றும் அவுஸ்திரேலிய கடற்பகுதிகளில் வாழும் மிக ஆபத்தான ஒரு வகை சுறா மீன் இது. சாதாரண சுறாக்களை விட ஆபத்து மிக்கது. சுழியோடிகளோ சிறிய படகுகளோ இவற்றிடம் சிக்கினால் மரணம்தான். மனித மாமிசத்தை இவை விரும்பிச் சாப்பிடும் என அறியப்பட்டிருக்கிறது. இந்த சுறா மீன் பிடிக்கப்பட்டு நீருக்கடியில் பாதுகாப்பாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இது எப்போது பிடிக்கப்பட்டது என எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# எண்ணெய் இல்லாத பூமி

**ஆ**பிரிக்காவின் லைபிரியா மிக மோசமான உள்நாட்டு யுத்தத்தைச் சந்தித்திருக்கும் நாடு. நாளாந்தம் நூற்றுக் கணக்கான பொதுமக்களின் சடலங்களை தலைநகர் மொன்றோவியாவில் காணக் கூடியதாக இருக்கிறது.

தீவிரவாதிகள் அரசாங்கப் படைகளை எதிர்த்துப் போரிட்டு தலைநகரின் முக்கிய பல பகுதிகளைக் கைப்பற்றிவிட்டபோதிலும் சர்வதேச தலையீடு மிகத் தாமதமாக தேவைக்குக் குறைவாகத்தான் நடக்கிறது. தனது படைகளை இன்று, நாளை என்று நாள் சொல்லிக் கொண்டு லைபிரியாவின் கடல் எல்லையிலேயே நிறுத்திவைத்துவிட்டது அமெரிக்கா. பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்க அவசரமாகப் படைகளை அனுப்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ரொம்பவும் ஆறுதலாக யோசித்துத்தான் அமெரிக்கா செயற்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது ஒரு பத்திரிகையாளர் வழங்கிய பதில், "அங்கே பெறுமதி மிக்க எண்ணெய்க் கிணறுகள் கிடையாது. அதனால் லைபிரிய மக்களுக்கு உயிரோ ஜனநாயகமோ அவசியமில்லை என அமெரிக்கா கருதுகிறது" என்பதாகும். இங்கே படத்தில் லைபிரிய அரச படை வீரர் ஒருவர் தனது துப்பாக்கியுடன் காவல் நிற்பதையும், முகாம் ஒன்றில் தீவிரவாதிகள் பயிற்சி பெறுவதையும் காண்கிறீர்கள்.





## தகவல் பெட்டி



எஸ்.பி.சரண் — மீரா வாசுதேவன்
படம்: உன்னை சரணடைந்தேன்

## ரதியிடம் துப்பாக்கியைக் காட்டி 'ம

'அன்பே உன் வசம்' என்றொரு படம். இதன் தயா
இவரது மகன் யோஹன். ஹீரோயின் 'சொல்ல மறந்த
தயாரிப்பாளர் அழகன் தமிழ்மணி 'சோலைக்குயில்', 
போன்ற படங்களைத் தயாரித்தவர். சுமார் பத்து வருட
தயாரிக்க வந்த தமிழ்மணிக்கு ஹீரோயினின் நடவடிக்
தனக்கு தயாரிப்பாளர் என்று மரியாதை கூடத் தராமல்
கொண்டு அமர்வது, நினைத்த நேரத்துக்குப் படப்பி
ஒவராக டார்ச்சர் செய்தார் ரதி.

இதைக் கண்டு கொதித்த தயாரிப்பாளர் ஒரு நாள்
போய் துப்பாக்கியைக் காட்டி, "எனக்கு மரியாதைதான்
எடுக்கிற என்னை இன்சல்ட் பண்ணினா சுடக்கூட தய
விட்டு வந்தாராம்.

அப்புறம் ரதி எப்படி நடந்துகொண்டார் என்பதைச்

## அர்ஜுனைக் கவிழ்த்த தயா

சகட்டுமேனிக்கு செலவை இழுத்து பல தயாரிப்
என்ற நல்ல பெயர் வாங்கிய அர்ஜுன் கடந்த ஒரு மா
எதுவுமின்றி வீட்டில் இருக்கிறார்.

அவரது கடைசி ரிலீசான 'பரசுராம்' படத்தை எடுத்
சுமார் மூன்று கோடி நட்டம்.

இந்த நட்டம் எப்படி ஏற்பட்டது, இதற்கு எவ்வாறு
காரணமாக இருந்தார், எத்தனை முறை கதையை ம
போன்ற கசப்பான அநுபவங்களை பரசுராம் தயாரிப்பா
பிரபாகரன், ஒவ்வொரு கம்பெனியாக விவரித்துக்கொண்
இதனால் அர்ஜுனை புதிதாக ஒப்பந்தம் செய்ய த
தயங்க, அவரது மற்றைய படங்களான 'ஒற்றன்', 'ம
ஆகிய படங்களும் ஃபைனான்ஸ் பிரச்சினையால் படப்பி
காமல் நிற்கின்றன.



## உற்சாகத்தில் ராஜ்கிரண்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் மற்றும் ஹீரோவாகக் களம் இறங்கியுள்ள ராஜ்கிரணின் படத்தின் தயாரிப்பாளர் அவரது புதிய மனைவி பத்மஜோதி. படத்தின் பெயர் 'ஆதாம் ஏவாள்'.

பல மாதங்களுக்கு முன்பு, பாண்டிச்சேரியில் ஒரு மோசடி வழக்கில் தான் மாட்டி, ராஜ்கிரணையும் மாட்டிவிட்ட இந்த பத்மஜோதி, தான் திப்பு சுல்தானின் வாரிசு என்றும், அதனால் தனக்கும் ராஜ்கிரணுக்கும் பிறந்துள்ள குழந்தையும் திப்பு சுல்தானின் வாரிசு என்றும் வாய் கூசாமல் ரீல் விடுகிறாராம்.

உடல் ரீதியாக சற்று தளர்ந்து காணப்படும் ராஜ்கிரண், இந்த 'ஆதாம் ஏவாள்' பட பூஜைக்கு ஒரு வாரம் முன்பு வரை கடனாளியாய் தலைமறைவாக இருந்துவிட்டு தற்போது, பழைய கடனில் பெரும் பகுதியை அடைத்து விட்டு புதிய தெம்போடு படமெடுக்க வந்திருக்கிறாராம். இந்தப் படம் முடியும் வரை ஃபைனான்சியர்கள் உதவி எதையும் நாடப்போவதில்லையாம்.

அப்போ, திப்பு சுல்தான் காலத்து செப்பு நாணயங்கள் நிறைய கைவசம் இருக்கிறது போலிருக்கு.

## அப்செட்டில் அபிராமி

கமலின் 'சண்டியரில்' ஜோடியாக நடிக்க ஒப்பந்தமானதில் ஆரம்பத்தில் படு உற்சாகமாக இருந்த அபிராமி இப்போது சோக வெள்ளத்தில்.

பெரிய நடிகரின் பெரிய படம் என்பதால் சம்பளமே பேசாமல் ஒப்புக்கொண்ட அபிராமி தனக்கும் ஒரு நல்ல சம்பளம் தானாகவே தருவார்கள் என்று எதிர்பார்த்தாராம். ஆனால் ஷூட்டிங்கின் முதல் நாளன்று கைக்கு வந்த அட்வான்ஸைப் பார்த்து அபிராமிக்கு அதிர்ச்சி. அதிருப்தியை வெளியிலும் காட்டிக்கொள்ள முடியவில்லை.

'சண்டியர்' முடியும் வரை பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கக் கூடாது. வேறு படங்களில் ஒப்பந்தமாகக் கூடாது. ஸ்டார் நைட்களில் கலந்து கொள்ளக்கூடாது என்ற ஏகப்பட்ட நிபந்தனைகளுடன் 'ஏண்டா இந்தப் படத்தை ஒப்புக்கொண்டோம்' என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறாராம் அபிராமி.

## சினிமா எடுத்து வெறுத்துப் போன இலங்கைத் தமிழர்

லண்டனில் வசிக்கும் இலங்கைத் தமிழரான சுபா செவ்வேளுக்கு தமிழில் ஒரு படம் எடுக்க வேண்டுமென்பது நீண்ட நாள் ஆசையாம்.

முதலில், 'பேசாத கண்ணும் பேசுமே' என்ற படத்துக்கு மறைமுகமாக பைனான்ஸ் செய்த செவ்வேள் அடுத்து 'காதல் டொட் காம்' என்ற படத்தைத் தானே தயாரிக்க முன்வந்தார்.

படத்தின் வேலைகள் 95 சதவீதம் முடிவடைந்த நிலையில் தனக்கு ஏற்பட்ட கசப்பான அநுபவங்களால் வாழ்க்கையே வெறுத்துப் புலம்புகிறார் செவ்வேள்.

இங்கே நடிகர்கள் தயாரிப்பாளர்களை சுத்தமாக மதிப்பதேயில்லை. மாறாக எவ்வளவு அவமானப் படுத்த வேண்டுமோ அவ்வளவுக்கு அவமானப்படுத்துகிறார்கள். காமெடி நடிகர் வடிவேலு படத்துக்குப் பேசிய சம்பளம் முழுவதையும் வாங்கிவிட்டு மாதக் கணக்கில் 'டப்பிங்' பேசாமல் இழுத்தடிக்கிறார். இன்னொரு கதாநாயகியோ தனக்குப் படத்தில் இரண்டு பாட்டு வைத்தால்தான் அடுத்து ஷூட்டிங்குக்கே வருவேன் என்கிறார்.

'இப்படியே போனால் தமிழ் சினிமா இனி மெல்லச் சாகும்' என்கிறார் சுபா செவ்வேள்...

## செக்ஸ் அட்வைஸ் ஷூட்டிங்கை வேடிக்கை பார்க்க அனுமதியில்லை

ஷங்கர், மணிரத்னம் பாணியில் இப்போது நியூ டைரக்டர் எஸ்.கே.சூர்யாவும் தனது படப்பிடிப்புத் தளங்களுக்குள் யாரையும் அனுமதிப்பதில்லை. காரணம் படத்தின் கிளுகிளு காட்சிகள்.

படத்தின் கதைப்படி தோற்றத்தில் வாலிபனும், உள்ளத்தில் குழந்தையுமாகிய சூர்யாவுக்கு சிம்ரனும், கிரணும் மாறி மாறி 'செக்ஸ்' பாடம் நடத்துகிறார்கள். இந்தக் காட்சிகளை வெளியார் யாரும் வேடிக்கை பார்க்கக் கூடாது என்பதில் டைரக்டர் சூர்யா ஜஷாராக இருக்கிறாராம்.

"நியூ' படத்துக்கு அப்புறம் தொடர்ந்து ஹீரோவாக நடிப்பீர்களா? அல்லது இந்த ஒரு படத்தோட சரியா?" என்று கேட்டால், "படம் ஹிட்டானா ஹீரோ. இல்லைன்னா வெறுமனே டைரக்ஷன் மட்டும்தான்" என்று யதார்த்தமான பதிலைத் தருகிறார் 'நியூ' ஹீரோ.



விஜயலட்சுமி
படம்: சூரி

## சினி விசிட்

## விருது பெறு

தேசிய விருதுகள் அறி
ஐந்து விருதுகளைக் குவி
அதுதான் இல்லை.
மணிரத்னம், வைரமுத்
விட தேசிய விருதை பின்
முகாமிட்டு, யாரை எப்படிக்
அத்துப்படி. இசையில் ரஹ்
அதிக முறை ரஹ்மானால்
திருக்கிறார்கள். விருதின் 
திருக்கிறார் கடந்த ஆண்டு
இப்படிப்பட்ட புலம்பலை

## சம்பளத்

ஜெட் வேகத்தில் சம்பளத்
நேற்றுவரை இந்த விஷய
பட்டியலில் சேர்ந்திருக்கிறார்.
வாங்கிக்கொண்டிருந்த சூர்ய
'காக்க காக்க' பெரிய வெற்
சம்பளத்தை அட்லீஸ்ட் 75 இ
இது தவிர தீபாவளித் திட்டம்
'பிதாமகன்' படம் வந்த பிறகு சம்பள
இதை சற்று ஓபனாகவே சொல்லி

## ...ாதை' கேட்ட தயாரிப்பாளர்

...ர் அழகன் தமிழ்மணி. படத்தின் ஹீரோ
...' ரதி.
...தினி, 'அன்புள்ள ரஜினிகாந்த்'
...டவெளிக்குப் பிறகு படம்
...ளைக் கண்டு அதிர்ச்சி.
... மேல் கால் போட்டுக்
...கு வருவது என்று

...ன் வீட்டுக்கு நேரடியாகப்
...யெம். காசு போட்டு படம்
...ட்டேன்" என்று மிரட்டி

...லவும் வேண்டுமோ?



அர்ஜுன் — ஜோதிகா

## ...ப்பாளர்

...ளை அழித்தவர்
...லமாக ஷூட்டிங்

...ரிப்பாளருக்கு

...ஜுன் முழுக்
... சொன்னார்
...அன்பாலயா
...ருகிறார்.
...ளர்கள்
...ண்டா'
... நடக்

## கருணாஸ் காட்டில் மழை

விவேக்கும், வடிவேலுவும் தயாரிப்பாளர்களின் பிரஷர் எகிறுமளவுக்கு சம்பளம் கேட்பதால் இப்போது வொடுக்குப் பாண்டி கருணாஸின் காட்டில் அடைமழை.

அறிமுகமான இரண்டாவது வருடத்திலேயே கைவசம் மூன்று டசின் படங்கள் வைத்திருக்கிறார் கருணாஸ்.

இந்த உற்சாகத்தில் கடந்த வாரம் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் கருணாஸ்.

"விவேக்குக்கும் உங்களுக்கும் சண்டையாமே?" என்று நிருபர்கள் கேட்க, "நான் சினிமாவுக்குப் புதுசு. நமக்குக் கிடைக்கிற வாய்ப்பைத் தட்டிப் பறிக்கிறாரேன்னு ஆரம்பத்துல கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். அது இப்ப சரியாகிடுச்சி.

யார் தட்டிப் பறிச்சாலும் நமக்குக் கிடைக்கிற வாய்ப்பு ஏதாவது ரூபத்துல வந்து சேர்ந்துடும்னு இப்ப தெரிஞ்சிக்கிட்டேன்" என்றவர், படத்துக்குப் படம் இரசிகர்களுக்கு விவேக் ஒரே அட்வைஸ் மழையாகப் பொழிவதையும் ஒரு பிடிபிடித்தார்.

"இரசிகர்கள் நாம அட்வைஸ் பண்ற அளவுக்கு முட்டாள்கள் இல்லை. நம்மையும் விட அவங்களுக்கு நிறையவே தெரியும். அதனால அட்வைஸ் பண்றதுல எனக்கு நம்பிக்கை இல்ல" என்கிறார் கருணாஸ்.



படம்: தத்தித்தாவுது மனசு



யோகன் — ரதி
படம்: அன்பே உன்வசம்

## அஜித்துக்கு ஷாலினி அட்வைஸ்

சர்வதேச கார் ரேஸ்களில் அஜித் கலந்து கொள்வதைப் பற்றி, இண்டஸ்ரியில் ஆளாளுக்கு ஒரு கமெண்ட் அடித்தாலும், அஜித் அதில் எதையுமே காதில் போட்டுக்கொள்வதில்லை.

தனக்கு நேரடிப் போட்டியாளரான விஜய் சற்றும் சளைக்காமல் வருடத்துக்கு ஐந்து படங்களில் நடித்துக் கொண்டிருக்க, அஜித்துக்கு சமீப வருடங்களில் தலா இரண்டு படங்கள் வெளியாவதே பெரும்பாடாகிவிட்டது.

சூழ்நிலை இப்படி இருக்க, திடீர் திடீரென்று படப்பிடிப்புக்களை இரத்துச் செய்துவிட்டு, அவர் வெளிநாடுகளுக்குப் பறந்துவிடுவது, தயாரிப்பாளர்களையும், இரசிகர்களையும் கவலையடையச் செய்துள்ளது.

இதை சூசகமாக உணர்ந்துகொண்டாரோ என்னவோ 'ஆஞ்சநேயா' படப்பிடிப்பு நடந்துகொண்டிருக்கும்போது, தீபாவளிக்குப் பிறகு துவக்குவதாக இருந்த சரணின் 'அட்டகாசம்' படத்தையும் துவக்கிவிட்டார்.

கடந்த ஒரு வாரமாக 'ஆஞ்சநேயா', 'அட்டகாசம்' ஆகிய இரண்டு படங்களிலும் நடிக்க ஆரம்பித்துவிட்டார் அஜித். ஆனால் கார் ரேஸுக்கு மேலதிகமாக குறிபார்த்துச் சுடும் பயிற்சிகளிலும் ஈடுபடும் அஜித் தனது பொழுது போக்குகளை காரணம் காட்டி நடிப்பைக் குழப்பிக்கொள்ளாமல் இருக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இனிமேல் என்ன போட்டி இருந்தாலும் அதற்காக முக்கிய விஷயங்களை 'கென்சல்' ஆக்குவதில்லை என்று கவனமாக இருக்கிறாராம். மனைவி ஷாலினியின் அட்வைஸின் பின்தான் அஜித்திடம் இந்த மாற்றங்கள் என்கிறார்கள்.

## ...் டெக்னிக் தெரிந்த கூட்டணி

...ப்பட்டு, மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படம் மட்டும் ... தமிழ் இண்டஸ்ட்ரி மகிழ்ந்திருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்.

...ஆர்.ரஹ்மான் கூட்டணி படம் எடுப்பதில் செலுத்தும் கவனத்தை ...ால் வாங்குவதில்தான் அதிக கவனம் செலுத்துகிறது. டெல்லியில் ...னித்தால் விருதைத் தட்டலாம் என்கிற இரகசியம் இவர்களுக்கு ...ன விட எவ்வளவோ சாதனைகள் செய்த இளையராஜாவை விட ...து வாங்க முடிகிறது. இன்று எவ்வளவோ புதுக் கவிஞர்கள் வந் ... கூட அவர்கள் பக்கம் வீசுவதில்லை. இப்படிப் புலம்ப ஆரம்பித் ...ன்றெழுத்துப் படம் தந்த ஒரு இயக்குநர்.
...ல இடங்களிலும் கேட்க முடிகிறது.

## ...்த உயர்த்தும் சூர்யா

...உயர்த்துவதில் தமிழ் சினிமா ஹீரோக்களை மிஞ்ச ஆள் கிடையாது. ...் நல்ல பிள்ளையாக இருந்த நடிகர் சூர்யாவும் இப்போது அந்தப் ...ரக்டர், கம்பெனியைப் பொறுத்து சுமார் 40 இலட்சம் சம்பளம் ...மீப காலமாக புதிய கமிட்மெண்டுகளைத் தவிர்த்து வருகிறார். ...பெறும் என்பது அவரது நம்பிக்கை. இந்தப் படம் வெற்றி பெற்றால், ...சம் உயர்த்த வேண்டும் என்பது சூர்யாவின் விருப்பம். ...றும் சூர்யாவிடம் இருக்கிறது. தீபாவளிக்கு ரிலீஸாகும் பாலாவின் ... ஒரு கோடியாக உயர்த்த வேண்டுமென்பது சூர்யாவின் திட்டம். ...ருபவர் சூர்யாவின் மனேஜர்.

## மினி சினி

அஜித்தின் 'ஆஞ்சநேயா' படத்தில் தயாரிப்பாளர் இப்ராஹிம் ராவுத்தர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இதற்காக ராவுத்தருக்கு சம்பளமாக இலட்ச ரூபாய்க்கு செக் தந்தபோது அதை வாங்க மறுத்துவிட்டாராம் ராவுத்தர்.

---

விஜய்யின் அடுத்த படமான 'கில்லி' யின் ஹீரோயினாக 'காதல் கொண்டேன்' அனு அகர்வாலை கமிட் பண்ணியிருக்கிறார்கள். இதற்கு முன் இந்த கேரக்டரில் திரிஷா நடிப்பதாக இருந்தது.

---

'மின்சாரக்கனவு', 'கண்டுகொண்டேன் கண்டு கொண்டேனு'க்குப் பிறகு முழுமூச்சாக விளம்பரப் படங்களில் கவனம் செலுத்தி வந்த ராஜீவ் மேனன் மீண்டும் படத் தயாரிப்பில் இறங்குகிறார். ஹீரோ அநேகமாக பிரபுதேவா.

---

'ரோஜாக்கூட்டம்' சசி இயக்க, சூர்யா நடிக்கும் 'டிஸ்யூம்' படத்தின் படப்பிடிப்பு செப்டெம்பரில் துவங்குகிறது. இந்தப் படத்தில் ஸ்ரீகாந்த் கெஸ்ட் ரோலில் நடிக்கிறார்.

---

இந்த டிசம்பரோடு சினிமாவை விட்டு ஒதுங்குவதாக சிம்ரன் கூறி வருவது ஓரளவு உர்ஜிதமாகியிருக்கிறது. ஜனவரிக்குப் பிறகு கால்ஷீட் கேட்டுப் போன படங்களை நிராகரிக்கிறார் அவரது மனேஜர்.



ஸ்ருதிராஜ் — பிரசன்னா
படம்: காதல் டாட் கொம்




## பிரியமான இளைய தளபதி விஜய்க்கு....

'நாளைய தீர்ப்பு' பத்திரிகையில்
'செந்தூரப்பாண்டி' உன் திருமுகம் கண்டேன்
வசியம் செய்யும் 'வசீகரா' உன் புகழை
இலங்கைத் 'தமிழன்' சொல்கிறேன்
பகைவனுக்கு 'பகவதி'....யாகவும்
நட்புக்கு முதலிடம் கொடுக்கும்
'ப்ரண்ட்ஸ்'....ஆகவும்.
பள்ளி மாணவர்களின் மனம் கவர்ந்த
'மாண்புமிகு மாணவன்'.....னின்
'ரசிகன்'....னாகவும்
புதிய பாதையில் நடையில்
'புதிய கீதை'....யில்
புறப்பட்டு விட்டாய் நீ.....
'விஷ்ணு' உன்னை என்
'வசந்தவாசல்'....லில்
'நேருக்கு நேர்' மோத முடியாமல்
தவிக்கிறேன்
'செல்வா' சொல்லவா உனக்கு
என் காதல் கதையை
என் 'மின்சாரக் கண்ணா' உன்
'ராஜாவின் பார்வையிலே'
நான் என்னை இழந்து விட்டேன்
என் 'நெஞ்சினிலே' ஓவியம் உன்
உருவமானது
'ஷாஜகான்'....னே உன் பைங்கிளி
உன்னை
தினமும் 'நிலவே வா' என
'குஷி'....யாக அழைக்கிறேன்
'தேவா' என் கனவில்
'நினைத்தேன் வந்தாய்'
நித்தம் 'உதயா'....விடம் 'பிரியமுடன்'
நீயிட்ட முத்தம்
'என்றென்றும் காதல்' நாயகனே
தினமும் உன்னை நினைத்தால்
'துள்ளாத மனமும் துள்ளும்'
என் 'கண்ணுக்குள் நிலவு'....ஆக
விழுந்த 'யூத்' காதலா
'பூவே உனக்காக' டுயட் பாடியதோடு
நிறுத்திவிடாமல்
'காதலுக்கு மரியாதை' கொடுத்த 'பத்ரி'
நம் காதல் விளையாட்டுக்களை
'லவ்டுடே'
ஹோட்டலில் நடத்தலாமே?
'வன்ஸ்மோர்' 'சந்திரலேகா' - என
முத்தங்களை
பரிசாக கொடுத்தாய் - பின் என்னிடம்
இருந்து
கை நழுவி
என் 'பிரியமானவளே' உன்னை அடுத்த
ஜென்மத்தில் 'கோயம்புத்தூர்
மாப்பிள்ளை....'யாக
வந்து உன் கரம் பிடிக்கும் வரை
'காலமெல்லாம் காத்திருப்பேன்.'

கே.ரி.றங்கன், வயாவிளான்

## இல்லிகளின் தொல்லை

பனித்துளிகளை
என் இதயவறைகள்
தினமும் சஞ்சரித்துக் கொள்கிறது.
இந்த இராப் பொழுதுகளில்
என் வீட்டுக் குடிசையின்....
இல்லிகளின் துணைகொண்டு

தூக்கமோ! எனக்கு...
தூரமாகி விட்டது.
என் கண்களும் பாரமாக....
இந்த நிலவொளியின் ஆக்கிரமிப்பில்.....
இரவுகளும் பகல் வேளையாக.....

பகற் பொழுதுகளில் என் மனம்,
பரிதவித்து நிற்கிறது.
என் கூரை இல்லிகளுக்குள்
இந்த காரமான சூரியனின்
கோர வெப்பத்தினால்....

இவைகள் மட்டுமல்ல!
மாரிகாலத்தில் எனக்கு...
மழைகளின் தொல்லை.
கூரையின் மேல் குண்டெறிவது
போல்.....
வீரமழை பொழிந்து என்னை,
விறைக்கச் செய்கிறது.

அத்தனையும் இந்த
பொத்தல்களின் பிரதிபலன்.
மொத்தமாக அடைப்பதற்கு...
லட்சமா? இருக்கிறது?
இந்த குட்டை மனிதனிடம்.

மாடி வீட்டில் ஓடிவிளையாட எனக்கு...
கோடி ஆசைகள்.
நான் போடி மகனா?
கூலிவேலை செய்கின்ற....
பாமர மகனாச்சே!

காலம் நகர வேண்டும்.
என் காரியங்கள்,
கை கூட....

ரி.சியாம், கல்முனை – 06.



## குழப்பம்

எதிர்பார்ப்புகள் சிதைகின்றன....
கல்லில் விழுந்த
கண்ணாடிக் குவளையாய்.....
இதயம் சுக்கலாகி கிடக்குது
ஞாபகத் தளங்களில்....

கீறல் விழுந்து....
தொலைவாகியது வெளி....
எங்கெங்கு காணினும்
மனிதப் பிணங்கள்.....
இரத்தக் குளங்கள்....
எலும்புக் குவியல்கள்....
புவி மயானமாகி.....

மனிதர்களுக்குள் புதைந்துபோய்
நூற்றாண்டாகிவிட்டது.....

மனிதவர்க்கம் எல்லைகள்.....
தூர்த்து நிசம்... கழுவி
நூற்றாண்டாகிவிட்டது....
புத்தர் யேசு காந்தி நபி....
சொன்ன அகிம்சாவாதம்...
இம்சைப்பட்டு... கிடக்கிறது....

தலை சுமக்கும் கைகள்....
வெறி கக்கும் கண்கள்....
இரத்தம் சிந்தும் உதடுகள்....
அழுகி வீங்கிப் பெருத்த...
உடலோடு....

மனிதர்கள் மனிதம் தொலைத்து....
பேய்களாக அலையும்...

யுகத்தை எப்பெயரால் அழைக்க....
இருப்புகளை கொன்று தின்று....
வெறுமையாய் நீண்டிருக்கும்....
இந்த யுகத்தை.....
எப்பெயரால் அழைக்க....

பிணங்களுக்கும் எலும்புகளுக்கும்
மத்தியில்...
என்னை நான் எப்படி....
நிலைநிறுத்துவேன்.....

என் முகத்தை....
சிதைத்துப் போடும்.....
பொழுதுகளுக்கு....
நடுவே....
என் வாழ்வை விதைத்து....
எதை அறுவடை செய்ய
காத்திருக்கிறேன்...

சண்முகம் சிவகுமார், பத்தனை.

## சிதைந்து போன கனவுகள்......

நிசப்தமான பொழுதொன்றின்
நீண்ட நேரமாக.....
விழித்திருந்து நான் அழுகின்றேன்,
விடியலுக்காய் ஏங்குகின்றேன்!

உலக மயானத்தின்....
உக்கிடாத எலும்புத் துண்டாய்,
தொண்டையை அடைத்துக் கொண்ட,
ஒரு சோகம் என்னோடு....!

காசினி மீதொரு காவியம்
படைத்திட கங்கணம் கட்டினேன்!
வறுமையின் படையெடுப்போ,
கண்ணீர்த்துளிகளின் கைதியாய்
மாற்றியது என்னை!

அதனால்.....
நிசப்தமான பொழுதொன்றின்
நீண்ட நேரமாக....
விழித்திருந்து நான் அழுகின்றேன்,
விடியலுக்காய் ஏங்குகின்றேன்!

நட்புருவில் நடமாடிடும்
நயவஞ்சகர் மத்தியிலே....
நடைப்பிணமானவன் நான்...!!

செய்நன்றி, அறியாத
நண்பரோ ஏராளம்....
அவர்தம் அறிவுரையோ
அடடா....தாராளம்!!

தேர்தல் கால வாக்குறுதிகளாய்....
அவர் தம் ஆறுதல் வார்த்தைகள்!

உதட்டளவில் தேனும்
உள்ளத்தில் விஷமும் கொண்ட,
விஷமிகள் விரித்த வலையில்
விழுந்தவன் நான்....
இன்னும் எழுந்திருக்க இயலவில்லை!

வாலிபத்தின் விளை நிலத்தில்.....
விழுந்ததெல்லாம் அமில மழை!!
அமில மழை விழுந்ததனால்.....

அழிந்ததம்மா ஆசைவிதை!!

சுயநலப் பாதையிலே
உடன் பிறப்பின் பயணங்கள்.....
ஊனமுற்ற உறவுகளாலே,
உருக் குலைந்தன என் கனவுகள்....!

கனவுகள் தாங்கி வந்த நெஞ்சிலோ
கயமையாலான தழும்புகள்!!

காலத்தின் கட்டளையை
செவி சாய்க்க மறந்ததனால்....
என் சோகத்தைக் கேட்பதற்கோ!!
சொந்தமென்று யாருமில்லை!!

நிசப்தமான பொழுதொன்றின்,
நீண்ட நேரமாக....
விழித்திருந்து நான் அழுகின்றேன்!
விடியலுக்காய் ஏங்குகின்றேன்!

கலைநேசன் மர்சூன்,
மொறட்டுவை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

(பயிற்சிக் களம்)

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்


ஒரு கவிதை உருவாகும் விதம் பற்றி கவிஞர் பாரதிராமன் விளக்கிக் கூறும் ஒரு கவிதையின் ஜனனம் இது. அவர் எழுதிய கவிதையும், அது குறித்த விடயதானங்களும் நமக்கு வியப்பளிக்கின்றன.

### என் கவிதையும் நானும் – பாரதிராமன்

துளிர்த்தன கொடிகள் எனத்
தொட்டுக் குலாவினோம்
மலர்ந்தன பூக்கள் எனப்
பறித்துச் சூடினோம்
கனிந்தன காய்கள் எனக்
கவர்ந்து உண்டோம்
விளையட்டும்
வேண்டுமட்டும் என
விதைத்து மகிழ்ந்தோம்
வெள்ளம் பெருகுமென்று
தோணிகளில் தொற்றிக்
கொண்டோம்
புயல் வீசுமென்று
பாய்மரங்களை இறக்கிக்
கொண்டோம்
அக்னி நட்சத்திரத்தில்
ஆடைகளைக் குறைத்துக்
கொண்டோம்
பனி வீழ்கிறதென்று பட்டும்
கம்பளியும் போர்த்துக்
கொண்டோம்
போர்க் குழிகளில் பதுங்கி
கிடைத்ததைப்
பகிர்ந்துண்டோம்
இருளில் வாழக் கற்று
இல்லாமைகளை ஏற்றோம்
இயலாமைகளைச் சகித்து
இறைவன் செயல் என்றோம்

அடுக்கிக் கூறும் கவிதைகள் நிறையவே வந்திருக்கின்றன. சிறப்பித்துக் கூற இக் கவிதையில் வேறு ஏதாவது ஈர்ப்பு வேண்டுமே என்று சிலர் கருதக்கூடும். இரண்டாம் உலக போரின்போது ஏ.ஆர்.பி.பதுங்கு கட்டிடங்களில் விமானத் தாக்குதல் ஒத்திகைகள் நடந்தபோது ஒளிந்துகொண்ட சின்ன வயது அனுபவம் மேகத்திரை போல் என் நினைவில் வந்தாலும் அதைக் கூறுவது ஒன்றே கவிதையின் சிறப்பாக முடியாது என்று உணர முடிகிறது. சுய ரசனைக்கே சற்றுக் குறைவாகப்படுகிறது. எனவே சிறிது சிந்தித்து சில வரிகளைப் பின்வருமாறு சேர்க்கின்றேன்.

எத்தனைதான் முடிகிறது
இந்த ஏற்றமிகு மனதால்.....
அனுபவித்து ஆளவும்
அனுசரித்துப் பேணவும்
அவதிகளை ஏற்கவும்
அன்பைப் பொழியவும்கூட!
பிறந்தது பெண்
என்றபோதில் மட்டும்
பேதலித்துப் போவதேன்
பேய் மனம்?



இன்னும் இரங்கி எதிரி
அணி அகதிகளையும்
ஆதரித்தோம்
எத்தனைதான் முடிகிறது
இந்த ஏற்றமிகு மனதால் -
அனுபவித்து ஆளவும்
அனுசரித்துப் பேணவும்
அவதிகளை ஏற்கவும்
அன்பைப் பொழியவும் கூட!

கவிதையை இங்கே முடித்துவிடலாம்தான்....இதை இப்படியே கவிதை வட்டத்தில் வாசித்தால் என்ன கருத்துகள் கூறப்படக்கூடும்? மனதின் செயற்பாடுகளை விவரித்து இருக்கிறீர்கள். போர்க்கால பதுங்கு குழிகளைப் பற்றியும், போர்க்கால வாழ்க்கை முறைகள் பற்றியும் விவரித்திருக்கிறீர்களே....நீங்கள் அதை அனுபவித்திருக்க வேண்டும். அதனால்தான் அந்த நிகழ்ச்சிகளை உங்களால் வர்ணிக்க முடிந்திருக்கிறது. இருந்தாலும் இந்த மாதிரி விவரங்களை

இப்போது கவிதையில் ஒரு திருப்பம் வந்திருக்கிறதல்லவா? என்றாலும் என் ரசனையில் ஏதோ இடிக்கிறது...தெரிந்தொ தெரியாமலோ மனதை பேய் என்று அழைத்தாகிவிட்டது. ஆகவே அந்த மனம் சில வேளைகளில் பேதலித்துப் போவதை நான் ஏன் ஆச்சரியமாகப் பார்க்க வேண்டும்? இந்த திருப்பங்கூட இப்போது போதுமானதாகப் படவில்லை. இன்னும் சிந்தித்து மேலும் இரண்டு சொற்கள் சேர்க்கின்றேன்.

பிறந்தது பெண்
என்றபோதில் மட்டும்
பேதலித்துப் போவதேன்
பேய் மனம்?
பெண் மனமும்!

இன்னொரு திருப்பம். நிஜமான ஆச்சரியம். என் ரசனைக்கு இப்போது ஒரு திருப்தி. உங்களுக்கு எப்படியோ?

*கணையாழி, அக்டோபர்–1994.*

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி —



பெயர்: சி. ரமணேந்திரா
வயது: 19
முகவரி:
உபய கதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி, பருத்தித்துறை.
பொழுது போக்கு:
பேனா நட்பு, பத்திரிகை.



பெயர்:
எச்.என்.எம். அன்சார்
வயது: 18
முகவரி:
69A, பீ.பீ. வீதி,
கல்முனை–05.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்,
பேனா நட்பு.



பெயர்:
வே.ம. இந்திரநாதன்
வயது: 45
முகவரி:
புதிய செம்மணி வீதி,
வேளா தோப்பு,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: ஜெ. முஹம்மட் றஜா
வயது: 20
முகவரி:
277, அம்பாறை வீதி,
பட்டியடிப்பிட்டி,
அக்கரைப்பற்று–06.
பொழுது போக்கு:
பேனா நட்பு, ரி.வி. பார்த்தல்.

லேடீஸ் ஸ்பெஷல்

# நீங்கள். சாப்பிடும்போது...

உணவு சாப்பிடும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உண்டு. முறையாகச் சாப்பிடுவதே நல்ல பழக்கம். மற்றவர்களை முகம் சுளிக்க செய்யும் அளவுக்குச் சாப்பிடுவது நல்லதல்ல.

எல்லாரும் இரசிக்கும் விதத்தில், ருசித்துச் சாப்பிடும் நல்ல பழக்கத்தைக் கீழே படித்து அறிந்துகொள்ளுங்கள்.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். குடும்பத் தினரிடையே ஐக்கியத்தை ஏற் படுத்த அது சிறந்த பழக்கம்.

எல்லாரும் அமர்ந்ததும் பரி மாறுவதற்காக ஒவ்வொருவருக் கும் தனித்தனியாகச் சாப்பாட்டுத் தட்டு வைப்பது போல, தனித் தனியாக குடிக்கத் தண்ணீர் வைக்க வேண்டும்.

சாப்பிடும்போது எந்த வித அவசரத்தையும் காட்ட வேண் டியதில்லை. நிதானமாக பொறு மையாகச் சாப்பிடுங்கள்.

எல்லாருக்கும் எல்லாப் பொருட்களையும் பரிமாறிய பின்பே சாப்பிடத் தொடங்குவது நல்லது.

விரல் நுனிகளால் உணவைப் பிசைந்து, சிறு உருண்டைகளாக் கிச் சாப்பிடலாம்.பெரிய பெரிய உருண்டைகளாக்கி, வாய்க்குள் வாரி அமுக்கிக்கொண்டு மெல் லக் கூடாது.

உணவை வாய்க்குள் வைத்ததும் உதடுகளை அடைத்துக்கொண்டு, மெது வாக மென்று உள்ளே தள்ள வேண் டும்.

வாய்க்குள் உணவை வைத்துக் கொண்டு பேசுவது நல்லதல்ல. இருந் தாலும் நான்கு பேருடன் அமர்ந்து பேசிக்கொண்டுதான் சிலரால் சாப்பிட முடியும். அப்படிப்பட்டவர்கள் புதுமுகங் களோடு அமர்ந்து சாப்பிடும்போதும் அந்தப் பழக்கத்தை வைத்துக்கொள்ளக் கூடாது.

சாப்பிட்டு முடித்ததும் ருசியின் மேன் மையைப் பற்றி வீட்டினரிடம் சொல்ல லாம். உணவில் இருக்கும் சத்துக் களைப் பற்றியும் பேசலாம். உணவில் ஏதாவது குறையோ, சுவை குன்றியோ இருந்தால் தயாரித்தவர் தானே அதைப் பற்றி சொன்னால் மட்டும், "அப்படியா" என்று கேட்டுக்கொள்ளுங்கள். முடிந்த



வரை விருந்தினர் வீட்டுக்குச் செல்கை யில் சாப்பாட்டின் குறைபாட்டை விவாதம் ஆக்கக் கூடாது.

உணவு சாப்பிடும் நேரத்தில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அடுத்த வரைக் குறை சொல்லும் விஷயங் களைப் பேசல் ஆகாது. விபத்து, ஆபத்து, மரணச் செய்திகளை சாப்பிடும் நேரத்தில் பேசுவது நல்லதல்ல.

அனைவரும் ஒன்றாகச் சாப்பிட ஆரம்பித்து ஒன்றாக முடிப்பதே சிறந்தது. விருந்தினர்களை சாப்பிட உட்கார வைத் துக்கொண்டு, வீட்டுக்காரர்கள் அவருக்கு முன்னதாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்து விடக் கூடாது. சாப்பிடும் இடத்தில் இருந்து அவசரமாக எழுந்திருக்க வேண் டிய தேவை ஏற்பட்டால், உங்கள் அவசியத்தை உணர்த்திவிட்டு எழுந்திருங்கள்.

சாப்பிடுவதற்கு முன்போ, பின்போ உங்களுக்கு அன்புடன் உணவு பரிமாறியவருக்கு நன்றி சொல்வது வழக்கம்.

பக்கத்தில் இருந்து சாப்பிடு கிறவர்கள் முகம் சுளிக்கும் அளவுக்கு சத்தமாக மென்று கொண்டிருக்காதீர்கள். சாப்பிடும் போது வேண்டா வெறுப்பாக முகத்தை வைத்துக்கொண்டு அஷ்ட கோணலாக நடந்து கொள்வதும் தவறு.

உங்களுக்குப் பிடித்தமான சுவையான உணவு இருந் தாலும், அதை முழுமையாகப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக் காதீர்கள். ஒவ்வொரு உணவும் உங்களோடு அமர்ந்திருக்கும் அனைவருக்கும் ருசியான தாகவே இருக்கும். அதனால் அவர்களும் அந்த உணவைச் சுவைக் கும் வாய்ப்பைக் கொடுங்கள்.

சாப்பிடும்போது நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். அவசரத்தில் உண வையோ, தண்ணீரையோ கொட்டி, எல்லாருக்கும் தொல்லை செய்துவிடல் ஆகாது.

சாப்பிட்டு முடித்ததும் தட்டிலே கை கழுவுவது மாற்ற வேண்டிய பழக்கம். ஏன் என்றால் சாப்பிடும் பாத்திரங்கள் அழகானதாகவும் சிறியதாகவும் இருக் கும். அதில் கை அலம்பும்போது நீர் வெளியே கொட்டும். கையையும் நன் றாகக் கழுவ முடியாது. இன்னொன்று அந்தப் பாத்திரத்தைத் தூக்கிச் செல்கிறவர்களும் அதைக் கழுவும் இடம் வரை கவனமாகக் கையாள வேண்டிய நிலை இருக்கும்.

# தயிர் வைத்தியம்

ஆரோக்கியத்திற்கும் அழகுக்கும் ஏற்றது தயிர். மருத்துவ குணம் கொண்ட தயிர் உடலுக்கு சக்தியைத் தருகிறது. அதே அளவுக்கு அது முக வசீகரத்திற் கும் துணை புரிகிறது.

பால் புளித்தால் தயிர் ஆகும். லாக்டோபாசிலஸ் என்ற பக்டீரியாக் களின் செயற்பாட்டால்தான் பால் புளிக் கும்.

லாக்டோபாசிலஸ் பற்றி சில ஆண்டுகளாகப் பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து வந்தன. இப்போது அதில் பல புதிய அரிய உண்மைகளை கண்டறிந் திருக்கிறார்கள். அவை புற்றுநோயின் கொடுமையைக் கட்டுப்படுத்தும் சக் தியை கொண்டிருக்கிறது. மூளையில் வளரும் கட்டிகளின் வளர்ச்சியையும் அதனால் தடுக்க முடியும் என்று அமெ ரிக்க புற்றுநோய் ஆராய்ச்சி மைய பத் திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

பால் புளித்து தயிர் ஆகும்போது 'லாக்டிக் ஆசிட்' உற்பத்தியாகிறது. அது ஜீரண சக்தியை அதிகப்படுத்து கிறது. மேலும் வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தவும், மலச்சிக்கலைத் தவிர்க்கவும் தயிர் சிறந்தது. வாயில் உருவாகும் வாய்ப்புண்ணுக்கு தயிரே சிறந்த மருந்து.

பெருங்குடலில் தீமை பயக்கும் பக்டீரியாக்களை ஒழிக்கவும், நல்லது செய்யும் பக்டீரியாக்களை உற்பத்தி செய்யவும் தயிரால் முடியும்.

வைட்டமின் பி, காம்ப்ளக்ஸ், புரோட் டீன் ஆகியவைகளை லாக்டோபாசிலஸ் உற்பத்தி செய்வதால், அவை உடலுக் குப் பல விதங்களில் ஆரோக்கியத்தைத் தருகிறது.

தயிரை இரவில் சாப்பாட்டில் பயன் படுத்தக் கூடாது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். இருமல், சுவாச தடை, கண்நோய் போன்றவை அதன் மூலம் உருவாகும். கூடவே சளித்தொல்லை அதிகரிக்கும். உடலும் தண்ணீர்த் தேகம் ஆகிவிடும்.

பால் உறைய விட்டு அது தயிர் ஆகும் முன்பு உபயோகப்படுத்துவது நல்லதல்ல. அப்படி உபயோகித்தால் ஜுரம், இரத்த பித்தம், அதிக வியர்வை போன்றவை ஏற்படும். தயிருடன் மீன் உணவு சேர்த்துச் சாப்பிடக் கூடாது.

தயிர் உபயோகிக்கும்போது சிறு பயறு, தேன், நெய், சர்க்கரை, நெல் லிக்காய் போன்றவைகளைச் சேர்த்துச் சாப்பிடுவது சிறந்தது. சூடான உணவுடன் தயிர் சேர்த்துச் சாப்பிடாதீர்.

மோர் மருத்துவ குணம் மிக்கது.

அழகுக்கு தயிர் எப்படித் துணை புரிகிறது?

கூந்தலுக்குத் தயிர் சிறந்தது. எண் ணெய்த் தன்மையுள்ள சருமத்தைக் கொண்டவர்கள் முகத்தில் தயிரைத் தேய்த்துக் கழுவலாம்.

கண்ணைச் சுற்றி உருவாகும் கருவளையம், முக சுருக்கம் போன்ற வைகளைப் போக்க வெண்ணெய் சிறந் தது. ■

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -ஷோபா-

### பொம்பே ரோஸ்ற்

தேவையான பொருட்கள் :-

பாண் - 5 துண்டுகள்
முட்டை - 1
தடித்த தேங்காய்ப் பால் - 1/2 கப்
சீனி - 1 மேசைக்கரண்டி
உப்பு - அளவாக

செய்முறை :-

தேங்காய்ப் பாலுடன் சீனியைச் சேர்த்துக் கரைத்து வடிக்கவும்.


முட்டையை நன்றாக அடித்துப் பாலையும், உப்பையும் சேர்த்துக் கலந்துகொள்ளவும்.

ஒவ்வொரு பாண் துண்டிலும் பாற் கலவையை இரண்டு பக்கமும் பரவி ஊற்றவும்.

பின் எண்ணெய் பூசிய தோசைக் கல்லில் இரண்டு பக்கமும் பொன்னிற மாகும் வரை சுட்டு எடுக்கவும்.

குறிப்பு :- நோயிலிருந்து தேறும் நோயாளிக்கு இவ் உணவு உகந்தது.

# கோடை காலத்தில் அழகைப் பாதுகாக்க



கோடை காலத்தில் தினமும் இரண்டு முறை குளிப்பது நல்லது. அதன் மூலம் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கும். குளிக்கும் நீரில் ஆரஞ்சுத் தோலைப் பிழிந்துவிட்டுக் குளித்தால் உடலுக்கு நல்லது.

குளித்து முடித்ததும் உடலில் வியர்வைக்குரிய பவுடரைப் போட்டுக் கொள்ளலாம்.

கோடை காலத்தில் வாரத்தில் ஒரு முறை, தலைக்கும் உடலுக்கும் எண்ணெய் தேய்த்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்கவும்.

பெண்கள் கோடை காலத்தில் அதிகபட்சமாக மேக்கப் போடுவதைத் தவிர்க்க வேண்டும். வியர்வை அதிகம் வருவதால் மேக்கப் அலங்கோலமாகிவிடும்.

வீட்டில் காற்று நன்றாகப் புகும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இரவைத் தவிர மற்ற நேரங்களில் கதவு, ஜன்னல்களைத் திறந்து போடுவது நல்லது.

கோடை காலத்தில் முக அழகைப் பாதுகாப்பது மிக அவசியம்.

வெயிலும், அனல் காற்றும் முகத்தின் அழகையும் சருமத்தையும் பாதிக்கும்.

சுத்தமான நீரைப் பயன்படுத்தி தினமும் மூன்று நான்கு முறை முகத்தைக் கழுவ வேண்டும். ஏதாவது கிறீமை முகத்தில் தேய்ப்பது நல்லது.

**எளிமையாக முக அழகு கிறீம் தயாரிக்கும் முறை :**

நான்கு பாதாம் பருப்புகளை எடுத்து சிறிதளவு தண்ணீரில் போடுங்கள்.

மறுநாள் காலையில் அதை எடுத்து, தோலை நீக்கிவிட்டு நன்றாக அரைக்கவும். அதில் இரண்டு தேக்கரண்டி பாலாடை, சில துளி பன்னீர் சேர்த்துக் குழைக்கவும். இதுதான் சிறந்த முக அழகு கிறீம்.

இதனை முகத்தில் பூசுவது கோடைக்குச் சிறந்தது.

# தந்தைக்கும் பொறுப்புண்டு

தாயைப் போலவே தந்தையும் குழந்தையை பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கை அண்மைக் காலங் களாக உலக நாடுகள் முழுவதிலும் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன.

குழந்தைகளை மனைவி பரா மரிப்பது போன்று, கணவனும் பராமரிக்க வேண்டும் என்ற கருத்தை வேலைக்குச் செல்லும் பெண்கள் வலியுறுத்தி வருகின்றனர். பெண்களின் இந்தக் கோரிக்கை நியாயமானது. ஆண்களும் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும் என்று ஜப்பான் அரசும் வலியுறுத்தி வருகிறது. இதனால் ஜப்பானில் வாழும் கணவர்களுக்குத்தான் சங்கடங்கள் அதிகமாகிப் போயின.

வேலைக்குப் போகும் பெண்கள் காலையில் வீட்டு வேலைகளைச் செய்து விட்டு குழந்தைகளையும் கவனிக்க வேண்டியிருப்பதால் மிகவும் பரபரப்புடன் செயற்படுகிறார்கள். அப்போது வீட்டில் இருக்கும் ஆண்கள் தங்கள் சொந்த வேலையை நிதானமாகச் செய்துகொண் டிருப்பார்கள். குழந்தைகளை வைத்துக் கொண்டு மனைவி அவதிப்படுகிறாளே, அவளுக்குக் கொஞ்சம் உதவி செய்ய லாமே என்று பெரும்பாலான ஆண்கள் நினைப்பதேயில்லை.

இதனால் ஜப்பான் நாட்டுப் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். இவர்களின் போராட்டத்தில் நியாயம் இருக்கிறது என்பதனை உணர்ந்த ஜப்பான் அரசும் இவர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு செயல்களைச் செய்து முடிக்க முனைந் தது.



ஜப்பான் நாட்டு அரசு, ஆண்களும் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி பிரச்சாரமே செய்து வருகிறது. குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்களே குழந்தை களின் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டாய மில்லை.... காலங்காலமாக குழந்தைப் பராமரிப்பு என்பது பெண்களின் கடமை என்று கூறுவது மாற வேண்டும். இன்று பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. அதனால் வீட்டுப் பொறுப் பையும், குழந்தைகள் பராமரிப்பையும் ஆண்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கருத்து சர்வதேச அளவில் எழுந்துள்ளது. அதற்கு முன்னோடியாக ஜப்பான் அரசு தன் முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இதற்காக ஜப்பான் அரசு பல கோடிகளைச் செலவு செய்து விளம் பரப்படுத்தியும் வருகிறது. ஆண்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் தவறு இல்லை என்ற பிரச்சார சுவரொட்டிகள் ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ளன. இத் தகைய விளம்பரங்களினால் ஜப்பான் நாட்டுப் பெண்கள் மத்தியில் புத்துணர்வு ஏற்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் தோன்றியுள்ள இந்தக் கருத்தை ஒவ்வொரு உலக நாடுகளும் பின்பற்ற வேண்டும். ஆண் - பெண் சமத்துவம் என்பதை இதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

## அங்கம் 08




எழுதுவது - சுஜாதா

விமானம் குதிப்பது நின்று போய், சீராகப் பறக்கத் துவங்கியது.

"ரிப்போர் எல்லாம் சரியாகப் போச்சு" என்றேன்.

அர்ஜுன் என் கையை வாங்கி ரேகை பார்த்தார். காதல் ரேகை தீர்க்கமாக இருப்பதாகச் சொன்னார்.

நான் பைத்தியம் போல அதை நம்பிக்கொண்டு அப்படி ஒரு ரேகை இருக்கிறதாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டு அவர் கையை வாங்கிப் பார்த்து முப்பத்தைந்து இலட்சம் சொன்னது ஞாபகம் வந்து, தன ரேகை தீர்க்கமாக இருப்பதாகச் சொன்னேன்.

"உனக்கு கார்ட்ஸ் ஆடத் தெரியுமா?" என்று தன் ப்ரீப்கேஸிலிருந்து புதுசாகச் சீட்டுக் கட்டை எடுத்தார்.

"எனக்கு, டாங்கி ஒரு விளையாட்டுத்தான் தெரியும். அப்புறம் ப்ள·ப் ஆட்டம் ஆடுவோம்."

"செட்டு சேக்கறது ஆடுவதானே?"

"சுமாரா"

சுமார் போறும்!" என்று மேசையைப் பிரித்து, பதின்மூன்று கார்டு போட்டதே ஒரு பாங்காக இருந்தது. ஜோக்கர் வெட்டச் சொன்னார்.

"பப்லு ஆட்டம் தெரியுமா?" என்றார். "தெரியாது" என்றதற்கு, "சொல்லித் தருகிறேன்" என்றார்.

நான் அவர் கார்டைப் பார்த்துப் பார்த்து ஆடினேன். இரண்டு முறையும் கட்டிலிருந்து கலைத்துக் கலைத்து ஆடினார். நல்ல கார்டு வந்தது. அவர்தான் டிக்ளேர் செய்துவிட்டு, "இதையே கிளப்பில ஆடிருந்தா இதுவரைக்கும் எங்கிட்ட இருநூறு ரூபா தோத்திருப்பே. அதுக்கு பதிலா இருநூறு



முத்தம் வாங்கிடப் போறேன்" என்றார்.

"அந்த நாலு ஸ்பேடை போட்டிருக்கக் கூடாது. நான் முனை எடுத்தேன், பார்த்தல்ல?"

"போனால் போகின்றதுன்னு விட்டுக் கொடுக்கலாம்னுட்டுத்தான் போட்டேன். எனக்குத் தெரியும்."

"எல்லாத்துக்கும் இந்த மாதிரி விட்டுக் குடுப்பாயா?" என்றார்.

"உங்களுக்காக எது வேணும்னாலும் விட்டுக் கொடுக்கத் தயார்!"

"அடேயப்பா! என்ன ஒரு பெண்மணி நீ?" என்று என் தலையைத் திருப்பி,

'பச்சக்' என்று சுத்தமாக முத்தம் கொடுக்க, பக்கத்து சீட் மந்திரி இன்னும் அதிகமாக முறைத்துப் பார்த்தார்.

விமானம் கவிழாது என்பது எனக்கு உதயமாவதன் முன் அது கீழே இறங்க ஆரம்பித்துச் சரியாக இறங்கப் போவதில்லை என்கிற பயம் மறுபடி வயிற்றைக் கவ்விக் கொண்டு, கந்தசஷ்டி கவசம் சொல்ல ஆரம்பித்தேன்.

கடைசி நிமிஷத்தில் கடைசி பத்து அடியை அது தொப்பென்று விழுந்தபோது செத்தோம் என்று நினைத்தேன். கண் திறந்து பார்த்தபோது உயிருடன் இருந்தேன்.

"ஏன் ஆச்சு?" என்றேன்.

"பெங்களூர் வந்தாச்சு."

"இனிமே செத்தாலும் ப்ளென்ல ஏறமாட்டேன்."

"அப்படியா?" என்றார் அர்ஜுன் கேலியாக.

"அந்த பாப்பாவைப் பாரு, எத்தனை சுலப சுபாவமாக இருக்கிறது?"

பெங்களூரில் லேசாகக் குளிர் இருந்தது. சட்சட்டென்று மழை பெய்து நகரத்தை அவ்வப்போது அலம்பிவிட்டது. எல்லாருமே கண்ணியமாகத் தோன்றினார்கள். கன்னட எழுத்துக்களில் தமிழ்ப் படங்கள் சுவரொட்டிகள் தெரிந்தது. நிறைய மரங்கள் இருந்தன. நாங்கள் தங்கின ஓட்டலின் பெயர் ஞாபகமில்லை.

நட்சத்திர ஓட்டல் இல்லை, நடுவாந்தரமான ஓட்டல் என்று தெரிந்தது. அடர்த்தியான அந்த ஏரியாவுக்குப் பெயர் காந்தி நகர் என்று சொன்னார் அர்ஜுன். நிறைய கூட்டமாக, கலகலப்பாக இருந்தது. டீவியில் ஒரு கிழவனார் நடந்து கொண்டே வர, அவரைப் பேட்டி கண்டார்கள். பெரிய கன்னட எழுத்தாளர் போலும். மாமி இவர் எழுதிய புத்தகங்களையெல்லாம் கொலு போல் வரிசையாக அடுக்கி வைத்திருந்தாள். அணைத்துவிட்டு, போர்த்திக்கொண்டு படுத்துக் கொள்ள விரும்பினேன்.

"டீவியை அணைச்சுருங்க" என்றேன்.

பின்னிரவில், இரண்டு நாள் தூக்கமில்லாததால் நன்றாகவே தூங்கினேன். இடம் புதிதாக இருந்ததால் ஒரே ஒருமுறைதான் எழுந்தேன். படுக்கை அருகே விளக்கு ஸ்விட்சைத் தட்டியபோது அர்ஜுன் பக்கத்தில் இல்லை. படுக்கை காலியாக இருந்தது. எனக்குக் கொஞ்சம் அச்சம் இருந்தாலும் பாத்ரூம் தான் போயிருப்பார் என்று கொஞ்ச நேரம் காத்திருந்தேன்.

அரை மணியாச்சு, முக்கால் மணியாச்சு, அவரைக் காணோம். எனக்கு என்ன என்னவோ கற்பனை பயங்கள் தோன்ற ஆரம்பித்தன. கல்யாணம் செய்துகொண்டு இரண்டு நாள் ருசி பார்த்துவிட்டு பெங்களூரில் தனியே விட்டுவிட்டுப் போய்விட்டார். அல்லது அவரை யாரோ, நான் தூங்கிக்கொண்டிருக்கும்போது கதவைத் தட்டி கடத்திச் சென்றுவிட்டார்கள். இதோ போன் ஒலிக்கப் போகிறது...

"உன் கணவன் எங்களிடம் இருக்கிறான். சின்னச் சின்ன நோட்டுகளாக பத்து இலட்சம் ரூபாய்க்கு...."

கதவு திறந்தது. அர்ஜுன் உள்ளே வந்தார்.

"எங்க போய்ட்டீங்க அர்ஜுன்?"

"தலைவலி மாத்திரை வாங்கப் போயிருந்தேன்."

"என் பையில் மாத்திரை இருக்கிறதே, கேட்டிருக்கலாமே?"

"எனக்குத் தெரியாதே!"

"என்ன அர்ஜுன், நீங்கதானே வாங்கிக் கொடுத்தீங்க. நான், நீங்க இல்லாம பயந்தே போய்விட்டேன் தெரியுமா?"

அர்ஜுன் "பயப்படாதே, படுத்துத் தூங்கு" என்று என் தலையைக் கலைத்தார். முத்தம் கொடுத்தார்.

தூக்கமும் கலைந்து போய் விட்டதால் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

"அர்ஜுன், உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறது என்று சம்மதம் சொல்ல ஏன் அத்தனை நாள் ஆச்சு?" என்று கேட்டேன்.

"உன்னைப் பத்தியும் உங்க குடும்பத்தைப் பத்தியும் விசாரித்தோம்."

"யாரை வெச்சு?"

"அதுக்கெல்லாம் டில்லியில் ஏஜென்ஸி இருக்கிறது."

"என்னைப் பத்தி என்ன ரிப்போர்ட் வந்தது?"

"நீ படிச்ச டி.டி.ஏ பள்ளிக்கூடம், காலேஜ், நிஜமாகவே நீ பி.எஸ்ஸி. பாஸ் பண்ணயா? அதில நீ வாங்கின மார்க், உனக்குப் பிடித்தமான கலர். ரைட்டர்..."

"கலர் என்ன?"

"பர்ப்பிள். ரைட்டர் - எமிலி டிக்கின்ஸன்!"

"அட, எப்படித் தெரிஞ்சுது?"

"க்விஸ் ப்ரொக்ராம்ல காலேஜ்ல நீ ஆன்ஸர் செய்ததில இருந்து, உனக்கு இரண்டு பர்த்டே இருக்கு...."

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

# உடம்பைக் காண்பித்து இசையை விற்கிறார்கள்



பொப்பிசைப் பாடகிகள் தமது இசைத்தட்டுக்களில் குரல் வளத்துக்கு மேலதிகமாக உடல் அழகை அப்பட்டமாக வெளிப்படுத்தி காட்சி தருவது அமெரிக்காவில் கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. இத்தகைய இசை அல்பங்கள் முதலில் குழந்தைகளின் மனதைப் பாதிப்பதாக அமெரிக்காவின் தொழில்சார் குழந்தை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் ஓ.ஐ.நீல் என்பவர் கூறுகிறார்.

பிரிட்னி, ஜெனிபர் லோபஸ் உட்பட பல புகழ் பெற்ற பாடகிகளும் தமது இசைத்தட்டுக்களில் தங்களது அரை குறை உடம்பைக் காட்டிப் பாடலுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் பாவனைகளில் விரகதாபத்தை வெளிப்படுத்தி விற்பனையை அதிகரிக்கிறார்கள். வியாபார உத்தி கொண்ட இத்தகைய செயலால் குழந்தைகளின் மனது முறையற்ற வயதில் பாலியலின் பக்கம் ஈர்க்கப்படுவதாக இவர் சொல்கிறார்.

இத்தகையோர் நல்ல பாடகிகளாக இருக்க முடியும். ஆனால் அவர்கள் அதிகம் புகழ் பெற்றிருப்பதும் இவர்களது இசைத்தட்டுக்கள் கூடுதலாக விற்பனையாவதும் 'இசைக்காகவன்றி உடம்புக்காகத்தான் என நீல் குறிப்பிடுகிறார்.

நல்ல குரல் வளம் உள்ள பாடகிகள் தமது உடம்பைக் காண்பித்துத் தான் இசையை விற்க வேண்டுமா? என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

# வயக்ராவுக்கு என்ன நடந்தது?

பாலியல் பலவீனத்தை போக்க வல்லது என்று கூறி முன் எப்போதும் இல்லாத அளவு பரபரப்பான விளம்பரங்களுடன் சந்தைக்கு வந்த வயக்ரா மாத்திரை வந்த வேகத்திலேயே திரும்பிவிட்டது.

இந்த மாத்திரையை ஆரம்பத்தில் உற்பத்தி செய்த நிறுவனம் அதற்கு உலக அளவில் பெற்றுக் கொடுத்த விளம்பரம் காரணமாக செக்ஸ் விஷயத்தில் பலவீனமான ஆண்களுக்கு வயக்ரா ஒரு நிரந்தரத் தீர்வு என்பது போன்ற கருத்து உருவாகிவிட்டது. ஆனால் வயக்ரா எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை என்பதை அதன் உற்பத்தியாளர்களே ஒப்புக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் இந்த மாத்திரை சந்தைக்கு வந்தபோது அதனை ஒத்ததாக ஏராளமான போலி வயக்ராக்கள் சந்தையை ஆக்கிரமித்தன. விளைவு விபரீதமானது. பிரேசில், பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் இந்த மாத்திரையைப் பாவித்த பலர் உயர் இரத்த அழுத்தம் காரணமாக உயிரிழந்தார்கள். இதனை அடுத்து வயக்ரா என்றால் இருந்த சுகமான சிந்தனையும் கிட்டத்தட்ட பயமாக மாறியது.

இப்போது வயக்ரா சந்தையில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அமெரிக்காவில் கூட ரொம்பவும் குறைவாகவே விற்பனையாகிறது. பல நாடுகளின் சுகாதாரத்துறையினர் இந்த மாத்திரைக்கு அனுமதி கொடுக்கவில்லை.

வயக்ரா இப்படி திடீரென பிரபலம் இழந்து போனதால் இதன் உற்பத்தி நிறுவனம் தான் கொண்டிருந்த முக்கிய திட்டம் ஒன்றைக் கைவிட்டது.

வயக்ரா பெரிய அளவில் வெற்றி பெற்றிருந்தால் இதே பாணியில் பெண்களுக்கும் செக்ஸ் ஊக்கமாத்திரை ஒன்றைத் தயாரிக்க இந்த நிறுவனம் திட்டமிட்டதாம். நல்ல வேளை பெண்கள் தப்பித்தார்கள்.

# ஆண்கள் உடம்பில் உங்களுக்கு என்ன பிடிக்கும்?



தினந்தோறும் புதிய ஆராய்ச்சிகள் கண்டுபிடிப்புகள் என்று பிஸியாகவே இருக்கும் ஜப்பானியர்கள் பெண்கள் மத்தியில் ரொம்ப முக்கியமான ஆராய்ச்சி ஒன்றை நடத்தியிருக்கிறார்கள். ஜோன்சன் என்ட் ஜோன்ஸன் என்ற நிறுவனம் ஆயிரக்கணக்கான ஜப்பானியப் பெண்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி ஜப்பான் பெண்களுக்கு ஆண்களின் பின் பக்க அசைவுகள்தான் மிகவும் பிடிக்கும் என்ற அதி முக்கியமான கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறது.

ஆண்களின் உடம்பில் பெண்களை அதிகம் கவரும் பகுதி எது என்று இந்த ஆய்வின்போது கேட்கப்பட்டது. 20 வயது ஜப்பானிய பெண்களில் 54 சதவீதமானோர் ஆண்களின் பின் பக்கத்தைப் பார்த்து இரசிக்கும் என்று கூறியிருக்கிறார்கள்.

19 சதவீதப் பெண்களுக்கு ஆண்களின் தோள்பட்டை ரொம்பப் பிடிக்கும். 17 சதவீதமானோர் திடகாத்திரமான நல்ல உடல் கட்டுடன் இருக்கும் ஆண்களைக் கண்டால் தங்களுக்கு மிக மிக விருப்பம் என்று சொல்கிறார்கள்.

இந்த நிறுவனம் இதே மாதிரியான கேள்வியை ஆயிரம் டோக்கியோ இளைஞர்களிடம் கேட்டிருக்கிறது. என்ன பதில் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? நம்பினால் நம்புங்கள். 25 வயதுக்குட்பட்ட 764 இளைஞர்கள் பெருத்த மார்பகங்களுடன் கொழுத்த பெண்களைத்தான் அதிகமாகப் பிடிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

# சின்னச் சின்ன ஆசைகள்



முருகேசனுக்கு அவன் அப்பா இறந்த பிறகு அவனுக்கு அம்மா பூரணம் தான் எல்லாம். அதுவும் அவளுக்கு அவன் ஒரே ஒரு பிள்ளை. சிறு வயது முதல் புட்டு, இடியப்பம் என்று வீடு வீடாக விற்றுப் படிக்க வைத்து வளர்த்தவள். வடமராட்சியில் ஒரு கிராமம்தான் அவன் பிறந்து வளர்ந்தது படித்தது எல்லாம். இரண்டு தசாப்த யுத்தத்துக்குப் பின் சமாதான விடிவெள்ளி உதயமான பின்புதான் கொஞ்சம் அவனுக்கும் விடிவு பிறந்தது. அவனுடைய அப்பா இருக்கும் போதே முருகேசனின் அம்மா பூரணத்துக்கு கதிர்காமம் போக வேண்டுமென்ற ஆசை நெஞ்சில் பதிந்திருந்தது. இப்போ அவரும் இல்லை. யுத்த நிறுத்தம் வந்து சிறிது சிறிதாக வடபகுதி மக்கள் தென்பகுதிக்கு வருவதும் போவதுமாகப் பயணம் செய்யத் தொடங்கினர். பின் படிப்படியாக 'ஏ ஒன்பது' பாதையும் திறக்கப்பட்டுக் கட்டுப்பாடும் தளர்ந்து எல்லா நாட்களும் பயணம் செய்யும் நிலைமை வந்தது. முருகேசனுக்கும் ஒரு முறை என்றாலும் கதிர்காமம் போய் வர வேண்டுமென்று ஆசை இருந்தது.

அம்மாவும் அடிக்கடி தான் கண்ணை மூடுமுன் போய்ப் பார்த்துவிட வேண்டும் என்று கூறியபடி இருந்ததாலும் போவது என்று முடிவெடுத்தான். வெசாக் விடுமுறை நீண்ட நாள் விடுமுறையாக வந்தது. இச் சந்தர்ப்பத்தில் முருகேசன் தனது அம்மா பூரணத்தைக் கதிர்காமத்துக்குக் கூட்டிப் போகும் வேலையில் ஈடுபட்டான். தனக்கும் அம்மாவுக்கும் ஆசனப் பதிவு செய்து பஸ்ஸில் இருவரும் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். பின் கொழும்பிலிருந்து கதிர்காமம் இருவரும் போய், முருகன், தெய்வானையம்மை கோயில் என்று வழிபட்டு, அம்மாவை நன்கு மாணிக்க கங்கையில் நீராடச் செய்து, இரண்டு நாள் நின்று கொழும்பிற்கு வந்து சேர்ந்தார்கள். கொழும்பில் ஒரு நண்பன் வீட்டில் தங்கி காலிமுக மைதானம், தெகிவளை மிருகக்காட்சிச்சாலை, உல்லாசப் பூங்கா, கடைகள், வங்கிகள் எல்லாம் காட்டி, தான் மாதா மாதம் பணம் கட்டும் இன்சூரன்ஸ் கந்தோருக்கும் கூட்டிப் போனான். மேல் மாடிக்குப் போய் அந்த மாதத்துக்குரிய பணத்தை நேரில் கட்டி விட்டு அம்மாவுடன் படிகளில் இறங்கத் தொடங்கினான். திடீரென்று அவன் அம்மாவின் கைகளைப் பிடித்து "அம்மா அப்படியே நில். உன்னை தானாகவே படி கொண்டு போய் நிலத்தில் விடும்" என்று கூறி அவளைப் பிடித்துக்கொண்டான். படி தரை வந்ததும் இருவரும் இறங்கினார்கள். பூரணத்துக்கு ஒரே வியப்புடன் மனதில் இதமாகவும் இருந்தது. மறுபடியும் ஏறிப் பார்த்தால் என்ன என்று ஒரு ஆசை உள்ளே. கதிர்காமத்தில் கருப்பட்டி முதல் எல்லாம் வாங்கிக் கொடுத்துக் கொழும்பிலும் அவள் விரும்பிய சாமான்களை அம்மாவுடன் போய் வாங்கிக் கொடுத்தான்.

எல்லாம் முடிந்து கடைசியாக வவுனியா போக ரயிலேறி பின் அங்கிருந்து பஸ் பிடித்து இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். முருகேசனுக்கு அம்மாவின் ஆசைக்கனவுகளை நிறைவேற்றிவிட்டதில் ஆத்மதிருப்தி. அதனால் அவன் செலவுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அன்று ஒரு நாள் மதியம் முருகேசனுக்கு அம்மா பூரணம் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

சாப்பிட்டுக்கொண்டே முருகேசன் அம்மாவைப் பார்த்து "அம்மா இப்ப உனக்கெல்லாம் சந்தோஷம்தானே" என்று கேட்டான். பூரணம் "மகனே! சந்தோஷம்தான் ஆனா" என்றிழுத்தாள். "என்னம்மா? சொல்லு வேறென்ன வேணும்" என்று கேட்க

"மகனே! என்னை ஒரு வங்கிக்குக் கொழும்பில் கூட்டிக்கொண்டு போனாய்தானே. அங்கே வாசலில் தபால் பெட்டி மாதிரி ஒரு பெட்டிக்குள் ஒரு சின்ன காட் துண்டைப் போட்டதும் பணம் வெளியில் வருகிறது. உடனே அதை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அது மாதிரி எனக்கும் ஒரு காட் துண்டு வாங்கித் தா" என்றதும் வாய்க்குக் கொண்டுபோன சோற்றைக் கையில் வைத்தபடி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் முருகேசன்.

**ச.இரா.பாலகிருஷ்ண ஐயர், கிரான்ட்பாஸ்**

---

**இவ்வார சிறு கதைகள்**

# தேடுகிறேன்

காலையில் தொடங்கிய மழை இன்னும் விடாமல் பெய்துகொண்டிருந்தது. கூடவே இடியும் மின்னலும் போட்டி போட்டுக்கொண்டு செவிப்பறையைச் செவிடாக்கியது.

பவித்ரன் கட்டிலில் சாய்ந்தபடியே ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று பெய்த அதே அடைமழை, அதே காற்று, இடி, மின்னல் எதிலுமே மாற்றமில்லை. அவன் வாழ்க்கையைத் தவிர. ஆனால் இன்று எதற்காக இப்படி பேயாட்டம் ஆடுகிறது. தனது உயிரைப் பறித்துவிட்ட ஆனந்தமா? இல்லை ஆயிரமாயிரம் பேரை விழுங்கிவிட்ட வெறித்தனமா? இயற்கை அவனது இதய தீபத்தை இவ்வளவு சீக்கிரத்தில் அணைத்துவிடுமென அவன் கனவிலும் நினைத்தானா என்ன?

அவனது நினைவுகள் அந்த இறந்தகாலத்தை மீண்டும் உயிர்ப்பித்துப் பார்த்தது. "காவ்யா" அவன் கவிதைகளின் மூலக்கரு. கனவுகளின் கதாநாயகி. அவன் காதலுக்குக் காவியம் படைத்தவள். பேராதனை வளாகத்தில் அவளைப் பார்த்த முதல் நிமிடமே அவளிடம் தொலைந்துபோனதும் றாக்கிங்கிலிருந்து அவளைக் காப்பாற்ற சக நண்பர்களுடன் சண்டைபோட்டதும் தன் பேச்சுத் திறனாலும் எழுத்துத் திறனாலும் கூடிய சீக்கிரமே அவளைத் தன் பக்கம் கவரச் செய்ததும்.... அவன் மனதில் அந்த நினைவுகள் இன்னும் நுரைக்க நுரைக்க அடித்துக்கொண்டிருந்தது.

அந்தி சாயும் பொழுது. பேராதனைப் பூங்கா. அவன் தோளில் சாய்ந்தபடி அவள் "பவி! நீ என்ன விட்டுட்டு போயிடுவீயா?" கேட்டபடியே அவன் முகத்தைப் பார்த்தாள்.

"ம்...டிக்ரி முடிஞ்சதும் ஊருல போய் அந்த மாலதிய மெரி பண்ணி சுவிஸோ லண்டனோ போய் செட்டிலாகிடலாம் என்று நினைத்திருக்கன்" அவன் பகிடிக்கு சொன்னாலும் கூட அவள் கண்கள் பனித்ததை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"என்ன காவ்யா! நான் பகிடிக்கு சொன்னன்" அவள் தலையை அன்பாகத் தடவினான் பவித்ரன்.

"எனக்கு பயமாயிருக்கு பவி. நீங்க ஜெப்னா. நான்...."



"நீ பெரிய ஜெம் பிஸினஸ்காரரோட ஒரே பெண். இவ்வளவு பெறுமதியான இரத்தினத்தை எனக்கு குடுப்பாரோ என்று நானந்தான் பயப்பட வேண்டிக் கிடக்கு" கூறிய பவித்ரனின் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டாள் காவ்யா. ஆயிரம் எதிர்ப்புக்களின் மத்தியில் ஓர் சிறு பயமும் அவர்களைத் தொற்றிக்கொண்டிருந்தது.

ஆனால் அவர்கள் பயந்தது போல் எதுவும் நிகழவில்லை. பெற்றோர் சம்மதத்துடன் இருவரும் காதல் வானில் சிறகடித்துக்கொண்டிருந்தனர்.

பவித்ரன் படிப்பை முடித்துவிட்டு அரச நிறுவனமொன்றில் தொழில் பார்த்துக்கொண்டிருந்தான். காவ்யா இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்தாள்.

போன் ஒலிக்க கையில் எடுத்தான் பவித்ரன். "பவி நான் வெசாக் லீவுக்கு வீட்டுக்கு போறன்" காவ்யாதான் பேசினாள்.

"ஓகேடா. இந்த மாதம் பத்தொன்பதாம் திகதி நல்ல நாளாம். அன்றைக்கு என்கேஜ்மன் முடித்து போடலாமென்று அம்மா சொல்றா" அவன் கூற கவிதாவின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. சந்தோஷத்தில் வாயை விட்டு வார்த்தைகள் வர மறுத்தன.

"என்ன மேடம் பேச்சையே காணோம். பயந்துட்டீங்களா?" போனில் அழகாகச் சிரித்தான் பவித்ரன்.

"ஐ.லவ் யூ பவி. ஐ லவ் சோ மச்" அவள் குரல் தளதளத்தது.

"ஐ லவ் யூடா. இந்த பவித்ரன் என்னைக்குமே உனக்கு மட்டுந்தான். திங்கள் காலையிலேயே உன் வீட்டு வாசலில் என் காலடியோசை கேட்கும். எனக்காக காத்திரு ஓகே."

சிரித்தபடியே போனை வைத்தான்.

அந்த திங்களும் வந்தது. கூடவே வெள்ளம், மண்சரிவு, அழிவுகள் என ஆயிரமாயிரம் செய்திகளும் காதுக்குள்ளே ஒலித்துக்கொண்டிருந்தன. ஆனாலும் அவை எல்லாவற்றையும் விட அவனுக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் அந்த அழகிய விழிகளைத் தவிர வேறெதுவும் அவனுக்குப் பெரிதாகப் படவில்லை.

எத்தனையோ தடைகள், தடங்கல்கள் மத்தியில் அவனது ஊரை அடைந்தான் பவித்ரன். அந்த வானம் இன்னுமே இருண்டு கொண்டுதான் இருந்தது. வெள்ளத்தால் உடைமைகளைப் பறிகொடுத்துவிட்டு அவதிப்பட்டதோடு பாஞ்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் பரிதவித்துக்கொண்டிருக்கும் மனித ஜீவன்கள். ஒரு வேளைக் கஞ்சிக்காக நிவாரண வாகனங்களின் முன் முட்டி மோதிக்கொள்ளும் கூட்டங்கள். அவனுக்கு இது புதிதில்லையென்றாலும் இம் மக்களுக்கு இவை புது அநுபவங்கள்தான்.

மனதில் பெரும் உறுத்தல்களோடு அவளின் வீட்டை நோக்கி நடக்கிறான். ஓர் இனம்புரியாத அமைதி. இடைக்கிடை கேட்கும் இயந்திர ஓசை. ஹெலிகொப்டர் ஒன்று தலையைத் தொட்டுவிடும் தூரத்தில் பறந்துகொண்டிருந்தது. இயந்திரத்தின் ஒலியையும் மீறி மனிதர்களின் அவலக் குரல்கள் கேட்டது. ஆயிரம் கேள்விகள் மனதில் எழுந்தது. ஓர் இனம்புரியாத பயம் அவனைத் தொற்றிக்கொண்டது.

தனது அன்புக் காதலியைக் காண விரைந்தவனுக்கு அங்கே...? சுவடுகள் இன்றி சுத்த மயானமாகிப் போயிருந்தது அந்த அழகிய சிறிய கிராமம். வெறும் மண்மேடுகளையேயன்றி அவனின் இதய தேவதையை அவனால் தேட முடியவில்லை. இயந்திரத்தால் தோண்டி, துண்டாக்கப்பட்ட மனித கால்கள், கைகள், உடல்கள் என எல்லாம் சேர்த்து பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

எங்கே அவனது காவ்யா. மண்ணுக்கடியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கிறாளா இல்லை துண்டாக்கப்பட்ட உடல்களின் நடுவில் மறைந்து போயிருக்கிறாளா.

பல நாற்றுக்கணக்கானோரை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்த அந்த மயான தேசத்தில் அவன் கால்கள் இன்னும் அவளைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது.

வானம் அழுகிறது கவிக்காக.....

**கோகிலா குமாரவேல், இரத்தினபுரி**

# புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் புலம்பெயர்ந்த தமிழர்கள் திருப்பியனுப்பப்படுவார்களா?

## கனடாவின் எச்சரிக்கை ஏற்படுத்தியுள்ள பீதி!

அண்மையில் இந்திய ஆங்கிலப் பத்திரிகையான இந்துஸ்தான் டைம்ஸ் திகைப்புக்குரிய செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வராவிட்டால், கனடா அங்கு அடைக்கலம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பு அனுப்பிவிடப் போவதாக எச்சரித்துள்ளது என்பதே அச்செய்தி.

கனடா, பொதுவில் மென்போக்கான சர்வதேச உறவுகளைப் பேணி வருகின்ற நாடு. இலங்கையின் இனப் பிரச்சினை மோசமடைந்த நிலையில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களை அதிகூடிய அளவு அரவணைத்து அபயம் கொடுத்த நாடு.

அத்துடன் நில்லாது இலங்கையிலும் தனது அரசாங்கத்தினூடாகவும் அரசாங்கத்துக்குப் புறம்பாக, சீடா மற்றும் இலங்கை - கனடா அபிவிருத்தி நிலையம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் இலங்கையிலுள்ள அகதிகளுக்கு நிவாரணம் மற்றும் சிறுதொழில் உதவிகளை வழங்கி வந்தது. இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நல்லெண்ணம் கொண்ட அக்கறை காட்டிவந்த நாடு.

கனடாவில் தற்போது சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் வரை இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்களில் பலருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் சிலர் கனேடியப் பிரஜைகளாகக்கூட ஆகிவிட்டார்கள். ஒரு பகுதியினர் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டுள்ளபோதிலும் தொடர்ந்து அதற்காக முறையீடு செய்தவர்களாக உள்ளனர். அவர்களைக்கூட திருப்பி அனுப்புவதற்கு கனடா முற்படவில்லை. கனடாவிலிருந்து திருப்பி அனுப்புவதற்காக தீர்மானிக்கப்பட்டவர்கள் அங்கு வன்முறைகள், மோசடிகள், போதைப்பொருட் கடத்தல்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மட்டுமே.

மேலைத்தேய நாடுகளில், கனடாவிலேயே, அகதியுரிமை பெறுவது மிகச் சுலபமானதாகவும் உள்ளது.

கனடாவைப் பொறுத்தவரை, அது ஒரு பாரிய நிலப் பிரதேசம் கொண்ட, மக்கள் தொகை குறைந்த நாடு. அதனால் அதற்கு ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல் அகதிகள் பழு என்பது பாரதூரமானதாக இல்லை. அகதிகளுக்கான அதன் செலவினத்தை மட்டுப்படுத்த அது ஏற்கெனவே ஒரு சில நடைமுறை மாற்றங்களைச் செய்துள்ளது. இதன்படி முன்னர் புலம்பெயர்ந்தவர்கள் அழைப்பிக்கும் அவர்களது பெற்றோருக்கும் கொடுத்து வந்த வாழ்க்கைச் செலவு உதவிகளை நிறுத்தியது போன்ற சில நடவடிக்கைகளுடன் அது நின்றுகொண்டது. மேலைத்தேய நாடுகள் இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்ப முடிவு செய்துவிட்டால், அதில் கடைசியாக அனுப்பும் நாடாகவே கனடா இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அது புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் சமூக, கலாசார விடயங்களை கௌரவித்தும் ஊக்கமளித்தும் வந்தது. இத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்தியே புலிகளுக்கான நிதி சேகரிப்புக்கள், மற்றும் பிரசாரக் கூட்டங்கள், வெவ்வேறு மாற்று நிறுவனங்கள் என்பவை கூட செயற்படக் கூடியதாக இருந்து வருகிறது.

இத்தகைய மிதமான போக்கினைக் கடைப்பிடித்த கனடா திடீரென இப்போது புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு வராவிட்டால் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களைத் திருப்பியனுப்ப நேரிடும் என்று தெரிவித்துள்ளதாகக் கூறப்படுவது சற்று ஆச்சரியகரமான விடயமாகப் புலப்பட்டது.

எனவே இது குறித்து இராஜதந்திர வட்டாரங்களில் ஆராய்ந்ததில் சில கணிப்பீடுகள் உணரப்பட்டன. இவ்வாறு ஒரு கருத்தைக் கனடா கூறியுள்ளதென்பது ஏறத்தாழ உண்மையான செய்திதான் என்றாலும் அதனை அப்படியே அது அமுலாக்கும் என்று கூறுவதற்கில்லை. இதனை பிரதானமாக, புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பவைக்கும் ஒரு இராஜதந்திர அழுத்தமாக மட்டுமே கருத முடியும்.

ஏற்கெனவே இவ்வாறான ஒரு சில இராஜதந்திர அழுத்தங்களைக் கனடா செய்திருந்தது. கனேடிய உளவுத்துறை புலிகளைக் கனடாவில் தடை செய்ய வேண்டும் என்று கனேடிய அரசாங்கத்திற்கு அண்மையில் தெரிவித்திருந்தது. இதையடுத்து கனேடிய வெளிவிவகார அமைச்சு, இலங்கையின் சமாதான முயற்சிகளை இது பாதிக்கக்கூடுமாகையால் ஆறு மாத காலத்திற்கு இம் முடிவை ஒத்திப்போடலாமென்று கூறியிருந்தது. இதையே இலங்கையின் கனேடியத் தூதுவர் வன்னி சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோதும் கூறியிருந்தார். இவ்வாறான அழுத்தத்திற்கு இன்னும் ஒரு சாதகமான விளைவு ஏற்படாத நிலையில்தான் கனடாவின் இந்த புதிய அறிவிப்புக் குறித்த செய்தி வெளிவந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் புலிகளைக் கொண்டு வரும் சர்வதேச நிர்ப்பந்தத்தின் ஒரு வழியாகவே இதை எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. கனடாவின் இவ் வழிமுறை ஐரோப்பிய நாடுகளதும் அமெரிக்காவினதும் சிபாரிசின் பேரிலேயே அமைந்திருக்கலாமென்றும், புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய சிறந்த முனை கனடாவாகவே இருக்குமென அவர்கள் உணர்வதாகவும் தெரிகிறது. ஏனெனில் கனடாவிலேயே பெருமளவு புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் உள்ளனர்.

இதேவேளை கனடாவில் பயிற்றப்பட்ட புலி உறுப்பினர்கள் பத்தாயிரம் பேர் உள்ளதாவும் கனேடிய உளவு நிறுவனங்கள் மதிப்பிட்டுள்ளன. இத் தகவலையும் தற்போதைய நிலைமையின் மத்தியிலேயே கனடா வெளியிட்டுள்ளது.

இச் சூழ்நிலைகளை எடுத்துப் பார்த்தால் ஒருவேளை புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வராவிட்டால் கனடா என்ன நடவடிக்கை எடுக்குமென்பதை ஊகிக்க முடிகிறது. அது புலம்பெயர்ந்த தமிழர்களை உடனடியாக நாடு திருப்பப் போவதில்லை. மாறாக புலிகளென அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் இப் பத்தாயிரம் பேரைச் சிறைப்பிடிக்கவும் நாடுகடத்தவுமே முற்படும். அதற்கும் புலிகள் அடிபணியாவிடில், அவர்களின் துணை அமைப்புகள் ஆதரவாளர்கள் என்று இறங்கும்.

இதன் மூலம் ஈட்டப்படக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் பிரதானமான மாற்றம் என்னவென்றால், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் புலி ஆதரவு நிலையை அகற்றுவதும், சமாதானத்துக்கு புலிகளை நிர்ப்பந்திக்கும் மனோபாவத்தை ஏற்படுத்துவதுமாகும்.

எது எவ்வாறாக இருந்தாலும் மேலைத்தேய இராஜதந்திரங்கள் பல கீழைத்தேசங்களில் தோல்வி கண்டுள்ளன. புலிகள் விடயத்தில் என்னவாகும் என்று கூறுவது கடினம்.

யாவற்றுக்கும் முதல், இந்தக் கருத்தை கனடா எத்துணை பாரதூரமான வகையில் எடுத்துரைத்துள்ளது என்பதை மதிப்பிடக் கூடியதாக இல்லை. □

---

இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரச்யல தொடர் இது.

# முட் பாதையில் மரித்து மிதவாதம்

(அரசியல் தொடர்)

சமஷ்டியிலிருந்து பிரிவினைக்கு....... (தொடர்ச்சி)

“இந்த நிலையில் தமிழ் மொழிக்கு அரசியலமைப்பில் உரிய இடம் வழங்கப்படுமென்று சிங்களத் தலைவர்கள் தரும் வாக்குறுதியை நம்பும்படி தமிழ் மக்களைக் கோர முடியாது. சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகளைத் தருவார்கள். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த நேரிடும்போது மக்கள் அதற்கு எதிராக இருப்பதாகக் கூறி நழுவிவிடுவார்கள்” எனக் குறிப்பிட்டார். எனினும் தன்னைப் போலவே வேறு சிலரும் அபிப்பிராயம் கொண்டிருப்பதாக மார்ட்டின் வாதிட்டார். “அரசியல் நிர்ணய சபையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறக் கூடாது எனச் சிலர் கூறினர் என்பது உண்மைதான். ஆனால் அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்த்தியபோது அவர்கள் ஏற்றுக்கொண்டனர். மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் அவ்வாறு செயற்பட்டனர்” எனச் செல்வநாயகம் பதிலிறுத்தார்.

1971ன் ஜூலை மாதக் கடைசி வாரத்தில் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான சி.எக்ஸ். மார்ட்டின் தமிழரசுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.


அரசியல் நிர்ணய சபையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியமையானது மிகப் பெரும் வெற்றி என்று தமிழ் இளைஞர்கள் கருதினர். தீவிரவாதக் கருத்துக் கொண்ட இளைஞர்கள் பலரும், ஒத்துழைத்துச் செயற்படும் பாதை தோல்வி கண்டுவிட்டதாகக் கூறினர்.

எனவே எதிர்த்துச் செயற்பட வேண்டுமென வலியுறுத்தினர். எனினும் இந்த எதிர்ப்பு பாராளுமன்றத்திற்குப் புறம்பான அரசியல் நடவடிக்கைகளாகவும், அகிம்சை வழிப்பட்டதாகவும்தான் அப்போது இருந்தது.




ஆனால், 1971 நவம்பர் மாதத்தில் முக்திபாஹினி என்னும் கிளர்ச்சிக் குழு இந்தியாவின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் படையினரைத் தோற்கடித்து பங்களாதேசம் என்னும் புதிய நாட்டைப் பிரகடனம் செய்தது. முக்திபாஹினி அமைப்பு பெற்ற இந்த வெற்றி தீவிரவாத தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. மாவை. சேனாதிராஜா, கவிஞர் காசி ஆனந்தன், கோவை மகேசன் போன்ற இளைஞர்கள் பங்களாதேசப் பாணியைப் பின்பற்றி ஒரு புதிய நாட்டைப் பிரசவிப்பது பற்றிப் பேசத் தலைப்பட்டனர்.

பங்களாதேசத்தை விடுவித்தமைக்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைத் தமிழரசுக் கட்சி பாராட்டியது. பங்களாதேசத்தில் இந்தியா பெற்ற வெற்றியைப் பாராட்டும் முகமாக செல்வநாயகம் தலைமையில் காங்கேசன்துறையில் ஏழு தமிழ்க் கட்சிகள் இணைந்து ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தின. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமிர்தலிங்கம், "சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு பங்களாதேசம் போல



அரசை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டம் தமிழரசுக் கட்சிக்கு வந்துவிட்டது” என்றார். “இந்தக் கோரிக்கையை வெளிநாடுகளின் உதவியுடன் வென்றெடுப்பதற்காகத் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஐக்கியமாகச் செயற்படுவதற்கு பங்களாதேசத்தை ஒரு முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்” எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், “சுதந்திரத் தனியரசு ஒன்றை நிறுவுவதற்காகத் தமிழ் மக்கள் போராட முன்வர வேண்டும். இதில் வெளிநாட்டு உதவியைப் பெறவும் தமிழ் மக்கள் தயங்கக் கூடாது. சுதந்திரம் என்பது கடைச் சரக்கல்ல. சுதந்திரம் என்பதை கடுமையான போராட்டத்துக்கு ஊடாக தேவையெனின் இரத்தம் சிந்தும் போராட்டத்துக்கு ஊடாகப் பெற வேண்டும். இதற்குக் குறுக்கு வழி எதுவும் கிடையாது. எனினும் தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் மற்றும் ஒத்துழையாமை போன்ற போராட்டங்களையே முன்னெடுக்கும். ஆனால் சுதந்திர அரசை நிறுவுவதற்கான இப் போராட்டத்திற்கு வெளிநாட்டு ஆதரவும் தேவை” எனக் குறிப்பிட்டார்.

அமிர்தலிங்கம் கூறிய வார்த்தைகளின் உள்ளடக்க முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள அரசாங்கம் தவறிவிட்டது. வளர்ந்து வரும் தமிழ்த் தீவிரவாதத்தின் குறிகாட்டியாக அமிர்தலிங்கத்தின் சொற்கள் அமைந்திருந்தமையை அரசாங்கம் கவனத்திற்கு எடுக்கவில்லை. பிரிவினைவாதக் குரல் எழுப்புவதைத் தடுக்க அரசியல் ரீதியாக அரவணைக்கும் முயற்சியை எடுப்பதற்குப் பதிலாக யாழ்ப்பாணப் பொலிஸாரை விசாரணைகளில் ஈடுபடும்படி பணிப்புரை விடுக்கப்பட்டது. காங்கேசன்துறை பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரிடம் இருந்தும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர். அமிர்தலிங்கத்திற்கு எதிராக அரசாங்கம் தீவிரமான எதிர்ப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. அமிர்தலிங்கத்தை நாட்டுப் பற்று அற்றவர் எனவும், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி எனவும் அரசாங்கம் பிரசாரத்தில் ஈடுபட்டது. ஒத்துழைத்தல் மற்றும் இணக்கம் காணல் என்னும் மிதவாதப் போக்கை வெளிப்படுத்தி வந்த அமிர்தலிங்கம் தீவிரவாத இளைஞர்களின் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினார். இதேவேளை தமிழரசுக் கட்சியின் தெரிவுசெய்யப்பட்ட தலைவராக அமிர்தலிங்கம் வருவதை விரும்பாத மட்டக்களப்பின் பாராளுமன்ற உறுப்பினரான இராசதுரையும் அவரது ஆதரவாளர்களும் கூட அமிர்தலிங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இவ்வாறான சூழலில் 1972 ஜனவரி 30ம் திகதி தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் ஒரு மாநாட்டை நடத்தியது. இம் மாநாட்டில் அரசியல் நிர்ணய சபையின் நெறிப்படுத்தும் குழு மற்றும் விடயங்களுக்கான குழு என்பவற்றில் முன்வைப்பதற்காகச் சில முன்மொழிவுகளை வரையறை செய்தது. தமி


இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

ழர்களுக்கான உரிமைகளை வழங்க சிங்களத் தலைவர்கள் விரும்பமாட்டார்கள் என்று வற்புறுத்திய தீவிரவாத இளைஞர்கள் சமஷ்டி அரசியலமைப்பைப் பெறப் போராட வேண்டிய தருணமிது எனத் தெரிவித்தனர். அத்துடன் புதிய அரசியலமைப்பை ஒரு அடிமைச் சாசனம் என்று வலியுறுத்திய அவர்கள் இம் மாநாடு அதனை நிராகரிக்க வேண்டுமெனவும் கோரினர்.

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?



உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது.
எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

## உள மருத்துவம்

வெளியிட அச்ச நோய் தொடர்....

### வெளியிட அச்ச நோய் என்றால் என்ன?

இதுவே பெருமளவில் காணப் படும் அச்ச நோயாகும். ஆரம்பத்தில் பரந்த வெளிகளில் விசாலமான மைதானங்களில் இருக்கும்போது பயம் ஏற்படும் தன்மையையே இது குறித்தது. இலத்தீன் மொழியில் 'AGRO' என்பதற்கு திறந்த வெளி என்று பொருள்படும்.

உண்மையில் இது பிழையான சொற்றொடராகும். வீட்டுக்கு வெளியே இருக்கும் சந்தர்ப்பங்களிலேயே இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு வகைப் பய உணர்வுக்கோ அல்லது பீதிக்கோ உள்ளாகின்றனர்.

இவர்கள் உளவியல் ரீதியான, உடல் ரீதியான பதற்ற அறிகுறி களால் ஆட்டுவிக்கப்படுகின்றனர். ஆனால் பொதுவான பதற்ற நோயி னால் பாதிக்கப்பட்டவர்கள் போலன்றி சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களே இவர் களுக்குப் பிரச்சினையாக அமைகின் றன.

**வெளியிட அச்ச நோய் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் யாவை?**

1. வீட்டை விட்டுப் புறப்படுதல்
2. வாகனங்களில் தனியே பயணம் செய்தல்.
3. சனக் கூட்டமுள்ள இடங்கள். (உதாரணம்) பஸ் நிலையம், புகை யிரத நிலையம், பல்பொருள் அங் காடிகள், சந்தை.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் இவர்கட்குப் பலவாறான அச்ச உணர்வுகளில் ஒன்றோ பலவோ ஏற் படுகின்றன.

1. மீளவும் பய உணர்வுக்கோ பீதிக்கோ உள்ளாகச் சாத்தியமுள்ள தாக உணர்வு.
2. ஏதோ ஒன்றுக்குள் மாட்டிக் கொண்டிருப்பது போன்றதான, தப்பு வது கடினம் என்பதான உணர்வு.
3. தம்மைச் சுற்றியுள்ள சூழல் பழக்கமற்றதாகவும், வேறுபட்டிருப்பது மான உணர்வு.
4. தேவை ஏற்படின் உதவி பெறு வது சாத்தியமாகாது போகலாம் என்ற உணர்வு.

இப்படியான பய உணர்வு, பீதி, பதற்ற நிலைமை காரணமாக இவ்வா றான பல்வேறு சந்தர்ப்பங்களை நாளாந்த வாழ்க்கையில் தவிர்ப்பதற்கு முனைவார் கள். இது அவர்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிப்பது மாத்திரமல்ல, பய உணர்வையும் அதி கரிக்கச் செய்யும். காலப்போக்கில் வீட்டில் தனியே அடைந்து கிடக்கும் நிலைமைக்குத் தள்ளப்படுவார் கள்.

**வெளியிட அச்ச நோய் எவ்வாறு ஏற்படு கின்றது?**

முதலில் இந்தப் பய உணர்வு ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தின் பின்னரே ஏற்படுகின்றது. ஆயினும் ஒரு சிலரில் இந்த நோய் ஏற்படுவதற்கான சாத் தியக்கூறு அதிகம். மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் காரணமாக இவர்கட்கு வெற்வேறான பதற்ற அறிகுறிகள் தோன்றினாலும் இவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களையும் அச்ச உணர்வினை யும் தொடர்புபடுத்துவதால் இந்தப் பய உணர்வு ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை அதி கரித்துக்கொண்டே செல்லுகின்றது.

**வெளியிட அச்ச நோய் யாரை அதிகம் பாதிக் கின்றது?**

ஆண்களை விடப் பெண்களையே இந்த நோய் அதிகம் பாதிக்கின்றது. பொதுவாக 20 வயதிலோ 40 வயதிலோ பெண்கள் இந்த நோய்க்கு முதன் முதலில் உள்ளாகின்றனர்.

**வெளியிட அச்ச நோய்க்கான சிகிச்சை முறை கள் யாவை?**

1. நடத்தை மாற்றுச் சிகிச்சை முறை :

படிப்படியாக அச்சம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங் களுக்கு முகங்கொடுப்பதன் மூலம் இவர்களின் அச்ச உணர்வைக் குறைப்பதற்கு உதவி செய்யப்ப டுகின்றது.

2. சாந்த வழிமுறைகள் :

அளவுக்கு மீறிய பதற்ற நிலைமை ஏற்படும் போது ஒரு சிலரில் சாந்த வழிமுறைகளும், சந்தர்ப் பங்களுக்கு முகங்கொடுக்க ஊக்குவிப்பதும் இடை யிட்ட முறையில் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் குறித்த நோயாளி இந்த நோயின் தன்மைகளில் இருந்து விடுபடுகின்றார்.

3. மருந்துகள் :

மிகவும் கூடிய பதற்ற நிலைமை ஏற்படுகின்றபோதோ பாரிய பீதிக்கு உள்ளாகின்ற போதோ அவர்களை முதலில் நடத்தை மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்துவது கடினமாகின்றது. இவர் களுக்கு ஆரம்பத்தில் மருந்துகளைக் கொடுத்து அவர்களில் பதற்றத்தின் தீவிரத்தைக் குறைக்க வழிவகை செய்து கொடுக் கப்படுகின்றது.

### தனி அச்ச நோய்

ரமேஷ் 10 வயதுடைய பாடசாலை மாணவன். இவனுக்கு கடந்த இரு வருடங்களாக சிலந்தி தொடர்பான அச்சம் காணப் பட்டது. சிறிய சிலந்தி ஒன்றைப் பார்க்கின்றபோதும் வீரிட்டுக் கத்துவான். சிலந்திகள் இருக்கின்ற இடங்கள் என்று அவன் நினைக்கின்ற இடங்களைத் தவிர்த்து வந்தான். தொலைக்காட்சி யில் சிலந்திகள் பற்றிய விவரணத் தொடர்கள் வந்தால் தனது அறைக்குள் அலறிக்கொண்டே சென்றுவிடுவது அவனது வழக்கமாயிருந்தது. மற்றைய சந்தர்ப்பங்களில் தைரியமாக இருக்கின்ற ரமேஷ் சிலந்தியைக் காணும்போது மட்டும் அளவுக் கதிகமாகப் பயப்படுவது அவனது பெற்றோருக்கு ஒருபுறம் ஆச்சரியமாகவும், மறுபுறம் கவலையாகவும் இருந்தது. ரமேஷ் தனது இந்த அச்ச சுபாவத்தைக் குறைக்க வேண்டும் என்று எண்ணிய சந்தர்ப்பங்கள் ஏராளம். இந்த அச்ச சுபாவம் காலப் போக்கில் குறையும் என ஆரம்பத்தில் ரமேஷ"ம் அவனது பெற்றோரும் எண்ணியபோதும் வர வர அச்சம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இரு நாட்களின் முன்னர் ஏற்பட்ட சம்பவமே உள மருத்துவத்துறையை நாடுவதற்குக் காரணமாயிருந் தது.

வழக்கம் போல அவன் குளிக்கும்போது குளியலறையில் சிலந்தி ஒன்று இறந்து கிடந்ததைக் கண்ட பின்னர் குளியல றைக்கு செல்லுவதே அவனுக்குப் பிரச்சினையாக மாறியது. எப்போதுமே சுகாதாரத்தைப் பிரதானமாகக் கருதும் அவன் இந்தப் பயத்தால் குளிப்பதைத் தவிர்த்தான். அங்கு வேறு சிலந்திகள் இருக்கலாம் என்ற அச்சமே அதற்குக் காரணமாகி யது. பெற்றோர் எவ்வளவு தூரம் அவனுக்கு அறிவுரை கூறிய போதும் அவனால் இந்த அச்சத்துக்கு முகங்கொடுக்க முடிய வில்லை.

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.28க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எஸ்.வாசுதேவன், நித்ஸ்டேல் டிவிசன், அக்கரப்பத்தன.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ஜெ.சண்முகராஜா,அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15.
02. ஜோதிலஷ்மி கனகசபை, மொல்லிகொட லேன், கம்பளை.
03. செல்வி. சரீகா குவைஸ், அநுராதபுர வீதி, புத்தளம்.
04. இ.டக்ஷாயினி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
05. திரு.கே.இராஜகோபால், வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
06. செல்வி.வித்யா ராமசிவம், லிந்துல, தலவாக்கலை.
07. எம்.ஆர்.பாத்திமா ரம்ழா, போல்ஸ் வீதி, புத்தளம்.
08. கே.சாமிணி, கடல் காட்சி வீதி, திருகோணமலை.
09. எஸ்.எச்.எம்.ரம்ஸி, கலல்பிட்டிய, உக்குவெல.
10. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் - 03.

### குறுக்கெழுத்துப் போட்டி 30

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | ■ |
| 8 | ■ | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | ■ | ■ | ■ | 18 |
| 19 | 20 | 21 | 22 | ■ |

**இடமிருந்து வலம்**

1. தர்மன் நாட்டையும், மனைவியையும், சகோதரர்களையும் இழப்பதற்குக் காரணமாக இருந்தது.
9. பாடலும் இதுவும் மனதுக்கு இதம் தரும். (குழம்பியுள்ளது)
12. இதை தொப்புளில் சுற்ற விடுவதை சினிமாவில் காணலாம். (குழம்பியுள்ளது)
19. கையொப்பத்திற்கு ஈடானது.

**மேலிருந்து கீழ்**

1. இராவணனுடைய தங்கை.
3. 'இது ஒரு இருட்டறை' என்று ஒரு சினிமாப்படம் உள்ளது. (குழம்பியுள்ளது)
10. இது போனால் சொல் போய் விடும் என்பர். (தலைகீழாகஉள்ளது)
11. விட்டத்தை இரண்டாகப் பிரித்தால் வருவது.

**குறுக்கெழுத்துப் போட்டி 28 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ம | 2 ரு | 3 தா | 4 ணீ | ■ |
| 5 ட | ■ | 6 லி | ■ | 7 லை |
| 8 க | 9 டா | ■ | 10 டி | 11 மா |
| 12 ஸ் | ■ | 13 வி | 14 ஆ | ■ |
| 15 கா | 16 ர் | 17 கி | 18 ல் | ■ |
| 19 ர் | ■ | 20 ழ | 21 வே | 22 ம் |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.08.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-30**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 594727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

04

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்: ........................

கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-08-2003

அனுப்ப வேண்டிய முகவரி:- 'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை' தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**அக்கரைப்பற்று வாசகிக்கு அதிர்ஷ்டம்!**

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

எஸ். சுசீலா
நெசவு நிலைய முன் வீதி, அக்கரைப்பற்று-07


பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

### எந்தையும் தாயும்

**அ**ன்றிலிருந்து ஒரு முடிவு எடுத்தேன். என்னுடைய எழுத்தை நானே தலையில் தூக்கிவைத்துக் கொண்டு குதிக்கின்ற அறியாமையை, விட்டொழித்து அது பற்றி அடுத்தவரின் கருத்தையே



'அக்மார்க்'காக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த முடிவு. இதிலிருந்து எந்தக் கதை எழுதினாலும் எவரையாவது தேடி பிடித்து அவரிடம் வாசித்துக்காட்டி அபிப்பிராயம் கேட்கலானேன். கதையோடு வருவதைப் பார்த்துக் கால் பிடரியில் பட ஓடியவர்களும் உண்டு.

ஒரே ஒருவர் என் உடம்பில் உற்சாக ஊசிகளை ஏற்றினார். என் கதைகளில் நான் கையாண்ட சின்னச் சின்ன உவமைகளை எல்லாம் கிரக்கம்பம் செய்து சிலாகித்தார். உரைநடையில் இப்படியொரு வீச்சா? என்றெல்லாம் உளமாரப் பாராட்டினார். "உனக்கு அறிவு வயதைத் தாண்டி வளர்கிறது." என்று என் உச்சந்தலையில் 'நச்' சென்று ஒரு. வைத்து என்னைக் குஷிப்படுத்தினார். மொத்தத்தில் கச்சிப்போயிருந்த இந்தப் பித்தளைப் பாத்திரத்தை எடுத்து, அன்றாடம் ஈயம் பூசிப் பயன்டு பொருளாக ஆக்கிய பெருந்தகை அவரே.

அவர் என் வீட்டின் எதிர் வரிசையில் குடியிருந்தார். இன்றே ஒரு புகழ் வாய்ந்த எழுத்தாளர். எழுத்துக்கள் அந்நாளில் அவரது கலைமகளில் கொடி கட்டிப் பறந்தன. "ஏடுகள் சொல்வதுண்டோ?" "அன்னையிட்ட தீ" ஆகிய சிரஞ்சீவிக் கதைகளை எழுதி அனைவரையும் அசத்தியவர். அவர்தான் ஸ்ரீரங்கம் ராமகிருஷ்ணன்.

அச்சம் என்பது இன்னதென்று அறியாதவர். ஹாரத்தில் புகை பிடித்த முதல் ஆரியர். கட்டுப்படியான வழக்கங்களையும், கண்மூடித்தனமான பழக்கங்களையும் சிகரெட் நெருப்பாலேயே சுட்டுவிட முடியும் என்கிற நம்பிக்கையோடு நடைவலம் வந்தவர். ஆங்கிலமும், தமிழும் அத்துப்படி.

பிற்காலத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து எத்தனையோ எழுத்தாளர்கள் பறப்பட்டார்கள். புகழ் விளிம்பையும் தொட்டார்கள் ஏ.எஸ்.ராகவன், ஸ்ரீரங்கம் நரசிம்மன், பிலஹரி என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். சிவாச்சாரியார் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி.குமுதினி அவர்கள் இவர்களுக்கெல்லாம் மூத்தவர் ஆவார். திருமதி கிருஷ்ணா என்று தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புகழ் மணம் பரப்பிய பெண் எழுத்தாளர்களும் திருவரங்கத்து மண்ணில் தோன்றியவர்களே.

இருப்பினும் இவர்களிடமிருந்தெல்லாம் வித்தியாசப்பட்டு நின்றவர் ஸ்ரீரங்கம் ராமகிருஷ்ணன்.

அவருடைய தமிழ் நடை அலாதியானது. வாக்கியங்களில் உட்காரும் வார்த்தைகளைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவார். நெருப்பைப் பற்றி அவர் ஒரு பாரா எழுதினால், அதைத் தொட்டுப் பார்த்தால் நம் சுட்டு விரல் சுடும். அழகு வண்ணனைகளில் அவர் காளிதாசனையே தூக்கிக் கக்கத்தில் வைத்துக்கொள்வார்.

இத்தகு எழுத்தாளர் ஏனோ ஸ்ரீரங்கத்தின் மீது வெறுப்புற்று வேலை தேடி பம்பாய் சென்றுவிட்டார். என் உள்ளக்கனலை ஊதி வளர்க்க ஆளில்லாததால் நானும் சிறுகதை எழுதுவதை விட்டுவிட்டுச் சித்திரம் எழுதத் தொடங்கினேன்.

பாட்டில் பாட்டிலாக இந்தியன் இங்க் வாங்கி வைத்துக்கொண்டு போவார் வருவோரையெல்லாம் உட்கார்த்தி வைத்துப் படம் வரையலானேன். எவரைப் பார்த்தாலும் அவரைப் போலவே படம் வரையும் ஆர்வம் கூடிவந்ததால் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு எந்த மந்திரி வந்தாலும் அவர் படத்தை வரைந்து கையெழுத்து வாங்காமல் விடமாட்டேன். இந்தக் குணம் ஒரு Stigma மாதிரி என்னோடு ஒட்டிக்கொண்டது.

ஸ்ரீரங்கத்தில் முதல் திருமாளிகை என வழங்கப்பெறும் தாத்தாச்சாரியார் வீட்டில் ஒரு திருமணம் நடைபெற்றபொழுது பாப்பா வெங்கட்ராமையா, பாலக்காடு மணி அய்யர் முதலிய பக்கவாத்திய வித்வான்களின் படங்களை வரைந்து கையெழுத்து வாங்கினேன். பாடகரிடமும் அவ்வாறு செய்தேன். ஆனால் பாடியவர் முசிறியா, அரியக் குடியா என்பது இப்போது நினை வில் இல்லை.

அப்போது, தரையில் ஜமக்காளத்தில் நரைத்த கிராப்புத் தலையோடு ஒருவர் உட்கார்ந்து கொண்டு சங்கீத வித்வான் பாடிய 'சலமேலரா' எனும் மார்க்க ஹிந்தோளக் கீர்த்தனையை வெகுவாக இரசித்துக்கொண்டிருந்தார். சுற்றியிருப்பவர்கள் அவருக்கு மிகப் பெரிய அளவில் மரியாதை காட்டியதிலிருந்து அவர் புகழ் வாய்ந்த பிரமுகராகத்தான் இருக்க வேண்டும் என்று என்னுள் எண்ணிக்கொண்டேன். அவரது Profile ஓர் ஓவியன் என்னும் முறையில் வெகுவாக என்னைக் கவர்ந்தது. மணப் பந்தலில் ஓர் ஓரமாக அமர்ந்துகொண்டு அவரது ஓவியத்தை நான் வரைந்து முடித்தேன். அவரிடம் எப்படி இந்தப் படத்தைக் காட்டிக் கையெழுத்து வாங்குவது என்றுதான் யோசித்தேனே தவிர, அவர் யார் என்று அறிய நான் முற்படவில்லை.

திரு.சம்பத்தாத்தம் அவர்களின் மகன் ராம்ஜி எனப்படும் ரங்கராஜன் என்னுடைய பள்ளித் தோழன். "டேய், வாலி! இங்க கொண்டா அந்தப் படத்தை நான் கையெழுத்து வாங்கித் தர்றேன்" என்று படத்தை என்னிடமிருந்து பறித்துக்கொண்டு போய் அந்தப் பிரமுகரிடம் காட்டி அவரது கையெழுத்தையும் வாங்கித் தந்தான். என்னையும் அவரிடம் அறிமுகப்படுத்திவைத்தான்.

அந்தப் பிரமுகர் எனது படம் வரையும் ஆற்றலைப் பாராட்டிவிட்டு. "மெட்றாசுக்கு வந்தா என்னெ வந்து பாரு" என்று சொல்லி அன்பொழுகப் புன்னகைத்தார்.



பிற்பாடுதான் தெரிந்துகொண்டேன், அந்தப் பிரமுகர் ஹிந்து பத்திரிகையின் அதிபரும், ஆசிரியருமான திரு.கே.ஸ்ரீனிவாசன் என்று. அவரது மகனும் பிரபல ப அதிபருமான திரு.ரங்கராஜன் இன்றளவும் என் இனிய நண்பர். இவரது தந்தையின் படத்தை நான் வரைந்தேன். இவர் நான் எழுதிய கதையைப் படமாக எடுத்தார். அந்தப் படம்தான் ஜனாதிபதி விருது பெற்ற 'ஒரே ஒரு கிராமத்திலே' பின்னால் இதே தொடரில் நான் சினிமாவைப் பற்றி நிறைய எழுத இருக்கிறேன். அப்போது இந்த 'ஒரே ஒரு கிராமத்திலே' வெளியாவதற்கு முன் எத்தனை வழக்குகளைச் சந்தித்தது என்று விவரமாக எழுதுகிறேன்.

ஒரு நாள் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து முன்பு வந்தது போலவே கப்பல் போன்ற காரில் ஒரு கனவான் வந்து என் வீட்டு வாசலில் இறங்கினார்.

"தம்பீ! உன்னெ ஸ்டேஷன் டைரக்டர் கையோட கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்" என்றார் காரில் வந்தவர். போய்ப் பார்த்தேன்.

கல்கியோடு வந்த திரு.பார்த்தசாரதி அய்யங்கார்தான் நிலைய நிர்வாகியாக இருந்தார்.

"உன் கையெழுத்துப் பத்திரிகையைப் பார்த்துட்டு கார்ல வர்றபோதே கல்கி 'இந்தப் பையனை உங்க ரேடியோவுல பயன்படுத்திக்கங்க' என்று எங்கிட்ட சொன்னாரப்பா. வானொலி பத்திரிகைக்காக சில படங்களை வரைய வேண்டியிருக்கு" என்று என்னை வானொலி ஏட்டின் ஆசிரியரிடம் அறிமுகப்படுத்தினார் திரு.பார்த்தசாரதி.

அன்று 'வானொலி' ஏட்டின் ஆசிரியராக இருந்தவர்தான் திரு.பெ.கோ.சுந்தரராஜன். இப்படிச் சொன்னால் உங்களுக்குப் புரியாது. 'சிட்டி' என்று சொன்னால் சட்டென்று புரியும். 'மணிக்கொடி' காலத்து எழுத்தாளராயிற்றே!

'சிட்டி' ஒரு மகோன்னதமான மனிதர். முந்தாநாள் வந்த என்னை, முந்நூறு நாள் பழகியவன் போல் நடத்தினார். அவர் முகத்தில் சிரிப்பைக் காண்பது அரிதாயிருக்கும். இருப்பினும் அவரது உள்ளம் மல்லிகையிலும் மெல்லியதானது என்பதை நாளாவட்டத்தில் அறிந்துகொண்டேன்.

பிழைப்பு, போஸ்டர் கலரும் பிரஷ்ஷுமாக ஓடிக்கொண்டிருந்தது. சிட்டி அவர்களுக்கு நான் ஒரு கற்றுக்குட்டி ஓவியன் என்கிற அளவில்தான் அறிமுகமாகியிருந்தேனே தவிர, கவிஞனாகவோ கதாசிரியனாகவோ என்னைக் காட்டிக்கொள்வதற்கான சந்தர்ப்பமே எனக்குக் கிட்டவில்லை.

**தொடர்ந்து வரும்....**

# வாய் விட்டுச் சிரித்தால் - நோய் விட்டுப் போகும்

(ஜார்ஜ் புஷ்ஷுக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து போன். எதிர் முனையில் ஒஸாமா பின்லேடன்)

"புஷ்! உங்களுக்கு ஒரு நல்ல செய்தியும் கெட்ட செய்தியும் வைத்திருக்கிறேன்." — பின்லேடன்.

"முதல்ல நல்ல செய்தியைச் சொல்லுங்க." — புஷ் பரபரத்தார்.

"நான் சரணடையலாம்னு முடிவு பண்ணியிருக்கிறேன் அதுக்காக வாஷிங்டனுக்கு வரப்போகிறேன்."

"வாவ்... நிஜமாக நல்ல செய்திதான் ! இதை முன்னாடியே செஞ்சிருந்தா ஆப்கானிஸ்தான் இவ்வளவு அழிவை சந்தித்திருக்காதே! சரி.. ஏதோ கெட்ட செய்தி இருக்கிறதா சொன்னீங்களே, அது என்ன?"


"அதுவா..." –

(நக்கலாக வார்த்தைகளை இழுத்தபடி பின்லேடன் சொன்னது)–

"நான் வரப்போறது ஃப்ளைட்ல!"




**ஒ**ரு பெண்மணி தனது வீட்டில் கிளி வளர்க்க ஆசைப்பட்டாள். அருகில் உள்ள பறவைகள் விற்கும் கடைக்குச் சென்று அழகான ஒரு கிளியைத் தேர்வு செய்தாள். அந்தக் கடை விற்பனையாளரோ, அந்தக் கிளி நல்ல இடத்தில் இருந்து வரவில்லை என்று சொல்லி வேறு கிளியை தேர்வு செய்யுமாறு கூறினார். அந்தப் பெண்மணியோ பிடிவாதமாக அந்தக் கிளியை வாங்கிச் சென்றாள். தனது வீட்டின் முன்னறையில் அந்தக் கிளிக் கூண்டை வைத்தாள். அந்தக் கிளி, "புதிய அழகான வீடு" என்றது. இதைக் கேட்டு அவள் சந்தோசமடைந்தாள். அவளது இரு பெண்களும் பள்ளியில் இருந்து வீடு திரும்பினர். உடனே அந்தக் கிளி "புதிய அழகான பெண்கள்" என்றது. இதைக் கேட்டு அந்தப் பெண்மணி, "மிகவும் மரியாதை தெரிந்த கிளி. அதனால்தான் அந்தக் கடைக்காரர் அதை விற்க மறுத்துள்ளார்" என்று நினைத்துக்கொண்டாள். அவளது கணவன் சிறிது நேரத்தில் வீடு திரும்பினான். அந்தக் கிளி அவனைப் பார்த்து, "புதிய வீடு, புதிய பெண்கள். ஆனால், அதே பழைய வாடிக்கையாளர்" என்றது.



**ஒ**ரு தொழில் அதிபருக்கு ஒரு கோடி பணம் தேவைப்பட்டது. பணத்தேவையைச் சரிசெய்ய கோயிலுக்குக் கடவுளிடம் வரம் கேட்பதற்காகச் சென்றார். அதே சமயத்தில் இரண்டு ஏழைகளும் தமது தேவையை சொல்வதற்காக கோயிலுக்கு வந்திருந்தனர். மூவரும் வாய்விட்டுச் சொல்லி கடவுளிடம் தம் தேவைகளைக் கூறினர். ஏழைகளின் தேவைகளைக் கேட்ட தொழில் அதிபர் தன்னுடைய பாக்கெட்டில் உள்ள ஐந்நூறு ரூபாய் பணத்தை எடுத்து ஆளுக்குப் பாதி கொடுத்து-

"கடவுள் உனக்குக் கொடுக்கச் சொன்னார்" என்றார்.

இரண்டு ஏழைகளும் கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினர். உடனே தொழில் அதிபர்

"கடவுளே! கடவுளே! இரண்டு ஏழைக்கு நான் உதவியது போல எனக்கும் யாரையாவது அனுப்புங்கள்." என்று கூறி காத்துக்கொண்டிருந்தார்.

**பெண்:** "என் கணவருக்கு பயங்கர ஞாபக மறதி."

**தோழி :** "அப்படியா?"

**பெண்:** "முதலிரவு முடிந்ததும் நீயாரு... எதுக்காக என்னைப் பாத்து வெக்கப்படுறேன்னு கேட்கிறார்"

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## வாழ்வும் மரணமும்

**வா**ழ்வும், மரணமும் ஒரே நேரத்தில் சேர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கும் இயற்கையின் இரண்டு அம்சங்கள் ஆகும்.

சாதாரணமாக மரணம் என்பது வாழ்க்கைக்கு எதிரானது என்று எண்ணும்படி உனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மரணம் வாழ்விற்கு எதிரானது அல்ல. மரணமில்லாமல் வாழ்வு என்பது சாத்தியப்படாது. மரணம் என்னும் பூமியில்தான் வாழ்வானது நிலைகொண்டிருக்கிறது. வாழ்வும், சாவும். இரண்டு சிறகுகளைப் போல. ஒற்றைச் சிறகினால் பறவை பறக்க முடியாது. அதே போல் மரணமில்லாமல் எந்த உயிரும் இருக்க முடியாது. ஆகவே முதல் காரியம் என்னவெனில் நாம் மரணம் என்பதன் மூலமாக எதைக் குறிக்கிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வாழ்வு இருக்க வேண்டுமெனில் அதற்கு முற்றிலும் அவசியமான செயல் மரணம் ஆகும். அது விரோதியல்ல, அதுதான் நண்பன். மேலும் மரணம் என்பது எங்கோ எதிர்காலத்தில் இல்லை. அது இங்கேயே இப்பொழுதே உள்ளது. இனிமேல்தான் அது சம்பவிக்கப் போகிறதென்பதில்லை. மரணம். எப்போதும் சம்பவித்துக்கொண்டே இருக்கிறது. எப்போது நீ இங்கு இருக்கிறாயோ, அப்போதிருந்தே அது உன்னோடு இருக்கிறது. ஒரு தடவை மூச்சை வெளியே விடும்போது அது சம்பவிக்கிறது. ஒரு குட்டி மரணம். ஒரு சிறிய சாவு, ஆனால் பயத்தின் காரணமாக அது ஏதோ எதிர்காலத்தில் சம்பவிக்கப் போவதாக வைத்துவிட்டோம்.

பகவான் ஸ்ரீ ரஜனீஷ்

# இலக்கிய நயம்

## பூக்களைத் தாங்கிய எழிற்சோலை தன் விழிகளுக்கெதிரே.....

தருவது முழடில்யன்

"நான் போகட்டுமா?" என்று சிணுங்கினாள் சந்தோஷி.

சொல்வலன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். தன் சித்தத்தை அடியோடு சீரழிக்கும் நோக்கத்துடன் இயற்கை சிருஷ்டித்துவிட்ட அற்புதப் பூக்களைத் தாங்கிய ஓர் எழிற்சோலை தன் விழிகளுக்கெதிரே நிற்பதைக் கண்டான். சலனமடைந்தான். சிறிது சங்கடமும் அடைந்தான்.

இடை துவள, ஒரு கரம் நீண்டு அருகிலிருந்த செடியில் மேலும் ஒரு மலராகப் பொருந்தியிருக்க, இன்னொரு கை இடையில் பொருந்த, கால்கள் சற்றே ஒருபுறம் வளைய, பக்கவாட்டில் தலைசாய்த்து அவள் நின்ற கோலம் முதல்தரமான ஒரு நாட்டியக் கோலமாயிருந்தது.

சொல்வலன் அவளுக்குப் பதிலெதுவும் சொல்லாமல் அருகில் வந்தமருமாறு கையால் சைகை செய்தான்.

"நான் போக வேண்டும்" என்று செல்லக் குழந்தை போலக் காலொன்றைத் தரையில் உதைத்தாள் சந்தோஷி.

கருத்தழிக்கும் அசைவுகள் சில அவனைக் கலங்கவைத்தன. அவள் மீதான ஆராய்ச்சிப் பார்வையைத் தொடர்ந்தபடி,

"போகலாம்...இங்கே வா..." என்று அழைத்தான்.

அவள் சிணுங்கியபடியும், சேலையை ஒரு கையால் ஒருக்களித்துப் பிடித்தபடியும் நெருங்கி வந்தாள்.

அந்தப் பச்சை நிற நூல் சேலை வாளிப்பிடம் தோற்றிருந்தது. திமிறித் தெரிந்த அழகுகளிடம் அவன் தோற்றிருந்தான்.

"இயற்கைதான் மிகப் பெரிய பொற்கொல்லன்! தங்கத்தில் இப்படியொரு அற்புதத்தை இழைத்துவிட மனிதக் கைகளுக்கு எது திறமை?" என்று சொல்வலன் மனதுக்குள் நினைத்துக்கொண்டான்.

சந்தோஷி அவனுக்குச் சற்றுத் தள்ளி அமர்ந்தாள். சொல்வலன் அவளையே பார்த்தவாறிருந்தான். அவன் கண்களில் காம இச்சை நிரம்பி நின்றதை அவள் கண்டாள். அவளது உடலும் உணர்ச்சியலைகள் தாக்கி அதிர்ந்துகொண்டிருந்தது. அவனை விட்டு விலகி உட்கார வைத்த பண்பாட்டை மனதுக்குள் சபித்துக்கொண்டாள் சந்தோஷி.

சொல்வலன் வேறு எதன் மீதும் கவனம் கொள்ளாமல் சந்தோஷி முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கூச்ச மேலீட்டால் தலையைக் குனிந்து, அங்குமிங்குமிருக்கிற சருகுகளை ஒதுக்கித் துப்பரவு செய்கிறவள் போல நடந்துகொண்டாள்.


உள்ளே மனம் கரைந்து உணர்ச்சிகள் பொங்கி வழிந்தன.

சொல்வலன் மெல்ல நகர்ந்து வந்து அவளை நெருங்கி அமர்ந்துகொண்டான்.

விலகும் துணிவு அவளிடமிருக்கவில்லை. நெருக்கத்தில் உராய்ந்த சேலையும், அவள் சூடியிருந்த மல்லிகையும், கூந்தல் தைலங்களும் கலந்த அந்த மணத்தில் சொர்க்கத்தின் விவரங்கள் இருந்தன.

இன்ப அலைகள் அவனுடலை ஊடுருவிச் சென்றன.

அவளது இடது கையை மெல்ல பற்றித் தன் உள்ளங்கைக்குள் அடக்கிக்கொண்டான். அவன் உதடுகள் அசைந்தன.



வார்த்தைகள் வரவில்லை.

"என்ன சொன்னீர்கள்? கேட்கவில்லை...." என்று வயலின் நரம்புகளைச் சுண்டினாள் சந்தோஷி.

அவள் குரலின் மென்மையிலிருந்தும் கனிவிலிருந்தும் இலேசான நடுக்கத்திலிருந்தும் அவள் உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கிறாள் என்று சொல்வலன் புரிந்துகொண்டான்.

அவள் கரத்தைத் தன் இடையில் வைத்து அழுத்தியவாறே,

"சிருஷ்டியின் சிறந்த அழகை என் வாழ்நாளில் காண்பதற்கு உதவி செய்த கடவுளுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

அவள் வதனத்தில் வெட்கத்தின் சாயை படிந்தது. செவ்விய இதழ்கள் வெட்கப் புன்முறுவலால் இலேசாக மடிந்தன. அழகிய குழி விழுந்த கன்னங்கள் அவள் அழகை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தின.

சொல்வலன் மேலும் நெருக்கமாக நகர்ந்துகொண்டான். சந்தோஷி, அவன் கையுடன் தன் கையை மோதவிட்டவாறே அந்தக் கைகளின் அத்துமீறலையும், அந்தரங்கமான சிற்சில முயற்சிகளையும் தடுத்தாள். அந்தத் தடுத்தலின் வலிமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போய் மிக விரைவிலேயே மற்றொரு உலகத்திற்கு இருவரும் நழுவினர்.

அவர்கள் நனவுலகத்திற்கு வந்த அந்த யுகத் தாண்டலுக்குப் பின்னர்,

"அகம் மலிந்து யானும் அறம் நிலை பெற்றோர் அனையேன்" என்றான் சொல்வலன்.

"என்ன" என்பது போல அவனை ஏறிட்டாள் சந்தோஷி.

"பொன்னும் மணியும் போல உன் மேனி, எப்போதும் பிரகாசமுடனிருக்கிற உன் வடிவம், இனிய வாசனையுடன் அடர்ந்திருக்கும் கருநீலக் கூந்தல், குவளை மலரைப் போல அழகிய மையுண்ட உன் கண்கள், மூங்கில்கள் போன்று நீண்டுருண்ட அழகிய உன் தோள்கள்.... இவைகளைப் பார்க்கும்போதெல்லாம் என்னுள்ளத்தே பெருகுகின்ற மகிழ்ச்சிக்கு உவமையாகத்தான் அதைச் சொன்னேன் கண்ணே..."

"அதென்னது?"

"தருமத்தின்படி நடப்பவர்கள் எவ்வளவு மனப் பூரிப்பும், பயனும் அடைவார்களோ, அது போன்றதொரு பேறுதானே என் பேறும்...!" என்று சொல்லியபடி அவள் மடியில் படுத்துக்கொண்டான் சொல்வலன்.

**பொன்னும் மணியும்**<br>
**போலும் யாழநின்**<br>
**நன்னர் மேனியும்**<br>
**நாறிருங் கதுப்பும்**<br>
**போதும் பணையும்**<br>
**போலும் யாழநின்**<br>
**மாதர் உண்கணும்**<br>
**வனப்பின் தோளும்**<br>
**இவை காண் தோறும்**<br>
**அகம் மலிந்து யானும்**<br>
**அறம்நிலை பெற்றோர்**<br>
**அனையேன்....**

**(நற்றிணை : *166 : 1–6*)**

# சிந்தியா

## பதில்கள்

☆ **கேள்விகளுக்குப் பதில் எழுதும்போது மனதுக்குள் என்ன நினைப்பீர்கள்? கொம்பு முளைத்திருக்கிறது என்றா?**

ஏ.எல்.முஹமட் றஸ்மி,அட்டாளைச்சேனை– 02.

"நான் என்னை ஒரு மாணவன் மாதிரி வைத்துக்கொள்கிறேன். இப்படிச் சொல்வது பொய்யான அடக்கத்தினால் இல்லை. கேள்விகளை மக்கள் (வாசகர்கள்) தயார் செய்கிறார்கள். அவர்கள் கேள்விக்குப் பதில் தேடும் மாணவனாக என்னை நினைக்கிறேன். ஏற்கெனவே தெரிந்த பதில்களுக்குக் கூட இதற்கு இந்தாள் என்ன சொல்கிறார் என்று பார்ப்பதற்கு கேள்விகள் கேட்கலாம் இல்லையா? கேள்வி கேட்பதால் அவர்களுக்குத் தெரியாது என்று அர்த்தமில்லை."

மேலே உள்ளது, நீங்கள் கேட்டிருப்பது போன்ற கேள்விக்கு மதன் சொல்லிய பதில். (மதன் என்று வேறு மனதுக்குள்ள நினைப்பா? என்று நீங்கள் இப்போ சிரிக்கிறீர்களாக்கும்....)

✉✉✉

☆ **சமீபத்தில் தாக்குதல் எதுவும் நடக்கவில்லைதானே?**

ஆர்.குமரேசன், கிளைன் எஸ்டேட்.

நடந்தது. லண்டனில். கொலின் கௌட்றி நினைவுச் சொற்பொழிவில் சுனில் கவாஸ்கார் அவுஸ்திரேலிய வீரர்களுக்குக் கொடுத்திருக்கும் டோஸ்!

✉✉✉

☆ **அமைதியான நடு இரவின் பின்பொழுதில் இளையராஜாவின் ஜனனி பாடலை, ஹரிஹரனின் சில பாடல்களைக் கேட்டபடி விழித்திருந்த அநுபவம் உண்டா?**

ஆர்.கனகராஜன், வவுனியா.

அட, நீங்களுமா! நான் எனக்கென்றே ஆன தேவலோகத்தின் தேசியகீதங்கள் என்றல்லவா நினைத்திருந்தேன்.

✉✉✉

☆ **தமிழ் நடிகைகளில் உங்களைக் கவர்ந்த அழகு யாரிடமிருக்கிறது?**

த.மயூரா, நெடுங்கேணி.

ஒல்லிக்குச்சி உடம்பு, உயரம், இல்லையோவெனும் இடை என்பதெல்லாம் உலக அழகி இலக்கணங்கள். நமக்கோ கதை பேசும் கண்கள்! அதிலும் நாணம் கொண்டு வருவதே நம் நடிகைகளுக்குப் பெருஞ் சவால். அந்த வகையில், கொஞ்சம் பழையவர்தான் என்றாலும் நெஞ்சம் பதற்றமுற வைப்பவர் - மதர்த்த நாணக் கடலில் விழிகளை மிதக்கவிடும் மீனா!

✉✉✉

☆ **இங்கு நின்று பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் வெளிநாடுகளுக்கு ஓடிப்போனவர்கள் பற்றி....?**

இ.வாசவன், யாழ்ப்பாணம்.

மாற்றுக் கருத்துடையவர்களாயிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் கூட இங்கு பொங்கு தமிழ்க்காரர்களால் பொட்டுப் பொட்டென்று படுகொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், புலம் பெயர்ந்த நண்பர் ஒருவர் போனில் சொன்னார் :

"கொல்லுறதுக்காகத் தற்கொலைப் படையாகி நிற்கிறவர்களும், கொல்லப்படுறதுக்காகத் தற்கொலைப்படையாகி நிற்கிறவர்களும் என்றிருக்கிற நாட்டுச் சூழலில் எங்களைப் போல சாமானியர்கள் வாய்ப்புக் கிடைத்தால் வெளிநாட்டுக்கு ஓடிப்போவதைத் தவிர வேறென்ன வழி?"

✉✉✉

☆ **உலகம் என்பது என்ன? தத்துவார்த்தமாய் விளக்க முடியுமா?**

ராஜிபிரேமநாதன், தலவாக்கலை.

உலகம் வட்டமானது. வட்டம் என்பது சைபர். சைபர் என்றால் ஒன்றுமில்லை. எனவே உலகம் என்பது ஒன்றுமில்லை.

✉✉✉

☆ **புதிய புதிய பயன்பாட்டுத் தேவைகளுக்கேற்ப புதிய தமிழ்ச் சொல் உருவாக்கங்களும் வேண்டுமல்லவா?**

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை–01.

அதற்காக, 'விடுதலைப் போராட்டம்' என்றால் விளங்குவதை 'தளை நீக்கற் தொடர் போராட்டங்கள்' என்றெல்லாம் 'சுத்த" என்ன அவசியம்?

✉✉✉



☆ **கோணல் பக்கங்களில் நகைச்சுவை இருப்பதாகச் சொல்லிவிட்டு, உதாரணப் பகுதியில் மனம் வருந்த வேண்டிய மிகச் சீரியஸான விஷயத்தையல்லவா எடுத்துக்காட்டாய்க் கொடுத்திருக்கிறீர்கள்?**

வி.ரதிப்ரியா, கொழும்பு – 06.

தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதோ இரு நையாண்டிகள் :

சுந்தர ராமசாமியின் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்" நாவலுக்கு ஒரு வரி விமர்சனம் : 'அலிகள் என்ன பாவம் செய்தார்கள் சாமி?"

மற்றொரு வருத்தம் : 'தவசி படத்தில் விஜயகாந்த் காலேஜ் மாணவனாக நடித்திருக்கிறாராம்! விஜயகாந்தே இப்படிச் செய்தால் பிறகு முரளி என்ன செய்வார் பாவம்?"

✉✉✉

☆ **சமாதானத்தைக் குழப்பும் விதமாக நடந்துகொள்கிறவர்கள் பொதுமக்களின் விரோதிகள்தானே?**

க.சுதர்சன், கொழும்பு.

கொலைகள் நடக்கிறது. எந்த சட்ட வரையறைகளுக்குள்ளும் அடங்காத நிர்ப்பந்தங்களும், கப்பங்களும், வரி விதிப்புகளும் நடக்கின்றன. ஒருவர் தனது அரசியல் கருத்தை வெளியிட முடியாத அச்சச் சூழ்நிலையையே ஊடகங்கள் எல்லாம் விடுதலை எனப் பிரகடனப்படுத்துகின்றன. மாற்றுக் கருத்துள்ளவர் ஒருவர் கொல்லப்பட்டால் அவருக்கு அஞ்சலி செய்வதைக் கூட மற்றவர்கள் வெளிப்படையாகச் செய்ய முடியவில்லை. தமது கட்சித் தலைவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார் என்று ஒருவர் சிங்களத் தொலைக்காட்சிப் பேட்டியில் சொல்ல முடிவதைத் தமிழில் சொல்ல முடியவில்லை....

இப்படியாகப்பட்ட சூழலில், சமாதானம் எங்கே என்று தெரிந்தால்தானே அதைக் குழப்புகிறவர்களைச் சொல்ல!

✉✉✉

☆ **காதல் எதுவரை?**

எஸ்.எச்.எம்.றிபா, கல்முனை – 08.

கல்யாணம் ஆகும் வரை என்று சந்திரபாபு ஒரு பாட்டில் சொல்கிறார். ஆனால் காதலின் அனுகூலங்களை உணர்ந்தவரால் அதை முடித்துவிட முடியாது. உலகப் புகழ் பெற்ற ஓவியர் சல்வடோர் டாலி தன் காதலியின் கல்லறை முன் நின்று கவிதை கவிதையாகப் புலம்புகிறார். கடைசி வரி : "என் கண்ணே....நான் இன்னும் உன்னைக் காதலிக்க ஆரம்பிக்கவே இல்லை. அதற்குள் மறைந்துவிட்டாயே!"

✉✉✉

☆ **சரியாக நடந்துகொள்ளும் மனிதர்கள் எப்படி இருப்பார்கள்? உதாரணம் தர முடியுமா?**

பெ.கோகிலன், ஹட்டன்.

முற்றிலும் சரியான ஒரு மனிதர் இருக்க முடியும் என்று நான் நம்பவில்லை. ஆனால் அதற்காக முயற்சி செய்தபடி இருப்பவர்களை சரியான மனிதர்கள் என்று ஏற்றுக்கொள்வேன்.

உதாரணத்திற்கு ஆபிரகாம் லிங்கன் பற்றி எங்கோ படித்ததைத் தருகிறேன்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த லிங்கன் ஒரு முறை ஒரு குறிப்பிட்ட படைப்பிரிவை இன்னோர் இடத்திற்கு மாற்றும் உத்தரவில் கையெழுத்துப் போட்டார்.

உத்தரவு இராணுவத்துறைச் செயலாளர் ஸ்டான்டன் பார்வைக்கு வந்தது. அவருக்கு அந்த உத்தரவு சரியாகப் படவில்லை. ஜனாதிபதியின் ஆணையை நிறைவேற்ற மறுத்தார். அது மட்டுமல்லாமல், "இன்றுள்ள நிலையில் ஒரு முட்டாள்தான் இப்படி ஒரு உத்தரவைப் போடுவான்" என்றும் சொல்லிவிட்டார். இதைச் சக அதிகாரிகளில் யாரோ லிங்கனுக்குப் போய்ச் சொன்னார்கள். லிங்கன் கோபப்படவில்லை. "ஸ்டாண்டன் அப்படிச் சொன்னார் என்றால் அது சரியாகத்தான் இருக்கும்" என்றார். ஸ்டான்டனைச் சென்று நேரில் சந்தித்தார்.

ஸ்டான்டன் அது ஏன் தவறென்று விளக்கினார். லிங்கன் தம் ஆணையை விலக்கிக்கொண்டார்.

சரியாக நடந்துகொள்ள முயற்சி செய்யும் மனிதர்கள் இப்படித்தான் இருப்பார்கள்.

# மருத்துவமனை, மலர்க் கண்காட்சி, மாட்டுப்பண்ணை

## செரீனாவின் மர்மச் சுவடுகள்

தற்போது தமிழக பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் செரீனாவை விடுதலை செய்ய பலர் இரவு பகலாக முயற்சித்து வருகிறார்கள். ஆனால் அது எளிதில் சாத்தியமாகக் கூடிய விடயம் அல்ல. ஆனால் அவரது விவகாரத்தில் பல்வேறு தொடர்புகள் குறித்து கோர்வையில்லாமல் தொங்கல் தொங்கலாய் செய்திகள் மட்டும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் சென்னையில் உள்ள பிரபல மருத்துவமனையில் இரகசியமாய் 'அட்மிட்' ஆகியிருக்கிறார் செரீனா.

ஒரு நாள் முழுவதும் அங்கேயே தங்க வைத்து 'ட்ரீட்மென்ட்' கொடுத்து 'டிஸ்சார்ஜ்' ஆகியிருக்கிறார். முக்கியஸ்தர்கள் சிலருடன் நெருங்கிய தொடர்புள்ள டாக்டர் ஒருவர்தான் செரீனாவுக்கு சிகிச்சை அளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. எதற்காக செரீனா இங்கே அனுமதிக்கப்பட்டார் என்பது குறித்து பல்வேறு வதந்திகள் உலாவுகின்றன.

செரீனாவின் வலையில் சிக்கியிருக்கும் வி.ஐ.பி.க்களின் உறவினர்களுக்கு இந்த 'ட்ரீட்மென்ட்' விவகாரம் தெரிந்ததும் "நடந்தது நடந்ததாக இருக்கட்டும். எங்கேயாவது ஓடிப் போய்விடு" என்று மிரட்டியிருக்கிறார்கள். இந்த மிரட்டல்கள் செரீனாவை ரொம்பவும் மிரளச் செய்திருக்கிறது. ஒரு கட்டத்தில் சென்னையை விட்டு வெளியேறிச் செல்ல செரீனா யோசித்திருக்கிறார். ஆனால் இவரிடம் சுவை கண்ட வி.ஐ.பிக்களோ தங்கள் பராக்கிரமங்களை எடுத்துச் சொல்லி அவரது முடிவை மாற்றியிருக்கிறார்கள்.

இதன் பின்னர் கடந்த ஏப்ரலில் செரீனாவின் தோழி பிரமிக்காவின் திருமணம் பெங்களூரில் நடந்திருக்கிறது.



இந்த நிகழ்ச்சியில் தனது நண்பர்கள் சிலருடன் கைகோர்த்து நடனமாடிய செய்தி கசிந்ததும் செரீனா விஷயத்தில் மீண்டும் சூடு பிடித்தது.

இதைப் பற்றி எல்லாம் அலட்டிக் கொள்ளாதவர்கள் ஊட்டியில் நடந்த ஃபளவர் ஷோக்களுக்கெல்லாம் செரீனாவை கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். பீகாரில் உள்ள மாட்டுப்பண்ணை, அங்குள்ள ஹைடெக் கெஸ்ட் ஹவுஸ் என்று பல இடங்களில் வி.ஐ.பி.க்களின் அனுசரணையுடன் செரீனாவுக்கு இராஜ மரியாதை வழங்கப்பட்டதாக இப்போது தகவல்கள் வருகின்றன.

இந்த உபசரிப்புக்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டே வேறு மாநில முக்கிய புள்ளிகளுடனும் பிரபல தொழிலதிபர்களுடனும் நட்பு வளர்த்துக்கொண்டார் செரீனா.

ஊட்டியில் ஒரு டீ எஸ்டேட் சொந்தக்காரர், பொள்ளாச்சியில் ஒரு தொழிலதிபர், சென்னையில் ஒரு கார் கம்பனி மனேஜர் என்று செரீனாவின் நட்பு வட்டாரம் நீள்கிறது. இவர்கள் தவிர செரீனாவுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ஒருவர் அவரைத் தேடி அடிக்கடி நிலங்கரை பங்களாவுக்கு வந்து போனதாகவும் தகவல். இந்த டாக்டரின் வரவை விரும்பாத சில வி.ஐ.பிக்கள் பல கோடி செலவில் செரீனாவுக்கு புதிய பங்களா ஒன்றை வாங்கிக் கொடுத்து அதில் அவரைக் குடியமர்த்தும் முயற்சிகள் நடக்கும்போதுதான் அவர் கஞ்சா வழக்கில் சிக்கினார். கைது செய்யப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் கூட 37 இலட்சம் ரூபா விலையில் வத்தளக்குண்டுப் பகுதியில் தென்னந்தோப்பு ஒன்றை வாங்க செரீனா பேரம் பேசியிருக்கிறார். இதற்கான பணத்தைக் கொண்டுவரச் சென்றபோதுதான் செரீனாவைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த அளவு பணம் செரீனாவுக்கு ஒரு நபரிடம் இருந்து கிடைத்திருக்க வாய்ப்பு இல்லை என்பதால், அவர் தனது வலையில் மேலும் பல முக்கிய புள்ளிகளை வைத்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கிறார்கள்.

இவர் இப்படியெல்லாம் சம்பாதித்ததைக் கேள்விப்பட்டு பல நடிகைகளும் அவர்களது தாய்க்குலங்களும் கடும் வயிற்றெரிச்சலில் இருக்கிறார்கள். "அந்தப் பெண்ணால் மட்டும் எப்படி முடிந்தது". இதுதான் சென்னை நடிகை வட்டாரங்களின் லேட்டர்ஸ்ட் வியப்பு. ■

## கட்டார் இளவரசருக்கு கல்தா

கட்டார் மன்னர் தனது மூத்த மகனை இளவரசர் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். அந்த இடத்திற்கு இளைய மகனை நியமிக்க யோசித்திருக்கிறார்.

மூத்த மகன் தந்தையிடம் கூடுதல் அதிகாரங்கள் கேட்டதுதான் பிரச்சினை. பல விஷயங்களை நிர்வகிக்க அனுமதிக்க வேண்டும், அத்தோடு நிதித்துறையில் தனக்கு முக்கிய அதிகாரங்கள் கிடைக்க வேண்டும் என்றெல்லாம், கண்டிஷன் போட்டிருக்கிறார் இளவரசர். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் மூத்த மகனுக்கு கல்தா கொடுத்துவிட்டு இளையவரை நியமிக்கப் போகிறார்.

தற்போதைய கட்டார் மன்னர் அவரது தந்தை வெளிநாடு சென்றிருந்தபோது விமான நிலையத்தை மூடி தந்தையை நாட்டுக்குள் வர விடாமல் தடுத்து சில வருடங்களுக்கு முன்னர்தான் ஆட்சியை கைப்பற்றினார். கூடுதல் அதிகாரங்களை இளவரசருக்கு கொடுத்தால் தான் தனது தந்தைக்குச் செய்த அதே காரியத்தை தனக்கும் செய்துவிடுவார்கள் என்று மன்னர் பயப்படுவதாக டோகா செய்திகள் கூறுகின்றன. ■

## இடி அமீனின் சாவில் கவலைப்படும் பழங்குடியினர்

இடி அமீன் இறந்துவிட்டதாக அறிவிப்பு வருகிறது. பின்னர் சிறிது நேரத்தில் 'இல்லை, இல்லை உயிரோடுதான் இருக்கிறார்' என்று மற்றொரு தகவல் வருகிறது. இந்த சர்வாதிகாரியின் மரணம் குறித்து



யாருக்கும் துக்கமில்லாத ஒரு எதிர்பார்ப்பு.

உயர் இரத்த அழுத்தமும், நீரிழிவு நோயும் சேர்ந்து இடி அமீனை மாதக் கணக்கில் மரணப் படுக்கையில் வைத்திருக்கிறது. ரியாத் மருத்துவமனை அதிகாரிகள் தங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்துவிட்டு இனிமேல் இடி அமீனின் இறுதி மூச்சுப் பிரியும் நேரத்திற்காகக் காத்திருக்கிறார்கள்.

உகண்டாவின் இடி அமீன் விட்டுச் சென்ற கொடூரச் சுவடுகள் இன்னும் மறையாமல் இருக்க, "இத்தனையையும் செய்துவிட்டு எந்தத் தண்டனையும் அநுபவிக்காமல் சாகிறானே" என்ற கவலைதான் அந்த நாட்டு மக்களின் பெரும்பாலானவர்களிடம் எஞ்சியிருக்கிறது.

காக்வா என்ற இடி அமீனின் பூர்வீகப் பழங்குடி மக்கள் மத்தியில் மட்டும் இவரது மறைவு குறித்து கொஞ்சம் கவலையும், அனுதாபமும் இருக்கிறது.

இடி அமீனின் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்கள் மட்டுமன்றி தனது மெய்ப்பாதுகாவலர் முதல் சமையற்காரர் வரை முக்கிய பொறுப்புக்கள் அத்தனையையும் இந்த காக்வா இனத்தவருக்குத்தான் கொடுத்திருந்தார். இடி அமீனின் ஆட்சியில் உகண்டா இராணுவத்தின் மூன்றில் இரண்டு பகுதியினர் இந்தப் பழங்குடியினத்தவர். தவிரவும் ஆட்களைக் கொல்வதற்கென்றே இடி அமீனால் நியமிக்கப்பட்ட 11 ஆயிரம் பேர் கொண்ட தேசிய ஆராய்ச்சிப் படை என்ற தனிப் படைப் பிரிவில் மொத்தமும் இந்த இனத்தவர்தான். இவர்களுக்கு யாரை வேண்டுமானாலும் கேள்வி கேட்காமல் கொல்லும் அதிகாரம் இருந்தது.

இந்தப் படைப் பிரிவுக்கு அநியாயச் சம்பளம் கொடுத்தால் நாடு எங்கே மிஞ்சப் போகிறது என்ற கேள்வி எழுந்தபோதுதான் "இறைவன் தன் கனவில் வந்து ஆசிய நாட்டவரை வெளியேற்றினால் உகண்டாவுக்கு சுபீட்சம் கிடைக்கும்" என்று கூறியதாகச் சொல்லி அத்தனை ஆசியர்களையும் வெளியேற்றினார்.

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக கிறுக்குத்தனம் அதிகரித்து நாட்டையே குட்டிச்சுவராக்கிவிட்டு லிபியாவுக்குத் தப்பிச் சென்று அங்கிருந்து சவுதியில் அடைக்கலம் தேடிக்கொண்ட இடி அமீன் சாகப் போகும் செய்தி அவரது காக்வா இனத்தவர்களுக்கு மட்டும் கவலையாய் இருக்கிறது. ■

## பழிதீர்த்தது தென்னாபிரிக்கா

நெட் வெஸ்ட் கிண்ணத்தைத் தம்மிடமிருந்து பறித்துக்கொண்டதற்காக முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே பழி தீர்த்துக்கொண்டது தென்னாபிரிக்க அணி.


இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் லண்டனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்சாலும் 92 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா.


இனிங்ஸ் தோல்வியிலிருந்து தப்புவதற்காக 509 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கடினமான நிலை இங்கிலாந்து அணிக்கு ஏற்பட்டது. 417 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இங்கிலாந்து அணிக்காகச் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடிய அன்ரூபிலின்டோ.ஃப் 142 ஓட்டங்களைப் பெற்றார். சகலதுறை ஆட்டக்காரரான இவரின் முதலாவது டெஸ்ட் சென்ச்சரி இது.

இம்முறை இந்தப் போட்டியில் 'மேன் ஒ.ஃப் தி மெச்' என்ற சொல்லுக்கு பதிலாக 'மேன்ஸ் ஒ.ஃப் தி மெச்' சாக மாறியது. ஆட்ட நாயகர்களாக இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய மகாயா நிட்டினி ஒருவர். 259 ஓட்டங்களைப் பெற்ற கிரேம் ஸ்மித் மற்றவர்.

ஸ்கோர் விபரம் : தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 682 ஓட்டங்கள். இங்கிலாந்து முதல் இனிங்சில் 173 ஓட்டங்கள். இரண்டாவது இனிங்சில் 417.





# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

## 24

ஈரான் நாட்டின் மன்னர் ஷாவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த அந் நாட்டு மக்கள், பிரான்ஸ் நாட்டில் பல ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் செய்து வந்த இஸ்லாமிய மதப் பெரியார் ஆயதுல்லா கொமெய்னியை அழைத்து வந்து நாட்டின் ஆட்சியை ஒப்படைத்தனர். நாடு பழையபடி இஸ்லாமிய நெறிப் படி செயற்பட ஆரம்பித்தது. இடையில் வந்து புகுந்த நவநாகரிக வாழ்க்கை முறைகள் அகற்றப்பட்டன.

இந்த வரலாற்றை இச் சம்பவங்கள் நடப்பதற்கு ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னரே நொஸ்ரடாமஸ் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆருடங்கள்

நொஸ்ரடாமஸ் தனது முதலாம் தொகுதியின் 70வது நான்கு வரிப் பாடல்களிலும் ஆயதுல்லா கொமெய்னியின் வரலாற்றை எடுத்துரைத்திருக்கிறார்.

"பெருமழை, பஞ்சம் மற்றும் யுத்த முஸ்தீபுகள் ஓய்ந்து விடவில்லை. மன்னர் பெரிதாக நம்பியிருந்தவர்கள் துரோகமிழைப்பர். இச் சந்தர்ப்பத்தில் முடிவடைந்தது பிரான்ஸில் தொடரும். கெட்ட சகுனம் ஒருவருடைய முடிவுக்குக் காரணமாகும்."

மேற்படி கூறப்பட்டவை நொஸ்ரடாமஸின் முதலாம் தொகுதியின் 70வது நான்கு வரிப் பாடலிலாகும்.

அவருடைய இரண்டாம் தொகுப்பின் 28ம் இலக்க நான்கு வரிப் பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

"தலைமை ஏற்க வருபவர் அல்லா என்ற புனித வார்த்தையின் உச்சரிப்புடன் இணக்கமுடைய பெயரைக் கொண்டவர். ஆட்சியிலிருந்த மன்னரையும் அரசியலையும் வெளியேற்றவும் அரசர் இறுதியை எய்தவும் காரணமாவார். துன்பப்பட்டுழன்ற மக்களுக்கு விமோசனம் அளிப்பார்."

நொஸ்ரடாமஸ் ஆயதுல்லா கொமெய்னி அவர்களைப் பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறியிருக்கிறார்.

ஈரான் நாட்டு மன்னரைப் பற்றி நொஸ்ரடாமஸ் தனது இரண்டாவது தொகுப்பின் 2வது நாலு வரிப் பாடல்களில் கூறியுள்ளவற்றை இனிப் பார்ப்போம்.

"நீலச் சட்டம் வெள்ளைச் சட்டத்தை ஒழித்துக்கட்ட முயற்சிக்கும். அத் தொல்லைகளை பிரான்ஸ் தீர்த்து நன்மை புரியும். நாட்டை விட்டகன்று மரணமடைந்தவர் அதுவரை நம்பிக்கையுடன் பிடித்திருந்த மரக்கொப்பு உடைந்து விடும். நிலைமைகள் தனக்கு எதிராகத் திசை மாறி வருவதை மன்னர் உணர முடியவில்லை."

இவ் வார்த்தைகளில் நீலம் மற்றும் வெள்ளைச் சட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. வெள்ளை என்பது ஆயதுல்லா கொமெய்னி அவர்களுடைய பெரிய வெள்ளைத் தலைப்பாகையைக் குறிக்கிறது. நீலச் சட்டம் மன்னர் ஷாவின் நிலைப்பாட்டைச் சித்திரிக்கிறது. மன்னர் ஷா பெரும்பாலும் தனது அரச வைபவங்களிலெல்லாம் நீல நிறத்தையே விரும்பி அலங்கரிப்பார்.

**பிரமிக்க வைப்பது**
**ராஜகுமாரன்**

ஆயதுல்லா கொமெய்னிக்கும் மன்னர் ஷாவுக்குமிடையில் நடைபெற்று வந்த மோதல்கள் வலுவடைந்ததனையே நொஸ்ரடாமஸ் தனது வாக்கியங்களில் குறிப்பிடுகிறார். மன்னர் ஷா இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை பரப்பும் சகல மதப் பெரியார்களையும் பயங்கரமாகத் தாக்கத் தலைப்பட்டார். இதனால் வெறுப்புற்ற ஆயதுல்லா கொமெய்னி நாட்டை விட்டு வெளியேறி மன்னர் ஷாவினுடைய கொடுங்கோன்மையாட்சியிலிருந்து மக்களை விடுவிக்க செயலாற்றலானார். அவருடைய செயற்பாடுகளுக்கு பிரான்ஸ் நாட்டு அரசு முழு ஆதரவு அளித்தது.

தொலை தூரத்திலிருந்தபடி தன்னுடைய ஆட்சிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய செயற் திட்டங்கள் வகுத்து, அதனால் தனக்கு எதிரான புரட்சி எதுவும் நடக்கக் கூடும் என்பதனை மன்னர் அறிந்திருக்கவில்லை. நாடும் நாட்டு மக்களும் தன்னுடைய மேலாதிக்கத்துக்குள்ளேயே என்றும் இருக்கும் என்று அவர் பெரிதும் நம்பியிருந்தார்.

ஈரான் நாட்டில் தன்னால் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் பெரும்பாலான மக்களின் மனதைக் கவர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்றே மன்னர் நம்பியிருந்தார். மக்களின் போக்கை அறிந்து தனக்கு தகவல்கள் திரட்டித் தரக்கூடிய நம்பிக்கையானவர்கள் என நம்பப்பட்டவர்கள் நம்பிக்கையுடன் செயற்படவில்லை. இது துரதிர்ஷ்டவசமானதே. அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களே நாட்டில் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி மன்னருடைய ஆட்சிக்குப் பெரும் தீங்கினை விளைவித்தனர்.



இறுதியாக மன்னர் ஷா தன்னுடைய நிலையை உணர்ந்தார். தான் நம்பிக்கை வைத்திருந்த முக்கிய மானவர்கள் தன்னை வஞ்சித்துவிட்டனர் என்பதை அறிந்து மனவேதனை அடைந்து நோயாளியானார். குடும்பத்தாருடன் வெளியேறி அமெரிக்கா சென்றார். அங்கேயே அவருடைய மரணம் சம்பவித்தது.

இச் சம்பவங்களை எல்லாம் தெளிவாக தனது ஆருடங்களில் நொஸ்ரடாமஸ் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இதே போன்று எகிப்து நாட்டின் அதிபராக விளங்கிய அன்வர் சதாத், அவருடைய படைவீரர்கள் போன்று சீருடை அணிந்தவர்களால் ஒரு அரச விழா அணிவகுப்பின் போது சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையும் தெளிவாகக் கூறியிருக்கிறார். அதிபர் அன்வர் சதாத்தின் கோர முடிவைப் பற்றி நொஸ்ரடாமஸ் கூறிய கருத்துக்களை அடுத்துப் பார்ப்போம்.

(பிரமிப்புகள் தொடரும்)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

அன்பின் மச்சான் கா.பூ. ஏதோ நான்தான் உந்த வெளிநாட்டுத் தமிழ் வெப்புகளில வாறதுகளச் சொல்லி உன்ர மண்டையப் பழுதாக்கிறனெண்டு கடிதம் எழுதியிருந்தாய். உள்ளதச் சொல்லுறன் மச்சான். உன்ர மண்டையில பழுதாக்கிறதுக்கு ஒண்டும் இல்லை....

மச்சான் கா.பூ, நான் அறியிறதுகளப் பாத்தால் உங்கத்தய ஆக்களுக்கு எட்ட முன்னம் இங்கத்தய ஆக்களுக்குச் செய்தி வந்திடுதுபோல கிடக்கு. பேப்பருகளோட உழலுறனியெண்டபடியால உன்னட்டக் கேட்டால் உள்ளதை அறியலாமெண்டு நம்பிறன். ஏன் மச்சான், உனக்கு நேரமிருக்கேக்க சட்டுக்கு வாவன். நேர நேர பேசிக்கொள்ளலாம்...

இங்க, திரும்பவும் சொல்லிப்போட்டன். இது பிறைவேற் கடிதம். ஈமெயிலில வந்திட்டுதெண்டதுக்காக எல்லாருக்கும் காட்ட நான் இளிச்சவாயனில்லை. நீங்கள், பாக்காயுதைங்கோ எண்டு சொன்னதத்தான் தேடிப் பாக்கிற பரவணியெண்டு எனக்கு நல்லாத் தெரியும். எங்கட கலியாண வீடுகளில, திரை மறைச்சு, தம்பதிகள் பால் பழம் தீத்திறத எட்டிப்பாக்காத சுத்தமான பேர்வழிகள் யாரிருக்கிறியள்? உது தெரிஞ்சுதான் என்ர பிறெண்ட்டோட சட்டில பேசப் போறன். இங்க நான் கொம்பியூட்டரில தட்ட, அவன் வாசிப்பான். அவன் தட்ட நான் வாசிப்பன். நீங்கள் இதுக்க மூக்கை நுழைக்க ஏலாது.

''... ஹாய்... மச்சான் .... கீரி!''

''ஹாய், கே.பி. வட்... நியூஸ்????''

''நியூஸன்ஸ் நியூஸ்!''

''நியூ சென்ஸ் இல்லாத நியூசெல்லாம் நியூஸன்ஸாத்தான் இருக்கும்.- ஜஸ்ட் ஜோக்கிங். சொல்லு, என்ன நடக்குது? என்னவாம் புறப்போசல்?''

''அம்மா ஏதோ ஆசைப்படுறாதான். நாலைஞ்சு படங்கள் அனுப்பியிருந்தா. எனக்கெண்டால் எதுவும் நல்லமாதிரிப் படேல்லை. உதுகளப் பாத்து மண்டையுடைக்கிறத விடப் பேசாமல் காதலிச்சிடலாம் போல கிடக்கு. சீதனம் தந்து காதலிக்க யாருமிருந்தால் சொல்லு.''

''நான் உன்ர கலியாணப் புறப்போஸலச் சொல்லேல்லை. உதுக்கெல்லாம் வீணாய் காதலிக்கிறனெண்டு றிஸ்க் எடுத்து சலூன்காரனின்ர பிழைப்பைக் கெடுக்காத. நான் கேட்ட புறப்போசல் வேற.''

''நீ, நாடு திரும்ப ஏலாத கேஸ். உனக்கெல்லாம் இந்த மண்ணிலயிருந்து பெண் தர ஏலாது. உங்கயே பாத்து ஏதும் வெள்ளைத் தோலக் கட்டிக்கொள்.''

''அடேய் மாங்காய் மடையா, நான் எனக்குப் பொண்ணு பாக்க உன்னைக் கேப்பனே! நான் கேட்ட புறப்போசல் எங்கட ரணில் தலைவருக்கு அனுப்பியிருக்கிற புறப்போசலப் பற்றி...''

''ஏன் அவருக்குக் கலியாணமாகி, பிள்ளைகள் சோதினையும் எழுதியாச்சு. நீ எங்கயோ வெள்ளி பாத்துக்கொண்டு நிண்டிட்டு, இப்பவந்து புறப்போசல் கேக்கிறாய்?''

''உன்னை மாங்காய் மடையனெண்டது தப்பு. தேங்காய் மடையன்போல மண்டை கனத்திருக்கேயொழிய, உள்ள ஒண்டுமில்லை! மச்சான். ரணிலின்ர புறப்போசல் என்னமாதிரியெண்டு கேட்டால்...?''

''ரணிலுக்கும்- பிந்தித்தான் - ஒருபடியாக் கலியாணம் நடந்திட்டுது. இனியெதுக்குப் புறப்போஸல்?''

''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நீ வேலை தேடேக்கேயே அப்ளிகேஷன் ஃபோமில செக்ஸ் எண்ட இடத்தில யெஸ் எண்டு எழுதின கேஸ். நான் உந்தக் கலியாணப் புறப்போஸல்களையொண்டும் கேக்கேல்லை. இப்ப பேச்சுவார்த்தையத் துடங்கிறதுக்கு எங்கட பிரதமர் ரணிலின்ர புறப்போஸல் என்னமாதிரியெண்டதத்தான் உன்னட்டை அபிப்பிராயம் கேட்டனான்.''

''அடடடட, இப்ப விளங்குது. அதுவோ மச்சான். அது சூப்பர்!''

''டேய், அதில நிறையக் குறைபாடிருக்கிறதாவெல்லே புலிகள் சொல்லுறாங்கள்?''

''அப்பிடியா, அப்ப அது உதவாததாய்த்தான் இருக்கும். தூக்கியெறிவங்கள் உடன.''

''மடையா, அதில ஏதோ திருத்தங்கள் செய்யப்போகினமாமே?''

''திருத்தலாமெண்டிறாங்களோ? அப்ப கொஞ்சம் பெட்டர் போல. எண்டாலும் அரசாங்கம் எழுதிவைச்சபடி நாங்கள் நடக்கேலுமே? திருத்தினாத்தான் பேசலாம்.''

''அதுசரி, இப்ப அவைக்கு அனுப்பியிருக்கிற புறப்போஸல் எது? பேப்பரில வந்த புறப்போஸலா?''

''அதுதான், வேற எது?''

''அப்ப ஜனாதிபதிக்கு அனுப்பினது?''

''அதத்தானே ஜனாதிபதிக்கும் அனுப்பியிருப்பாங்கள்.''

''அது வேற இது வேறயாமே..?''

''அப்பிடியாமோ? அப்ப ஜனாதிபதி தான் எதையும் மாத்தியிருப்பா!''

''மடையா, மாத்தி என்ன செய்யிறது? ரணில் அனுப்புறதுதானே புலிகளுக்குப் போய்ச் சேரும்?''

''இங்கார். என்னை அடிக்கடி மடையனெண்டாத. இப்ப என்ன? எதை யார் எவருக்கனுப்பினால் உனக்கென்ன. சும்மா கம்மெண்டிரு. கடைசியாப் பெடியள் எது எப்பிடியெண்டு விலாவாரியாச் சொல்லுவங்கள்தானே. ஏன் அருமந்த சட்டில வம்பளக்கிறாய். டீவியில மெகா துடங்கிட்டுது. பிறகு வந்து பேசிறன்.''

அவன் மடையன் கண்டியளோ. நாட்டு நடப்பு சுத்தமாத் தெரியாது. என்னட்டப் புதினம் கேட்டிட்டு அங்க கதையளக்கிறது. யூ டோண்ட் கெயார் ஹிம். ஓ.கே! ஸீ யூ!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

10.08.2003 தொடங்கி 16.08.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

**கர்க்கடகம்**- சூரியன், வெள்ளி, **சிங்கம்**- புதன், வியாழன், **விருட்சிகம்** - கேது, **கும்பம்** - செவ்வாய், **இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி, சந்திரன் தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை மந்தம், வீண் சிரமம், பிரயாண மிகுதி, இனசன வெறுப்பு, உறவினர் கலக்கம், பெரியோர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, பணவரவு, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், பிரயாண நன்மை, முயற்சி பலிதம், உத்தியோகச் சிறப்பு, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மந்தம், வீண் குறை கேட்டல், பெரியோர் பகை, சுபகாரிய நன்மை, உத்தியோகச் சிறப்பு, புதிய இடமாற்றம், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மேன்மை, பொருள் பேறு, உயர்ந்த நிலை, கௌரவம், மனக்குறை நீங்கும், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், பிரயாச மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் மந்தம், தேக சுகம் பாதிப்பு, செலவு மிகுதி, குடும்பச் சிக்கல், அன்னியரால் தொல்லை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி கிடைத்தல், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் நிலை மாற்றம், புதிய தொழில் முயற்சி, பொருள் வரவு, காரியானுகூலம், அன்னியர் சகவாசம், உத்தியோக நன்மை, வெளியிடவாசம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் பேறு, பணவரவு, காரியானுகூலம், உறவினர் பகை, முயற்சி மேன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**விருட்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நிலை மாற்றம், பெரியோர் உதவி, பணவரவு, கடன் தொல்லை, வீண் குறை கேட்டல், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், கூடிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் நிலை நன்மை, பணவரவு, பொருள் சேரல், பூமியால் நன்மை, அன்னியர் சகவாசம், உத்தியோக முயற்சி, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் சித்தி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் சிறப்பு, பணக் கஷ்டம், செலவு மிகுதி, உயர்ந்த நட்பு, பெரியோர் சகவாசம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி முன்னேற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன உயர்வு, பெரியோர் உதவி, கௌரவம், உத்தியோகச் சிறப்பு, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி கிடைத்தல், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் சிக்கல், மனக்கவலை, பணவரவு தடை, இனசன நன்மை, கௌரவம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**


SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# எழுச்சி






பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வர்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


இங்கிலாந்தின் ஹெம்ஷெயர் பிராந்திய அணிக்கு விளையாடுவதற்காக இலங்கை அணியின் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த பிராந்திய அணியின் வெளிநாட்டு வீரராக இது வரை காலமும் பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரமே விளையாடி வந்தார். இந்த வருடமும் அவர்தான் ஆடுவதாக இருந்தது. மார்ச் மாதம் வரை ஒரு சில போட்டிகளில் கலந்து கொண்ட வசீம் அக்ரம் பின்னர் தனது நீரிழிவு நோய் அதிகரித்ததால் இடை நடுவில் பாகிஸ்தான் திரும்பி விட்டார். வசீம் அக்ரம் இந்த வருடம் முழுவதும் விளையாட ஒப்பந்தமாகியிருந்தார். ஆனால் அவர் இடையில் சென்றதால் அந்த இடத்திற்கு சமிந்த வாஸை அழைத்திருக்கிறார்கள். பொதுவாக ஹெம்ஷெயர் அணி உலகின் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவரையே தமது வெளிநாட்டு வீரராக இணைத்துக் கொள்வது வழக்கம். இப்போது இந்த வாய்ப்பு சமிந்தவாஸுக்குக் கிடைத்திருப்பது அவரது நல்ல முன்னேற்றத்தைக் காட்டுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

29 வயதான வாஸ் 68 டெஸ்ட் போட்டிகளில் 282 விக்கெட்டுகளையும் 227 ஒரு நாள் போட்டிகளில் 282 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருக்கிறார்.

இங்கிலாந்தில் நடந்து முடிந்த நெட்வெஸ்ட் முக்கோண கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வெற்றி பெற்றதையடுத்து மிகுந்த உற்சாகத்திலிருக்கிறது புதிய அணி.

உலகக் கிண்ணப் போட்டிகளின் முடிவோடு இங்கிலாந்து அணியில் ஏகப்பட்ட புரட்சிகர மாற்றங்கள். இதுவரை காலமும் பிராந்திய அணிகளில் சிறப்பாக விளையாடி வந்த இளம் வீரர்கள் அணிக்குள் உள்வாங்கப்பட்டனர். ஏற்கெனவே சிக்கல்களில் இருந்த நசார் ஹுசைன் கெப்டன் பொறுப்பில் இருந்து இராஜினாமா செய்ததோடு அந்த இடத்திற்கு அதிக அநுபவம் இல்லாத மைக்கல் வோகன் நியமிக்கப்பட்டார். அவர் தலைமை ஏற்ற முதல் சுற்றுத்தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றமை மைக்கல் வோகன் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது.

நெட்வெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு தென்னாபிரிக்க அணியின் மோசமான ஆட்டம்தான் முதல் காரணம் என்று சொல்லப்பட்டாலும் இங்கிலாந்து வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. போட்டித் தொடரில் கலந்துகொண்ட மூன்றாவது அணியான சிம்பாப்வேயின் தரத்திற்குக் கூட இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணி விளையாடவில்லை என்பது இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வசதியாகப் போய்விட்டது.

இங்கே படத்தில் இருப்பது கெப்டன் வோகனும், ஃபிலிண்டோஃப்பும். வேகப் பந்து வீச்சாளர் ஃபிலிண்டோஃப்பிற்கும் நசார் ஹுசைனுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை என்று கூறப்படுகிறது. இப்போது புதிய கெப்டனுடன் ராசியாகியிருக்கிறார் ஃபிளிண்டோஃப். இந்த கூட்டு இங்கிலாந்துக்கு மேலும் வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்குமா? அடுத்து வரும் போட்டிகளில்தான் தெரியும்.

## அங்கீகாரம்




**ஒரு கொசுறுத் தகவல் :**
இங்கிலாந்தின் கென்ட் பிராந்திய அணிக்காக விளையாடும் முத்தையா முரளிதரன் கடந்த வாரம் தனது முதலாவது போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாகப் பந்து வீசியிருக்கிறார்.

## டெனிஸ் அழகு!

"யாரும் என்னைச் சுற்றி இருந்து அழுத்தம் கொடுத்து அட்வைஸ் பண்ணுவதை நான் விரும்பவில்லை. எதை அடைய வேண்டும்? எப்படி அடைய வேண்டும் என்று எனக்குத் தெரியும். எனது இலக்கு நம்பர் 1" என்று நம்பிக்கை தொனிக்கும் குரலில் கூறுகிறார் ரஷ்ய டெனிஸ் வீராங்கனை மரியா ஷரோபோவா.

சர்வதேச டெனிஸ் அரங்கில் முதலிடத்தைப் பெறுவார் என்று நம்பக் கூடிய ரஷ்ய டெனிஸ் அழகி ஷரோபோவா, போட்டிகளில் விளையாடிக் கிடைக்கும் பணத்தை விட பல கோடி அதிகமாக விளம்பரங்களுக்கு போஸ் கொடுத்துச் சம்பாதித்துவிடுகிறார். பிரபல ஆடை உற்பத்தி நிறுவனங்கள், டெனிஸ் போல் உற்பத்தி நிறுவனங்கள், டெப்லோயிட் பத்திரிகைகள் என ஏராளமானோர் விளம்பரங்களுக்காக இந்த மரியாவின் பின்னால் அலைகிறார்கள். டெனிஸில் நம்பர் 1ஐ எட்டிப் பிடிப்பது எப்படிப் போனாலும் தனது கட்டுடலால் ஏராளமாகச் சம்பாதித்துவிட்டார் இவர்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

புதுக் குடியிருப்பு-முரசுமோட்டையைச் சேர்ந்த திரு.திருமதி யோகேஸ்வரன் - சுதர்ஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வி கார்னிகா தனது முதலாவது பிறந்த நாளை 07.08.2003 அன்று லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

கார்னிகாக் குட்டியை அண்ணா, அப்பா, அம்மா, புதுக்குடியிருப்பில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா (செல்லையா, வள்ளியம்மை), கனிலில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா (செல்வராசா, இராசலெட்சுமி), லண்டனில் வசிக்கும் பெரியமாமா (சுதன்), சின்னமாமா (சுகு), அன்ரி (சுஜா),



**செல்வப் புதல்வி கார்னிகா 07.08.2003**

ஜெயந்தன் சித்தப்பா, கணேஷ் பெரியப்பா, அல்லி அத்தை, புதுக்குடியிருப்பில் வசிக்கும் தர்மலிங்கம் பெரியப்பா, காசிப்பிள்ளைப் பெரியப்பா, சிவசுந்தரம் பெரியப்பா, நல்லையா பெரியப்பா, லக்சுமி அத்தை, கேதாரப்காமணிப் பெரியப்பா, சரஸ்வதி அத்தை, பரமேஸ்வரி அத்தை, மாமாமார், பெரியம்மாமார் குடும்பத்தினர், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல விநாயகர் அருளால் பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : பெரியமாமா (சுதன்), சின்னமாமா (சுகு)



இப்பத்திரிகை கொழும்பு-௦௦, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்தாபனத்தால் மருதானையில் உள்ள பீடி.சி. சகீர் அச்சகத்தில் ஆக. 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.